# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 30 வெள்ளிக்கிழமை (16.09.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 294






14 அவசரகாலச் சட்ட நீக்கம் ஓர் ஏமாற்று





21 கச்சதீவை மீட்கும் வரை போராட்டம்





25 நூறாவது ஆட்டம் இன்று


# கூட்டமைப்பு - அரசு பேச்சு இன்று மீண்டும் ஆரம்பம்

## ஜனாதிபதி – சம்பந்தன் சந்திப்பை அடுத்து ஆரம்பம்

கொழும்பு, செப்ரெம்பர் 16

**பத்துச் சுற்றுப் பேச்சுக்களுடன் இடை நடுவில் முறிந்துபோன அரசு -கூட்டமைப்பு இடையிலான பேச்சு இன்று மீண்டும் ஆரம்பமாக உள்ளது. அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான அரச குழுவினரும் நாடாளுமன்றத் தலைவர் ஆர்.சம்பந்தன் தலைமையிலான குழுவினரும் பேச்சுக்களில் ஈடுபடுவர்.**

இந்த மாத ஆரம்பத்தில் கூட்டமைப்புத் தலைவர் ஆர்.சம்பந்தனை தனிப்பட அழைத்து ஜனாதிபதி பேசியதன் அடிப்படையில் இன்றைய பேச்சுக்கு இரு தரப்பினரும் இணங்கினர் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விவரங்கள் குறித்துத் தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை. எனினும் பேச்சுக்களின் போது என்ன விடயங்கள் குறித்து ஆராய்வது என்பது தொடர்பிலும் இணக்கம் காணப்படும் விடயங்களை உடன் நடைமுறைப்படுத்துவது என்றும் இரு தரப்பினரும் இணங்கிக் கொண்டனர் என்று உதயனுக்கு அறியக் கிடைத்தது.

கடந்த ஜனவரி மாதத்தில் ஆரம்பமான அரசு-கூட்டமைப்பு பேச்சுக்கள் 10 சுற்றுக்கள் இடம்பெற்றன. எனினும் அடைவுகள் எவையும் காணப்படவில்லை. இணக்கம் காணப்பட்ட விடயங்களை அரசு நடைமுறைப்படுத்தவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டி வந்தது.

இறுதியில் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி நடைபெற்ற பேச்சுக்களில் கூட்டமைப்பு மூன்று நிபந்தனைகளை முன் வைத்தது. ஆட்சி அதிகாரக் கட்டமைப்பு, மத்திய அரசுக்கும் அதிகாரப் பகிர்வு அலகுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட

பக் 04

## கைதடியில் இளம் பெண்ணை காணவில்லை

கைதடி, செப்.16

கைதடிச் சந்தியிலிருந்து தனது வீடு நோக்கிச் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளம் யுவதி ஒருவர் காணாமல் போன சம்பவம் கைதடியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கைதடியில் இடம்பெற்றுள்ளது.

கைதடி கிழக்கைச் சேர்ந்த செல்வி மனோகரன் வின்சியா (வயது 21) என்ற இளம் பெண்ணே காணாமல் போனவராவார்.

இவர் தனது தாயாருடன் யாழ். நகர் சென்றுவிட்டுக் கைதடிச் சந்தியில் தாயாருடன் பஸ்ஸில் இருந்து இறங்கியதாகவும், தாயார் கடைக்குச் சென்ற வேளை இவர் சைக்கிளில் தனியாக கைதடிச் சந்தியிலிருந்து பெற்றோல் நிலைய வீதியூடாகத் தனது வீட்டுக்குச்சென்று கொண்டிருந்த வேளையிலேயே

பக் 27

## பேச்சுக்கான நிபந்தனைகள் என்ன? விரைவில் மக்களுக்கு விளக்குவோம்

### கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, செப்.16

அரசுடனான பேச்சுகளை மீண்டும் விரைவில் ஆரம்பிப்பதற்கான சாத்தியம் உள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று அறிவித்திருந்தது.

எவ்வாறான நிபந்தனைகளின் அடிப்படையில் மீண்டும் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு இணங்கினோம் என்பதை விரைவில் அறியத்தருவோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் பொருட்டு அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையில் நடைபெற்றுவந்த பேச்சுகள் அண்மையில் முறிவடைந்தன.

10ஆம் சுற்றுப் பேச்சுகள் கடந்த மாதம் 04ஆம் திகதி நடைபெற்றன. இதன்போது இதுவரை நடந்து முடிந்த பேச்சுகளில் எந்தவித முன்னேற்றமுமில்லை. எனவே, நாம் முன்வைக்கும் மூன்று கோரிக்கைகளுக்கு அரசு இரண்டு வாரங்களுக்குள் எழுத்துமூலம் பதிலளிக்க வேண்டும். இல்லையேல் பேச்சுகளைத் தொடர்

பக் 27

## திருமலை பெண்கள் கல்லூரி வளாகத்தில் மனித எச்சங்கள்

### விசாரணைகள் ஆரம்பம்



திருமலை, செப்.16

திருகோணமலை நகரிலுள்ள பிரபல மகளிர் பாடசாலையான மெதடிஸ்த கல்லூரி வளாகத்தில் நேற்றுமாலை மனித எச்சங்கள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த மனித எச்சங்கள் சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் புதையுண்டிருக்கலாம் என்று திருகோணமலை வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி எஸ்.டி. படுகே தெரிவித்துள்ளார்.

குறித்த பெண்கள் கல்லூரியின் வளாகத்தில், குழி

பக் 27

## தமிழில் கெக்கிராவ மாணவன் முதலிடம் முல்லைத்தீவு மாணவன் இரண்டாம் இடம்





கொழும்பு, செப்.16

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று வெளியாகின. இதன் படி மூன்று மாணவர்கள் 195 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

இதன்படி களுத்துறை மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவி ஒஷாதி முதலாம் இடத்தைப் பிடித்துள்ளார். இரண்டாம் இடத்தை தொடங்கொடை மிரிஸ்வத்த மகா வித்தியாலய மாணவி வியங்கி நெத்தி பெற்றுள்ளார்.

பக் 27

## நிலையான அரசியல் தீர்வு அவசியம்

கொழும்பு, செப். 17

இனப்பிரச்சினைக்கு நிலையானதும் காத்திரமானதுமான அரசியல் தீர்வு ஒன்றை எட்ட வேண்டுமாயின் பிரச்சினைக்கான மூலக்காரணிகளை அடையாளம் கண்டு அதற்கான தீர்வுகள் வழங்கப்பட வேண்டும் - என்று இலங்கை மற்றும் மாலைதீவிற்கான பிரிட்டன் தூதரக உயர் அதிகாரி ஜோன் ரான்கீன் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனிலும் ஐரோப்பாவிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் தடை செய்யப்பட்ட இயக்கமாகவே கருதப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனுக்கும் இலங்கைக்கும் இடையில் மிக நெருக்கமான உறவுகள் நிலவி வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வரலாற்றுக் காலம் முதலே இரு நாடுகளும்

பக் 04

## இலங்கை இராஜதந்திரிகளை அடியோடு மாற்றுகிறது அரசு

### அவர்களின் சேவையில் ஜனாதிபதிக்கு அதிருப்தி

கொழும்பு, செப்.16

இலங்கைக்காக வெளிநாடுகளில் பணியாற்றும் இராஜதந்திரிகள் குழாமொன்றை அப்படியே மாற்றிவிட்டு புதிய நியமனங்களை மேற்கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

வெளிநாட்டுச் சேவையிலுள்ள இராஜதந்திரிகள் முக்கியமான விவகாரங்

பக் 27

## அரசியல் தீர்வு குறித்த நிலைப்பாட்டை தெளிவுபடுத்தக் கோருகிறது சர்வதேசம்

கொழும்பு, செப்.16

தமிழர்களுக்கான அரசியல் தீர்வொன்றை வழங்குவது தொடர்பான அரசின் நிலைப்பாடு தீர்க்கமான முறையில் வெளிப்படுத்தப்பட வேண்டுமென்று சர்வதேச சமூகம் வலியுறுத்தியிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தின்போது அரசின் இந்த நிலைப்பாடு அறிவிக்கப்படவேண்டுமென சர்வதேச நாடுகள் சில, அரசை அறிவுறுத்தியிருப்பதாக அரச உயர்மட்ட வட்டாரங்கள் தேற்றுத் தெரிவித்தன.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசியல் தீர்வு தொடர்பிலான தமது அரசின் முக்கியமான யோசனைகளை வெளியிடுவாரெனவும், இந்த மாநாட்டுக்குப் புறப்பட முன்னர் கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அவர் முக்கியமான பேச்சுகளை நடத்துவாரென்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.


வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு

பக் 27

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடி மின்னலுடன் கூடிய வானிலை நிலவக் கூடிய சாத்தியம்.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
398/1, ஆஸ்பத்திரி வீதி. 2221455.
புரட்டாதி 15 2011
பங்குச்சந்தைச்சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,850.93↓
மிலங்கா(MPI) 6,178.48↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1,405.34Mn
பங்குகளின் அளவு(No.) 87.83Mn
வியாபாரம்(No.) 15,797
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
எ.ஏம் பைனான்ஸ் 590.00
றிக்னீஸ் 195.00
கபுகஸ் 68.00
மல்லேஸ் 3.50
செஸ் அக்குரோ 6.30
குறைவு(Top 5 losers) - விலை Rs.
சாம்சன் 145.60
எச்.வி.எ பூட் 59.90
உடப்புசலாவ 36.20
கெ(ீ)ஸ்ற் அனேர்ஸ் 352.00
ஈபி கிரேசி 2500.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# யாழ்.மாவட்டத்தில் ஜோன்.பொஸ்கோ முதலிடம் யாழ்.இந்து, மீசாலை வீரசிங்கம் 2ஆம் இடம்

## புலமைப் பரிசில் முடிவுகள் நேற்றையதினம் வெளியாகின

யாழ்ப்பாணம், செப்.16

கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றைய தினம் வெளியாகின. இதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலத்தைச் சேர்ந்த றமேஸ் நிதூஷிகா என்ற மாணவி 192 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

யாழ்.மாவட்டத்தின் வெட்டுப் புள்ளியாக 151 அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவனான லோகேஸ்வரன் டிலோஜன், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி கனகேஸ்வரன் கவினா ஆகிய இருவரும் தலா 191 புள்ளிகளைப் பெற்று யாழ்.மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவனான பக்தராசா பவதாரகன், புனித ஜோன் பொஸ்கோ மாணவர்களான சூ.துவாரகன், கு.கஜானி ஆகிய மூன்றுபேரும் 190 புள்ளிகளைப் பெற்று யாழ்.மாவட்டத்தில் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளனர் என இணைத் தளத்தில் பெறப்பட்ட முடிவுகளில் இருந்து தெரியவந்தது.

இதுதவிர சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவியான சாய்தா மற்றும் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவியான இரவீந்திரன் மாதங்கி ஆகிய இரண்டு பேரும் 188 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் ஒன்பதாவது இடத்தைப் பிடித்துள்ளனர்.

யாழ்.நகரப் பாடசாலைகள் சிலவற்றில் பெறுபேறுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. அதனடிப்படையில் ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் இருந்து இந்த முறை 217 பேர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றினர். அவர்களில் 113 பேர் 151 புள்ளிகளுக்கு மேல் பெற்றுச் சித்தியடைந்துள்ளனர் என அந்தப் பாடசாலையின் அதிபர் அருட் சகோதரி மரியஜீவந்தி தெரிவித்தார்.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் இருந்து இந்த முறை 260 பேர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றினார். அவர்களில் 111 பேர் சித்தியடைந்துள்ளனர் எனப் பாடசாலை அதிபர் எஸ்.தியாகலிங்கம் தெரிவித்தார்.

யாழ்.சுண்டுக்குழி மகளிர் கல்லூரியில் பரீட்சைக்கு 89 பேர் தோற்றினர். இவர்களில் 23 பேர் சித்தியடைந்துள்ளனர் எனப் பாடசாலை அதிபர் ரி.துசிதரன் தெரிவித்தார்.

இதுதவிர தென்மராட்சிப் பாடசாலை ரீதியில் இதுவரை கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி 85 பேர் மாத்திரமே சித்தியடைந்துள்ளனர் எனவும் கிட்டத்தட்ட 98 வீதமானவர்களின் பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தென்மராட்சி வலய ஆரம்பக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவித் துள்ளார்.

(த-4)

# அக்கறையுடன் படித்ததால் நினைத்ததைவிடச் சாதித்தேன்

யாழ்ப்பாணம், செப்.16

எனக்குக் கஷ்டம் என உணர்ந்த பாடங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் படித்தேன். அத்தோடு பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெறவேண்டும் எனவும் நான் என்னைத் தயார் செய்தேன். இதனால்தான் சாதிக்க முடிந்தது - இவ்வாறு தெரிவித்தார் யாழ்.புனித ஜோன். பொஸ்கோ வித்தியாலய தரம் 5 மாணவி றமேஸ் நிதுஷிகா.

நேற்று வெளியான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின்படி 192 புள்ளிகள் பெற்று யாழ்.மாவட்டத்தில் முதலிடம் பெற்றமை தொடர்பாக உதயனுக்கு வழங்கிய மகிழ்ச்சிச் செய்தியில் மேலும் தெரிவித்ததாவது:

எனது வீட்டில் அம்மா, அப்பா, தம்பி என நாங்கள் நான்கு பேர். அப்பா மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பிரதி அதிபராக உள்ளார். அம்மா வேம்படி உயர்தரப்பாடசாலை ஆசிரியர்.

எமது பெற்றோர் நான் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற வேண்டும் என்பதில் ஆரம்பத்தில் இருந்தே துணையாக இருந் தனர். நான் மாலை 6 மணி தொடக்கம் இரவு 10 மணிவரையும் காலை 4 மணி தொடக்கம் 6 மணி வரையும் படிப்பேன். கஷ்டமான பாடங்களுக்கே முக்கியத்துவம் கொடுத்துப் படிப்பேன்.

எனது பெற்றோர் நான் சித்தி பெற வேண்டும் என்பதற்காக நிறையக் கஷ்டப்பட்டனர். அவர்களது கனவை, ஆசையை மாவட்டத்தில் முதலிடம் பெற்று நிறைவேற்றியிருக்கின்றேன்.



பரீட்சை எழுதியபோது 190 புள்ளிகளைப் பெறுவேன் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் இப்போது மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுவிட்டேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எனது பாடசாலை அதிபர், எனது வகுப்பாசிரியர் திருமதி அ.றொபின் ஆகியோருக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் நன்றியைக் கூற விரும்புகின்றேன் - என மகிழ்ச்சியுடன் தெரிவித்தார் நிதுஷிகா.

(த-10-319)

# இறுவட்டு வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், செப்.16

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் என்.சண்முகலிங்கனின் ஆத்மா - உள சமூக வல்லமைக் கான இசைத்தமிழ் கரம் இறுவட்டு வெளியீட்டு விழா யாழ். பல்கலைகக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.சமூகவியல் சமூகத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சமூகவியல் துறை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் அறிமுக உரையை நிகழ்த்தவுள்ளார். இராமநாதன் நுண்கலைக் கழக இசைத்துறை விரிவுரையாளர் சங்கீத வித்து வான் ஏ.கே.கருணாகரன், ஆசிரியர் குமரேசன் பாலசண்முகன் ஆகியோர் நயப்புரை வழங்கவுள்ளனர்.

(எ)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் கிடைக்கப்பெற்ற முடிவுகள் சில

**கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்**

ஜெ.லியான்சியா-174, இ.நிலாந்தன்-171, பா.தரணிகா-170, நி.நிலுக்ஷன்-170, ச. நகுலசேகரி -169, சி.சர்மிதா-169, க.யனுசயா-168, கு.சீனுகா-168, ப.கிருஷிகாந்-166, ஜெ.விதுசாயினி-165, தே.சஜீந்தன்-164, த.நிஷா-164, பா.கஜலக்ஸ்மனன்-164, ச.மதுஷா-162, சி.சங்கவை-160, ஜே.கவியரசன்-160, ந.கீர்த்திகா-159, ச.யுகன்-155, ல.பிரணியா-155, சு.பவித்திரா-155, சி.அபிசா-153, சு.லவன்-152, க.பிரணவன்-152, கௌ.கனியகன்-151, ர.ஷரத்வீகன்-148, த.பவித்திரா-147.

**தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி**

கே.குந்தவி-176, தெ.சுஜியெந்திரன்-176, சி.கபிலா-175, நி.தனிசிகா-174, பு.துவாரகன்-173, ச.லக்ஸன்-171, சா.கோபிகன்-167, கே.தரணிகா-166, யோ.ஐங்கரன்-166, கு.சயுகன்-164, உ.சருணுகா-163, ச.தாமிரபரன்-161, தெ.சோவென்ஜா-160, இ.ரிசாத்-159, ஜெ.ஜெயக்ஸன்-157, சு.வனித்திரன்-157, ரா.தீபிகா-153, பா.திவ்ஜன்-153, சி.மகிசினி-152, சி.ஜாம்ஸன்-152, ஜோ.நிதுசா-151, வ.தர்ஸனா-151.

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**

உ.ஸ்ரீத்தனா-183, ஈ.சௌமியா-178, டா.எட்வினா-178, ர.கஜனிகன்-178, க.பவதாரணி-170, சா.வேணுஜா-166, த.சாரங்கன்-164, ஜெ.அனுஷன்-162, பி.கலைமதி-162, தே.கிரிஸ்ரி- நிதர்சன்-160, வெ.மேரிஜெரினா-159, சு.கபிஷா-159, ப.கிதுஸ்ணகி-156, ஜெ.லயன்சிகா-155, சி.சதுர்ஷன்-155, வி.தனஸ்ரிகா-154, டே.டன்சன் றொக்சி-153.

# நிகழ்வுகள்

## கருத்தரங்கு

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான இலவச தொழிற்பயிற்சி வழிகாட்டல் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் யுனி.ஐ.சி.ரி கம்பஸ் நிலையத்தினால் நடைபெறவுள்ளது.

கருத்தரங்கில் கற்கை நெறி தொடர்பான பூரண விளக்கங்கள் வழங்கப்படுவதுடன் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் கற்பதற்கான உடனடி அனுமதியும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என அதன் இயக்குநர் அறிவித்துள்ளார்.

(த-323)

## திறப்பு விழா

இலவச சட்ட ஆணையகத்தின் பருத்தித்துறைக் கிளை இன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப் படவுள்ளது.

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு [illegible] உள்ள பருத்தித்துறை மாவட்ட [illegible] கட்டடத்தில் இந்தக் கிளை திறந்து வைக்கப்படும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

(த-236)

## நடனப் போட்டி

யாழ். சமாதான மற்றும் நல்லிணக்கப் பணியகம் சர்வதேச சமாதான தினத்தையொட்டி நடனப் போட்டியை நடத்த முன்வந்துள்ளது.

நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பூநகரி மகாவித்தியாலய மண்டபத்தில் போட்டி ஆரம்பமாகும். 'சமாதானமும் நல்லிணக்கமும்' என்னும் கருப்பொருளில் நடைபெற இருக்கும் போட்டியில் பூநகரிக் கோட்டப் பாடசாலைகள் பங்கு கொள்கின்றன. (த-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிப் புனரமைப்புக்காகப் போடப்பட்ட கற்களை ஏற்ற முயன்ற அதிகாரிகள்

யாழ்ப்பாணம், செப். 16

வலி. வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இளவாலை சென். ஜேம்ஸ் குறுக்கு வீதியைப் புனரமைப்பதற்காக ஏற்கனவே பறிக்கப்பட்டிருந்த கற்களை அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவோர் நேற்றுக் காலை திடீரென மீண்டும் ஏற்றிச் செல்ல முயன்றதால் அவர்களுக்கும் ஊர் மக்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

வலி. வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இளவாலை வடக்கு ஜே/221 கிராம சேவையாளர் பிரிவில் உள்ளடங்கும் இளவாலை சென். ஜேம்ஸ் குறுக்கு விதியைப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் புனரமைப்பதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருந்தன. 320 மீற்றர் நீளமான இந்த வீதியின் புனரமைப்புக்கு 11 லட்சத்து 80 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இந்த வீதியைப் புனரமைப்பதற்கான பெயர்ப் பலகையும் ஏற்கனவே நாட்டப்பட்டதுடன் கடந்த ஜூன் மாதம் இதற்கென கற்களும் அந்த வீதியில் பறிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் இவ்வாறு பறிக்கப்பட்டிருந்த கற்களை நேற்று அந்தப் பகுதிக்குத் திடீரென வந்த அதிகாரிகள் அதனை ஏற்றிச் செல்லவுள்ளதாக அங்கு நின்ற மக்களிடம் தெரிவித்தனர். இதனால் மக்களுக்கும் அங்கு வந்த அதிகாரிகளுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டதுடன் முறுகல் நிலையும் தோன்றியது.

இதனையடுத்து அதிகாரிகள் தமது திட்டத்தைக் கைவிட்டுத் திரும்பிச் சென்றனர். (த)

# தேர்தல் சட்ட மீறல்கள் அதிகரிப்பு உடனடியாக தடுத்து நிறுத்துங்கள்

## ஆணையாளர் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் சட்டங்களை மீறும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால், அது தொடர்பாக கவனம் செலுத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கும், தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருக்கும் தேர்தல்கள் ஆணையாளர் கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவினால் நேற்றுமுன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேற்படி கடிதத்தில் தேர்தல் பிரசாரங்களில் பொலித்தீன் பாவனை மற்றும் அரச வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றமை தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தேர்தல் சட்டங்களை மீறுவோர் மீதான சட்ட நடவடிக்கை மற்றும் வன்முறைகளைக் கட்டுப்படுத்துதல் தொடர்பிலும் பொலிஸ்மா அதிபர், தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஆகியோரது கவனம் திரும்பவேண்டும் என்றும் அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்த திகதியிலிருந்து நேற்று வரை தேர்தல் சட்டங்களை மீறிய 42 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்தார்.

சட்டவிரோதமாகத் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுத்தப்பட்ட 4 வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளருக்கும், தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகளின் செயலாளருக்கும் இடையில் எதிர்வரும் 16ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு விசேட சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பு தேர்தல்கள் செயலகத்தில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-சி)

# இறைவன் என்னைத் தண்டிக்கப் போவதில்லை பயந்து நான் பரிகாரம் செய்யப் போவதுமில்லை

## அமைச்சு வேலைகளை கவனிக்கவே நேரமில்லை என்கிறார் மேர்வின்

கொழும்பு, செப். 16

முன்னேஸ்வரம் காளி கோயிலில் நான் நடந்து கொண்ட விதம் குறித்து எந்த வகையிலும் கவலையடையப்போவதில்லை. பரிகாரம் தேடிச் செல்லவும்மாட்டேன். இறைவன் என்னை தண்டிக்கவும் மாட்டார் என அமைச்சர் மேர்வின் சில்வா நேற்று அதிரடியாக அறிவித்துள்ளார்.

முன்னேஸ்வரம் பத்திரகாளி அம்மன் கோயிலில் நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த மிருக பலி பூஜையை அமைச்சர் மேர்வின் சில்வா தனது பரிவாரத்துடன் அங்கு சென்று அதிரடியாகத் தடுத்து நிறுத்தினார்.

நேர்த்திக்கடன் பூஜைக்காக கட்டி வைக்கப்பட்டிருந்த ஆடுகள், கோழிகளை காப்பாற்றுவதற்காக திடீர் அவதாரம் எடுத்த அமைச்சர் அவற்றை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தார்.

அமைச்சர் மேர்வின் தனது அடியாட்களுடன் ஆலயத்தினுள் நுழைந்து அடாவடித்தனத்தில் ஈடுபட்டார் என மக்கள் விசனம் தெரிவிக்கும் நிலையில், அமைச்சருக்கும் அவரின் சகாக்களுக்கும் இறைவன் தண்டனை வழங்கவேண்டும் என வேண்டி பூசாரிகள் பூஜை நடத்தியுள்ளனர் என்ற தகவல் எமக்குக் கிட்டியது.

அதுமட்டுமின்றி, காளியம்மன் சாபம் சும்மா விடாது எனக் கேள்விப்பட்ட அமைச்சர் மேர்வின், பரிகாரம் தேடி பூஜை நடத்துவதற்கான ஏற்பாடுகளை அவசர அவசரமாக செய்கின்றார் என்றும் தெரியவந்தது.

சரி, இந்த விடயம் தொடர்பாக அமைச்சரிடமே கேட்டுப் பார்ப்போம் என அவருக்கு அழைப்பை ஏற்படுத்தினோம். அதிரடியாகப் பதிலளித்தார் அமைச்சர் மேர்வின்.

அவர் கூறியவை வருமாறு:-

நான் யாருக்கும் பயந்தவன் அல்லன். எங்கு வேண்டுமானாலும் எந்தநேரமும் செல்வேன். தப்பை தட்டிக்கேட்பேன்.

இந்து மதமும், பௌத்த மதமும் அஹிம்சையைப் போதிக்கும் மதங்கள். அஹிம்சை வழியிலேயே நான் செயற்பட்டேன்.

மிருகபலி கூடாது என்று பலரும் கூறுகின்றனர். உயிர்களைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்த என்னை இறைவன் தண்டிக்கமாட்டான். ஏனென்றால், தப்பு செய்பவர்களைத் தண்டித்து, நல்லது செய்ய முனைபவர்கள் மீது இறைவன் அன்பு செலுத்துவாரே தவிர தண்டிக்கமாட்டார்.

எனக்கு அமைச்சு வேலைகளை கவனிப்பதற்கே நேரம் காணாது. இவ்வாறானதொரு நிலையில் பரிகாரமா ஐயகோ! ஐயகோ! - என்றார் அமைச்சர் மேர்வின்.

(த-சி)

# மர்மமனிதரால் பாதிக்கப்பட்டோரை எம்.பிக்கள் சந்தித்துப் பேசினர்

யாழ்ப்பாணம், செப்.16

வலி மேற்கில் மர்ம மனிதர்களின் நடமாட்டத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரகளான ஈ.சரவணபவன், சி.சிறீதரன் மற்றும் வலி மேற்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் ஆகியோர் நேரில் சென்று மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

வலி.மேற்கில் பாண்டவெட்டை, தொல்புரம், பெரியபுலவு ஆகிய இடங்களில் இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

மர்ம மனிதர்களின் நடமாட்டம் காரணமாகத் தாம் நித்திரையின்றி இரவைக் கழிப்பதாகவும், இரவில் இருந்து படிப்பதற்கு மாணவர்கள் அச்சம் கொள்வதால் அவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தப்பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்தனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடருமாயின் தாம் பொறுமையை இழக்க வேண்டி ஏற்படும் எனவும் படையினரின் பிரசன்னத்தைத் தாம் அடியோடு விரும்பவில்லை எனவும் மக்கள் தெரிவித்தனர்.

மாலை 6.30 மணி முதல் இரவு 9.00 மணி வரை இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)

# டெங்குக் கட்டுப்பாட்டுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.16

நல்லூர் பிரதேச மட்ட டெங்கு கட்டுப்பாட்டுக் கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.3 மணிக்கு பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கிராம மட்டத்திலான குழுக்கள், சுகாதாரத்திணைக்கள உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், நல்லூர் பிரதேச சபை உத்தியோத்தர்கள் ஆகியோர் கலந்து கொள்வர். (ச-7)

# வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஒன்பது நீதிபதிகளுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம்,செப்.16

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்ட நீதிமன்றம் மற்றும் நீதிவான் நீதிமன்றங்களைச் சேர்ந்த 9 நீதிபதிகளுக்கு அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும்வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர அகில இலங்கை ரீதியான 61 நீதிபதிகளுக்கு இந்த இடமாற்றங்களை நீதிச் சேவைகள் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

இதன்படி வடமாகாணத்தில் யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றுக்கும், சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மா. கணேசராஜா யாழ். நீதிவான் நீதிமன்றத்துக்கும் இடமாற்றம் பெறுகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி ரி.எல்.ஏ. மனாவ் திருகோணமலை மாவட்ட நீதிபதியாகவும், மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் என்.எம்.எம். அப்துல்லாஹ் வாழைச்சேனை மாவட்ட நீதிபதியாகவும், வாழைச்சேனை மாவட்ட நீதிபதியாகவுள்ள ஏ.எம்.எம். றியால் மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவானாகவும், கம்பகா நீதிமன்ற நீதிவான் ஏ.எம்.எம். மக்கி கல்முனை மாவட்ட நீதிபதியாகவும், கல்முனை மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் மட்டக்களப்பு மாவட்ட நீதிபதியாகவும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

திருகோணமலை மேலதிக நீதிவான் ஆர்.ஆர்.ஏ.ஆர்.எச்.சி. ஜயவர்த்தன தெல்தெனிய மாவட்ட நீதிபதியாகவும், கேகாலை மேலதிக மாவட்ட நீதிபதியாகவுள்ள ஏ.எம்.எம். சுஹாப்தீன் அம்பாறை மாவட்ட நீதிபதியாகவும் இடமாற்றம் பெற்றுள்ளனர். (த-4)

# கலந்துரையாடல்

வண்ணை, செப். 16

யாழ். ஆரியகுளம், உயர் கலைக் கல்லூரி அரங்கில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ''சமகால அரசியல்'' என்னும் மகுடத்தில் கலந்துரையாடல் நடைபெறும்.

யாழ். சர்வதேச மார்க்சியக் குழு ஏற்பாடு செய்துள்ள மேற்படி கருத்தரங்கில் மார்க்சிய தொழிற்சங்க வாதிகள் மற்றும் ஆய்வாளர்கள், அறிஞர்கள் உரையாற்றுவர்.

அரசியல், மார்க்சிய ஆர்வலர் வருகை தந்து பயனடையுமாறு அழைக்கப்படுகின்றனர். (த- 160)

# முதியோருக்கு உதவிகள்

சண்டிலிப்பாய் மத்தி முதியோர் பகல் பராமரிப்பு நிலைய முதியவர்களுக்கு மானிப்பாய் சத்தியசாயி சேவா மன்றத்தினர் [illegible] நினைவு கூர்ந்து உடுபுடைவைகளும் உணவுப் பொதிகளும் வழங்கியுள்ளனர். (த-100)

# நாங்கள் ஒரு அரசியல் கட்சி துணை இராணுவக் குழு அல்ல

## பிளேக்குக்கு டக்ளஸ் பதில்

யாழ்ப்பாணம், செப்.16

நாம் தமிழ் பேசும் மக்களின் அங்கீகாரம் பெற்ற பொறுப்பு வாய்ந்த ஒரு அரசியல் கட்சியே தவிர வன்முறை நோய் கொண்டு அலையும் துணை இராணுவக் குழு அல்ல என ஈ.பி.டி.பி தெரிவித்துள்ளது.

தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலர் ரொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்த கருத்துத் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

நாம் தமிழ் பேசும் மக்களின் அங்கீகாரம் பெற்ற அரசியல் கட்சியே தவிர துணை இராணுவக் குழு அல்ல. இந்த உண்மையை தனது வழமையான கபட நோக்கத்தோடு எம்மீது அவதூறு பரப்பும் வகையில் தொடர்ந்தும் கருத்து வெளியிட்டு வரும் ரொபேர்ட் ஓ பிளேக் உணரவேண்டும்.

இவரது குற்றச் சாட்டுக்கள் ஆதாரமற்றவை. உண்மைக்குப் புறம்பான உள்நோக்கம் கொண்டவை. அவரின் கருத்துக்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்றுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ASIAN Mega COMPUTER SCHOLARSHIP
Win 75%

## G.C.E. உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான விசேட சிறப்புச் சலுகை

மெகா இலவச புலமைப் பரிசில் பரீட்சை கடந்த 11 ஆண்டுகளாக (**Sept. 2000** ஆண்டு முதல்) ஏசியன் கொம்ப்யூட்டர்ஸால் அறிமுகப்படுத்தப்பட்டு நடாத்தப்படுகிறது. இவ்வாண்டும் தகவல் தொழில்நுட்பம், கிராபிக்ஸ் அனிமேஷன், மல்டிமீடியா, இணைய வடிவமைப்பு, டலி கணக்கியல், ஹாட்வேயார் மற்றும் ஆங்கில பேச்சுப்பயிற்சிகளுக்கான புதிய பாட நெறிகளுடன் இப்புலமைப்பரிசில் கணனி ஆர்வலர்கள் அனைவருக்கும் வழங்கப்படுகிறது.

### இலவச புலமைப்பரிசில்

- பரீட்சையை தமிழ் or ஆங்கிலத்தில் எழுதலாம்
- அடிப்படைத் தகைமை G.C.E. (O/L)
- வினாத்தாள் 50 நிமிடங்கள் மட்டுமே
- பாடசாலைப் பாடத்திட்டம் & பொது அறிவு வினாக்கள்
- இலவச பாடநூல்கள் (இந்தியா & இலங்கை)
- தவணைமுறை கட்டண வசதி (Installment)
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்

செப்டெம்பர் 18 ஞாயிறு



படிப்பின் முக்கியமான தருணங்களில் சிறந்ததை தெரிவு செய்யுங்கள் !

ஸ்கொலர்ஷிப் மூலம் சேர்ந்து படிப்பது, படிப்பிற்கான உங்கள் செலவைக் குறைப்பதாகும்.

இலவச அனுமதிகளுக்கு..

## ASIAN COMPUTERS

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| 2G ஸ்ரான்லி வீதி | கொடிகாமம் வீதி | 230- 1ம் மாடி கண்டி வீதி |
| 021-2225677 | 021-2262399 | 021-2270267 |


## கிளி/ திருவையாறு மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

காலம்: 25.09.2011 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 9.30 மணி
இடம்: பாடசாலை மண்டபம்
பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதிபர்
கிளி / திருவையாறு ம.வி.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி ஆனந்தலக்சுமி தவசீலன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர் சின்னத்துரை கந்தசாமி

அவர்கள் 05.09.2011 அன்று இறைபாதம் அடைந்த செய்திகேட்டு, எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

யா/ புற்றளை மகா வித்தியாலய சமூகம், புற்றளை, புலோலி.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 15.09.1924

மறைவு: 08.09.2009

**திருமதி செல்லத்துரை கனகம்மா**

திதி: 16.09.2011

எம் குடும்பத்தின் மூத்த குலவிளக்காய்
எமக்கெல்லாம் ஒளி தந்து வழிகாட்டிய
எம் தீபம் அணைந்து ஈராண்டு கடந்தாலும்
எம் நினைவினிலே என்றும் எம்மோடு வாழ்ந்து
எமை வழிநடத்திச் செல்வீரம்மா
மாறாது உம் நினைவு ஆறாது எம் நெஞ்சம்

'தாய் அகம்', பழைய வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

குடும்பத்தினர்

## நிலையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் இடையில் நெருங்கிய பிணைப்பு காணப்படுகிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எனினும், தேசிய இனப்பிரச்சினைக்கு நிலையானதும் காத்திரமானதுமான அரசியல் தீர்வு ஒன்றை எட்ட வேண்டுமாயின் பிரச்சினைக்கான மூலக்காரணிகளை அடையாளம் கண்டு அதற்கான தீர்வுகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வட அயர்லாந்து கிளர்ச்சிகளின் போது பிரிட்டன் இதனை அனுபவ பூர்வமாக உணர்ந்து கொண்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு இனங்களுக்கு இடையில் நீண்ட கால அடிப்படையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சியாக இலங்கைக்கு உதவிகள் வழங்கப்படும் **என்றும்** அவர் தெரிவித்துள்ளார்.

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள பகிர்வுகள் மற்றும் பங்கீடுகள், நிதிக் கையாளுகை மற்றும் வரி அறவீடு என்பன தொடர்பான அரசின் நிலைப்பாட்டை விளக்க இருவார கால அவகாசம் கொடுத்த கூட்டமைப்பு, அதுவரை அடுத்த சுற்றுப் பேச்சுக்களுக்கான திகதியைக் குறிப்பிட மறுப்புத் தெரிவித்தது.

எனினும், கூட்டமைப்பின் கோரிக்கை நியாயமற்றது என்று தெரிவித்த அரசு, விடுதலைப் புலிகள் போன்ற நடத்தையை கூட்டமைப்பு வெளிப்படுத்துவதாகவும் சாடி இருந்தது.

கூட்டமைப்பின் கோரிக்கைகள் குறித்து அரசு எதனையும் வெளிப்படையாகப் பதிலளிக்காத நிலையில் இன்றைய பேச்சு ஆரம்பிக்கப்படுகிறது. (உ)


Take Away
**HP Compaq 420 Laptop**



Intel Core 2 Duo (2.10GHz)
2 GB DDR3 RAM
320 GB HDD
14.0 Display
DVD RW
W LAN & BT
WebCam

Just Pay **9,999/=**
Interest Free

Limited Stock
Conditions Apply

**Laptop Zone**
Authorized HP Dealer

T.P:-021 492 3105
No **75**, K. K.S. Road Jaffna


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1969 இல் பிறந்த 12 இல் செவ்வாயுடைய கொழும்பில் அரச பணியிலுள்ள M.Sc. மணமகனுக்கு பெற்றோர் படித்த வெளிநாட்டில் வதியும் குடியுரிமையுள்ள வெளிநாடு செல்ல தயார் நிலையிலுள்ள 34- 36 வயதிலுள்ள மணமகளை எதிர்பார்க்கின்றனர். ஜாதக குறிப்பு, புகைப்படம் மற்றும் அனைத்து விவரங்களுடன் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். பொருத்தமில்லாத விவரங்கள் மீள அனுப்பப்படும்.

விளம்பர இல- 4172

மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

ඉඩම් නිරවුල් කිරීමේ දෙපාර්තමේන්තුව
## LAND SETTLE MENT DEPARTMENT

## காணி நிருணயத் திணைக்களம்

## காணி, காணி அபிவிருத்தி அமைச்சு

### காணி உரித்து பதிவு செய்தல் நிகழ்ச்சித்திட்டம் (பிம்சவிய)

### வடக்கு, கிழக்கு மாகாணங்களில் செயற்படுத்தல்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த 30 வருடங்களாக நடைபெற்ற பிரச்சினைகளில் இடம் பெயர்ந்து, அந்தப்பிரதேசங்களைக் கைவிட்டு அல்லது பயங்கரவாதிகளினால் பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட மக்கள், அவர்கள் வசித்த பிரதேசங்களில் திரும்பவும் வந்து வசிக்கின்றதினால் அவர்களுக்கான காணியை மீண்டும் பெற்றுக்கொடுத்து அழிந்து போன காணி நன்கொடைப்பத்திரம், உறுதி, காணி அனுமதிப்பத்திரம் மற்றும் காணி வரைபடங்கள்போன்றவற்றை வழங்க நடவடிக்கை செய்யப்பட்டுள்ளது. அந்தப் பகுதிகளில் உருவாகியுள்ள காணிப் பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்காக பலதரப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்த காணி, காணி அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது. அதன்படி சகல காணிகளையும் அளந்து, வரைபடங்களை தயாரித்து காணி உரிமையாளர்களை இனங்கண்டு உரித்தைப் பதிவு செய்வதற்காக 1998ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப்பதிவு செய்தல் சட்டத்தின் கீழ் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை போன்ற மாவட்டங்களில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களிலுள்ள பிரதேச உதவி அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைந்துள்ள அரசினால் பகிர்ந்தளிக்கப்பட்ட காணித்துண்டு அல்லது காணித்துண்டுகளின் உரிமைக்காரரோ அல்லது உரிமைக்கோரும் அமைப்புக்களோ அல்லது தொடர்பானவர்களோ உரிமைக்கோருகின்ற இடத்துண்டு, அல்லது துண்டுகளுக்காக தங்களுக்கு உள்ள உரிமையை உரிய பிரதேச உதவி அரசாங்க அதிபர் அல்லது பிரதேச செயலாளருக்கு 2011.09.20 திகதியிலிருந்து 2011.11.20 திகதியோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பி வைக்கும்படி 1998ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவு செய்தல் சட்டத்திற்கமைவாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். மாதிரி விண்ணப்பப்பத்திரங்களை மேற்குறிப்பிடப்படும் மாவட்ட செயலாளர் காரியாலயங்களில், உதவி அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், கிராம சேவை உத்தியோகத்தர காரியாலயம் மற்றும் பத்தரமுல்ல, ரஜ மல்வத்த வீதி, "மிஹிகத மெதுர"வில் அமைந்துள்ள காணி, காணி அபிவிருத்தி அமைச்சு, காணி உரித்து நிர்ணயத் திணைக்களம், காணி ஆணையாளர் திணைக்களங்களில் பெற்றுக்கொள்ளலாம். இந்தப் பிரதேசங்களில் வசிக்கின்ற மக்கள் அந்தந்த கிராம சேவையாளர் ஊடாக பிரதேச செயலாளருக்கோ அல்லது உதவி அரசாங்க அதிபருக்கோ தங்களது விண்ணப்பங்களை அனுப்பி வைப்பதோடு உரிய பிரதேசங்களுக்கு வெளியே வசிக்கின்றவர்கள், உரிய விண்ணப்பப்பத்திரத்தை மின்னஞ்சல் மூலமாக அனுப்ப முடியும்.

மேலதிக விபரங்களை கீழ்வரும் இணையத்தளம் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

இணையத்தளங்கள் :- www.bimsaviya.gov.lk
www.survey.gov.lk
www.landcommdept.gov.lk
www.rgd.gov.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# என்னவோ நடக்குது; மர்மமாய் இருக்குது

★ போரின் பின்னரான நிலைமைகளை ஆராய்ந்து, அதகேற்ப உகந்த அரசியல் தீர்வை அரசாங்கம் முன்வைக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், அடுத்த பத்து வருடங்களுக்குள் மீண்டும் இந்த நாட்டில் பயங்கரவாதம் தலைதூக்கும் ஆபத்து அறுபது சதவீதம் உண்டு.

இந்த ஆபத்து இலங்கையில் மட்டுமன்றி, போர் நடைபெற்ற எல்லா நாடுகளிலும் உள்ளது.

★ வடக்கு, கிழக்கில் செயற்பட்டு வரும் துணை இராணுவக் குழுக்களின் ஆயுதங்கள் உடனடியாகக் களையப்பட வேண்டும்.

- அதேவேளை, மர்ம மனிதர்கள் தொடர்புடைய சம்பவங்களுக்கு முடிவு காணப்படுவது அவசியம். இந்த விவகாரம் பாதுகாப்புத் தொடர்பாக நிச்சயமற்ற தன்மை அதிகரித்துச் செல்வதற்கு வழி கோலி உள்ளது.

- வடக்கில் தமிழ்ப் பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்த வேண்டும். அதனால் அங்குள்ள மக்கள் கூடுதல் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள இயலும்.

தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் உதவி அமைச்சர் றொபேர்ட் ஓ பிளேக் இவற்றைத் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்த அவர் யாழ்ப்பாணத்துக்கும் வந்து இங்குள்ள நிலைமைகளை நேரில் கேட்டறிந்து கொண்டார்.

றொபேர்ட் ஓ பிளேக் இருபத்தைந்து வருடங்களுக்கும் கூடுதலாக அமெரிக்க ராஜதந்திர சேவையில் பணியாற்றி வருகின்றார். இலங்கையில் அமெரிக்கத் தூதராகச் சேவை புரிந்தவர்; இறுதிப் போர் நடைபெற்ற போதும் அவர் இங்கு இருந்தவர்; எல்லா விவரங்களும் தெரிந்தவர். அவரது கருத்துக்கள், களநிலைமை மதிப்பீடுகள் புறமொதுக்கக் கூடியவை அல்ல.

இலங்கை இனப்பிரச்சினைக்கு விரைந்து அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். அதனைச் செய்வதற்குத் தவறினால், பத்து வருடங்களுக்குள் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கும் ஆபத்து, அறுபது சதவீதம் உண்டு என்று அவர் கூறியிருப்பது இலங்கைக்கு மட்டுமல்ல, போர் நடைபெற்ற எல்லா நாடுகளையும் மனதிலிருத்தியே அந்த மதிப்பீட்டைச் செய்துள்ளார் எனலாம்.

போர் முடிந்துவிட்டது தானே, அதனால் சிறுபான்மையினருக்குச் சில்லறை உரிமைகளை வழங்கி அடக்கி ஆண்டு ஒடுக்கி விடலாம்; அவர்களுக்குச் சேரவேண்டியவற்றை வழங்க வேண்டும் என்பது நியதி அல்ல என்ற அதிகாரத்தனத்துடனும், மேலோங்கிச் செருக்குடனும் செயற்படும் தன்மை, சுபாவம் ஆட்சியாளர்களுக்கும் அவர்களின் கைப்பொம்மைகளுக்கும் உதிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

கிறீஸ்பூதம் ; மர்ம மனிதன் ஆகியன கட்டுக்கு அடங்காமல் பெருவடிவம் எடுத்து மக்களை, குறிப்பாக பெண்களையும் இளையோரையும் பாதிக்கும் போது அது அவர்களிடம் நெருடலை உற்பவித்து எதிர் நடவடிக்கைகளில் ஈடுபடத் தூண்டும் என்பது உளவியல் சார்ந்த நிலைகளில் ஒன்றாகும்.

அரசமைப்புச் சட்டத்துக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை முற்றாக இரத்துச் செய்ய வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் போன்ற தெற்கின் சிங்களத் தீவிரவாதிகள் கோரியிருப்பது அரசின் அதிகாரத்தனத்தை மேலோங்கச் செய்யும் என்பதில் ஐயமிருக்க முடியாது.

ஆட்சியில் உள்ளவர்களே இத்தகைய தீவிரவாதப் புனைவுகளைத் தூண்டுவித்தாலும் ஆச்சரியப்படுத்துவதற்கு இல்லை.

நாளடைவில் தமிழ் மக்கள் மீதான அடக்கு முறைகளும் இப்போதுள்ள உரிமைகளை பறித்தெடுக்கும் போக்கும் பெரும் வடிவம், பேய் வடிவம் எடுக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

அடிக்கடி இப்பத்தியில் சுட்டிக்காட்டப்படுவது போன்று, வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் நிலப்பறிப்பு, இனப்பரம்பலில் மாற்றங்களை உண்டாக்குதல், மத கலாசார பாரம்பரியங்களை அழித்தல், வடக்கு, கிழக்கின் இயற்கை வளங்களை முற்றுமுழுதாகப் பெரும்பான்மையினரே அனுபவிக்க வழிசெய்தல் போன்ற சூழ்ச்சிகளும் மலியும் எனலாம்.

இவை எதிர்மறையான விளைவுகளுக்கு வித்திட்டு, தமிழர் பக்கத்தை அடிமட்டத்துக்கு, ''அடிமை''த் தரத்துக்கு தள்ளும் போது, அதற்கான எதிர்ப்பு நிலை முகிழ்க்கும், முளைக்கும், தோன்றும் என்பது பூசி மறைக்க முடியாத ஒன்று.

இதனை மிக வெளிப்படையாகவும், பட்டவர்த்தனமாகவும் அரசியல் தீர்வு உடனடியாகக் காணப்படாவிட்டால் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கும் என்று எதிர்வு கூறியிருக்கிறார் பிளேக். இதனை ஏகாதிபத்திய வாத நிலை சார்ந்த நோக்கு என்று இலங்கை அரசு தட்டிக்கழிக்குமா, இனப்பிரச்சினைக்கான தீர்வை காண்பதற்கு காலம் கடத்துமா, எங்களுக்கு ஆரூடம் சொல்ல அமெரிக்கா (பிளேக்) யார் என்ற மெத்தனப் போக்கைக் கையில் எடுக்குமா என்பது அரசைப் பொறுத்ததே.

மேலும் -

வடக்கு, கிழக்கில் செயற்பட்டு வரும் துணை இராணுவக் குழுக்களின் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்ற வற்புறுத்தல் இப்போது அமெரிக்காவிடம் இருந்து வந்துள்ளதானாலும் அது புதியது அல்ல.

இலங்கை ஜனாதிபதி நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 13 ஆம் திகதி வெளியிட்ட தனது இடைக்கால அறிக்கையில் இதனைப் பரிந்துரை செய்திருந்தது. ஆனால் உயர்பீடமோ, அரச அலகுகளோ ஒரு வருடம் கடந்தும் அதனைத் தூசி தட்டிப் பார்த்ததாகவும் இல்லை!

கிறீஸ்பூதம் மற்றும் மர்மமனிதர் விவகாரத்தில் அரசாங்கமும் படையினரும் பொலிஸாரும் எடுத்துள்ள நிலை, மேற்கொள்ளும் தடுப்பு ஏற்பாடுகள் யாவுமே மக்களுக்கு மர்மமாகவே உள்ளன. எனினும் அவற்றுக்கான மூல ஊற்று எங்கிருந்து பீறிடுகிறது என்பது அவர்களுக்குத் தெரியாததும் அல்ல. இந்த நிலை என்னவோ நடக்குது மர்மமாய் இருக்குது என்ற தமிழ்ச் சினிமாப் பாடலை ஞாபகப்படுத்துகிறது; அவ்வளவு தான்...!

மொத்தத்தில், பிளேக்கின் கருத்துக்களும் எதிர்வு கூறல்களும் அரசாங்கத்தைச் சிந்திக்க வைக்குமா, செயற்பட வைக்குமா அல்லது செவிடன் காதில் ஊதிய சங்காகுமா, இன்றேல் நீர்மேல் எழுத்துக் குமிழியாய் மறையுமா என்பவற்றைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்!

# ஆய்வு நூல் அறிமுக விழா நாளை இந்து மாமன்ற அரங்கில்

யாழ்ப்பாணம், செப்.16

ஆர்.எஸ். நடராசா எழுதிய சேர் பொன். இராமநாதனின் கல்விச் சிந்தனையும் கல்விப் பணியும் ஆய்வு நூல் அறிமுகவிழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் கோயில் வீதியில் உள்ள யாழ். இந்து மாமன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

துர்க்கா துரந்தரர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வைத்திய கலாநிதிகள் கணேசமூர்த்தி தம்பதியர் பிரதம விருந்தினராகவும் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ். தேசியக் கல்வியியல் கல்லூரி விரிவுரையளாளர் திருமதி விக்னேஸ்வரி நரேந்திராவின் இறைவணக்கத்துடன் ஆரம்பிக்கும் இந்த நிகழ்வில் யாழ்.கல்வி வலய ஆசிரியர் கல்வி நிலைய முகாமையாளர் ஜி. இரத்தினசிங்கம் வரவேற்புரையினையும், ஓய்வுநிலை கல்வி அதிகாரி சி.இராஜநாயகம், யாழ்.பல்கலைக்கழக முன் னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை வரவேற்புரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

மேலும் ஓய்வுநிலை அதிபர் சிற்பி சரவணபவன் அறிமுக உரையையும், முன்னாள் கோப்பாய் ஆசிரியக் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் புலவர் செ. திருநாவுக்கரசு நூல் ஆய்வுரையையும், யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல் துறைத் தலைவர் பேராசிரியர் பு.ரவிராஜன் நன்றியுரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

(எ)

# சாட்டி திருவிழாவை முன்னிட்டு விசேட ஏற்பாடுகள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், செப். 16

நாளை சனிக்கிழமை இறுதி சுற்றுப் பிரகாரத்துடன் சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலய திருவிழா நிறைவடையவுள்ளது.

இந்தத் திருவிழாவில் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பெருந்தொகையான மக்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் ஆலயச் சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்கவும் குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆலயச் சூழலில் குடிதண்ணீர் வசதி உள்ளபோதும் ஆறு தண்ணீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டுள்ளன.

மின்சார வசதிகள் தொண்டர் சேவைகள், மருத்துவமுகாம் என்பனவும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

வட பிராந்திய போக்குவரத்துச் சபை பங்குத்தந்தையின் கோரிக்கையை அடுத்து சில பகுதிகளில் இருந்து விசேட பஸ் சேவைகளை நடத்தவுள்ளதாகவும் கூறப்பட்டது.

குப்பை கூழங்களைப் போடுவதற்கென மூடியுடன் கூடிய குப்பைத் தொட்டிகள் ஆலயப் பகுதிகளில் வைக்கப்பட்டுள்ளதாகவும் வேலணைப் பிரதேச செயலர் தெரிவித்தார்.

(ம-7)

# யாழ். மாநகரசபைப் பிரிவிலுள்ள மதகுகள், வடிகால்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், செப். 16

யாழ். மாநகர சபைப்பகுதியில் உள்ள மதகுகள், வடிகால்கள் புனரமைக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். மாநகரசபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென். றோக்ஸ் சனசமூக நிலைய வடிகால் இரண்டு லட்சத்து 40 ஆயிரம் ரூபா செலவிலும் சிவன் வடக்கு வீதி வடிகால் 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவிலும் பிராமணக் கட்டுக்குளம் வடிகால் 8 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவிலும் இலந்தைக்குளம் மதகு 4 லட்சத்து 45 ரூபா ஆயிரம் ரூபா செலவிலும் புனரமைக்கப்படுகின்றன.

பொம்மைவெளி, அராலிப் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கான மலசலகூடம் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மாநகரசபையால் அமைக்கப்பட்டு வருகின்றது.

(ம-7)

# வேலணையில் அபிவிருத்தி வேலைகள் துரிதகதியில்

யாழ்ப்பாணம், செப். 16

வேலணைப் பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளைத் துரித கதியில் மேற்கொளளத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

வேலணைப் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வேலணைப் பிரதேச சபைத் தலைவர் சி. சிவராஜா தலைமையில் வேலணைப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் வீதி அபிவிருத்தி மற்றும் உடன் புனரமைக்கப்படவேண்டிய சிறிய வீதிகள், சீரான மின்விநியோகம், குளங்கள் புனரமைப்பு தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

குறிப்பிட்ட வேலைத் திட்டங்களை துரிதமாக செய்து முடிக்கவும் இதில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலர், அரச உத்தியோகத்தர்கள், அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

(ம-7)

## ஆசைக்குக் காரணம் யார்?

ஞானக்கதிர்

இந்த அறையிலிருந்து சுவரை ஊடுருவிக்கொண்டு என்னால் வெளியேற முடியுமானால் சந்தோஷமாகத்தான் இருக்கும். ஆனால், அது முடியாது. எனக்கு நோயே வராமல் இருக்குமானால் அது மிகவும் நல்லது. ஆனால் நோய் வருவதை என்னால் தடுக்கமுடியாது. எனக்குச் சாவே கிடையாது என்றால் மிகவும் மகிழ்ச்சிதான். ஆனால், நான் இறந்தேயாக வேண்டும்.

என்னால் இயலாத லட்சக்கணக்கான விஷயங்களை எல்லாம் செய்ய முடியுமானால் பேரானந்தம் தான். ஆசை இருக்கிறது. ஆனால், அதை நிறைவேற்றும் வழி கிடைக்காமல் போகும்போதுதான் துன்பம் என்ற வினோதமான பிரதிச் செயல் உண்டாகிறது. ஆசைக்குக் காரணம் யார்? நான்... நானே! இப்போது நான்படும் துன்பங்களுக்கெல்லாம் நானே காரணம்!

-சுவாமி விவேகானந்தர்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுய தொழில் ஓய்வூதியத்தில் கோப்பாயில் 510 பேர் இணைவு

நாவற்குழி, செப்.16

சுய தொழில் ஓய்வூதியத்தில் கோப்பாயில் 510 பேர் அண்மையில் இணைந்து கொண்டனர்.

நாளாந்தத் தொழிலில் ஈடுபடுவோரை இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுய தொழில் ஓய்வூதியத்திட் டத்தில் இணைப்பதற்காக நடமாடும் சேவைகள் அண்மையில் கோப்பாய் பிர தேச செயலர் பிரிவில் நடத்தப்பட்டது.

கல்வியங்காடு, இருபாலை தெற்கு, அச்சுவேலி தெற்கு, வடக்கு, மேற்கு, புத்தூர் கிழக்கு, மேற்கு, அச்செழு, நீர்வேலி மேற்கு, உரும்பிராய் கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் நடத்தப்பட்டு 510 பேர் இணைக்கப்பட்டுள்ளர்.

சபையின் யாழ்.மாவட்ட இணைப் பதிகாரி பா.பிரதீபன் இந்தக் கிராம மக்களுக்கு விழிப்புணர்வூட்டி பயனாளிகளை இணைக்க வழிசெய்துள்ளார்.

இந்த நடமாடும் சேவையில் பிரதேச செயலக சமூக சேவைகள் அதிகாரி, கிராம அலுவலர்கள் , சமுர்த்தி அபிவிருத்தி அலு வலர்களும் கலந்துகொண்டனர்.

18 வயது முதல் 59 வயது வரையிலான 6 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட மாத வருமானம் பெறுவோர் ஆர்வத்துடன் இந்தச் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத் தில்இணைந்து வருகின்றனர்.

(ம-121)

# மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், செப்.16

மது அருந்திவிட்டு வாகனம் செலுத்திச் சென்ற நபருக்கு யாழ்.நீதிமன்றம் 8 ஆயிரம் ரூபா அபராதமாக விதித்தது.

அபராதம் செலுத்தத் தவறின் எட்டு மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்கும்படியும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கோப்பாய் பொலிஸ் எல்லைக்குட்பட்ட பகுதியில் இவ்வாறு வாகனம் செலுத்திச் சென்றவேளையிலே கோப்பாய் பொலிஸாரால் குறித்த நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் அ.பிறேம்சங்கர் முன்னிலையில் நேற்று முன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிவான் இந்த உத்தரவைவிடுத்தார்.

(ம-4)

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைதான இளைஞனுக்கு விடுதலை

விடுதலைப்புலிகளுக்கு உதவியதாக மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட புத்தூர் இளைஞன், இரண்டு வருடங்களின் பின்னர் நேற்று முன்தினம் யாழ்.மேல் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டார்.

ஆவரங்கால், புத்தூரைச் சேர்ந்த தவயோகநாதன் நந்தன் என்பவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலைப்புலிகளின் படை முகாம் ஒன்றுக்கு கணக்காளராக இருந்தமை, விடுதலைப்புலிகளுக்கு நிதி திரட்டியமை மற்றும் ஆயுத பயிற்சி பெற்றமை ஆகிய மூன்று குற்றச் சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டு 2009 ஆம் ஆண்டு கைது செய்யப் பட்டிருந்தார்.

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் 2009 இல் இவர் ஆஜர்படுத்தப்பட்டார். பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தால் இந்த வழக்கு யாழ்.மேல் நீதிமன்றுக்கு 2010 ஆம் ஆண்டு பாரப்படுத்தப்பட்டது.

யாழ்.மேலதிக நீதவான் எஸ். பரமராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போது சந்தேக நபரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டதை அடுத்து அவர் நிரபராதி என்று தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

(ம-4)

# கல்லுண்டாயில் கழிவுகள் புதைப்பு

யாழ்ப்பாணம், செப்.16

கல்லுண்டாயில் கொட்டப் படும் குப்பைகள் தட்டிப் பரவிப் புதைக்கப்பட்டு ஊரி மணலால் மூடப்படுவதாக யாழ். மாநகர முதல்வர் தெரி வித்தார்.

இந்தப் பகுதியில் குப்பை கள் கொட்டப்படுவதால் சுற்றாட லில் உள்ள மக்கள் பாதிக்கப்படுவதாகப் புகார் தெரிவித் ததை அடுத்து உடனடியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை காக்கை தீவில் உள்ள மாநகர சபையின் சேதன உரம் தயாராகும் நிலையில் உரம்தயாரிக்கக் கூடியதான குப்பைகளை கொண்டு தயாரிக்கப்படும் இயற்கை உரம் விவசாய மக்கள் பயன்படுத்தக் கூடியதாக விநி யோகம் செய்யப்பட்டு வருவதாகக் கூறப்பட்டது.

(ம-7)

# தண்டவாளத்தால் தண்டம் செலுத்திய நபர்

தென்மராட்சி, செப்.16

இலங்கை புகையிரத திணைக்களத்துக்குச் சொந்தமான அரச சொத்தான தண்டவாளத்தை வீட்டில் வைத்திருந்த நபருக்கு அதன் பெறுமதியின் மூன்று மடங்கை அபராதமாக விதித்தது சாவகச்சேரி நீதிமன்றம்.

அரச சொத்தான தண்டவாளத்தை வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப் பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் மா.கணேசராசா குற்றவாளிக்கு 21 ஆயிரத்து 420 ரூபா அபராதம் விதித்தார்.

அரச சொத்தான தண்டவாளத்தை இலங்கை புகையிரதத் திணைக்கள அனுராதபுரப் பிரிவிடம் கையளிக்கு மாறும் உத்தரவிட்டார்.

(உ-207)

## 15 ஆம் ஆண்டின் நினைவலைகள்

மலர்வு 01 - 10 - 1939



உதிர்வு 16 - 09 - 1996

**அமரர் பூ.இரத்தினம்**

(ஓய்வு பெற்ற ஊழியர், காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

அன்பெனும் உணர்வையூட்டி
அயர்விலா உழைப்பினாலே
பண்புடனே உறவையெல்லாம்
பகிர்ந்தெமக்கு அளித்து வந்தீர்கள்
ஆண்டுகள் பதினைந்து கடந்தாலும்
உங்கள் நினைவுகள் அழியாது

தபாற்கந்தோர் அருகில், தெல்லிப்பழை.

# எரிகாயங்களுடன் சிகிச்சை பெற்ற பெண் மரணம்

யாழ்ப்பாணம், செப்.16

குக்கருக்கு மண்ணெண்ணெய் நிரப்பிய பொழுது அது உடையில் பட்டு தீப் பற்றிக் கொண்டதனால் எரிகாயங்களுக்குள்ளாகி சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிந்த பெண் சிகிச்சை பயனளிக்காது செவ்வாய்க்கிழமை மரணமானார்.

பொன்னாலை வீதி, ஆனைக் கோட்டையைச் சேர்ந்த கனகலிங்கம் நாகராணி (வயது- 54) என்ற பெண்ணே இவ்வாறு மரணமானார்.

கடந்த 8 ஆம் திகதி தனது வீட்டில் சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது தீக்காயங்களுக்கு உள்ளாகியிருந்தார்.

எரிகாயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காத நிலையில் மரணமானவர் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். ஓய்வு பெற்ற நீதிபதி எம்.திருநாவுக்கரசு மரண விசாரணை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-4)



## YOGI'S BEAUTY

(THE ACADEMY OF BEAUTY THERAPY, HAIR DRESSING & HOME SCIENCE)

**குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புக்கள் 18.09.2011 அன்று ஆரம்பமாகவுள்ளன.**

1. அழகுக்கலை (Advanced Beauty Culture Hair Dressing)
2. Advanced Cosmetology Course.
3. நவீன ஒப்பனையும், தலை அலங்காரங்களும் (Advanced Bridal Make- up & Hair Styles)
4. 10 வகை வித்தியாசமான சாறி கட்டும் முறைகள்.
5 கேக் ஐசிங், மாச்சீனி மலர்கள் (B'day Cakes, Fondant Strctures & Sugar Flowers)

**பயிற்சிகளில் சேர விரும்பும் அனைவரும் உடன் தொடர்பு கொள்ளவும்**

ஆசிரியை
Mrs. Yogini Shanmuganathan
Diploma in High tec Aesthetics & Cosmetology (India)
Diploma in Advanced Bridal Make -up Character - Make -up (India)
Diploma in Home Economics (India & Sri Lanka)

75, அம்மன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

Phone:021 222 2796, 0777164923 021 321 0077

கடந்த 11 ஆம் திகதி உதயனில் வெளியாகியிருந்த [illegible] YOGI'S என்பது JOGIS என்று தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது.

## FASHION Fancy & Beauty Corner

(Center Of Modern Women)



அன்பார்ந்த வாடிக்கையாளரே!
பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு
★ உங்களை அலங்கரித்துக் கொள்ளவும்
★ உங்கள் சாறிகளுக்கு பொருத்தமான நகைகளை தெரிவு செய்யவும்
★ கொண்டைப் பூக்களை உங்கள் விருப்பத்துக்கேற்ப வடிவமைத்துக்கொள்ளவும்

எங்களிடம் உங்கள் பதிவுகளை முன்கூட்டியே பதிந்துகொள்ளுங்கள்

நிர்வாகி
திருமதி செந்தூரன் ஜெயவாணி
தொ.பே: 0773530691

297A, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது சனசமூக நிலையத்தின் அங்கத்தவரும், விளையாட்டு முதன்மை வீரனுமாகிய

**அமிர்தலிங்கம் விதன்**
அவர்கள்

இலங்கை கல்வி அமைச்சின் தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஆண்கள் பிரிவில் (20வயதுக்குட்பட்டோர்) பளு தூக்கும் போட்டியில் 80 - 85 கிலோகிராம் எடையைத் தூக்கி 3ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை தனதாக்கிக் கொண்டார். இவர் மேலும் பல போட்டிகளில் பங்குபற்றி பதக்கங்களைப் பெறவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

கலாமன்ற சன சமூக நிலையம்,
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார சபைக்கு புதிய கட்டடத் தொகுதி அமைக்க ரூ.150 மில்லியன் நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,செப்.16

இலங்கை மின்சார சபையின் வட மாகாண பிரதிப்பொது முகாமையாளர் அலுவலகத்துக்கான புதிய கட்டடத் தொகுதி அமைப்பதற்கு 150 மில்லியன் ரூபாவை மின்சார சபையின் இயக்குநர் சபை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று இலங்கை மின்சார சபையின் வடமாகாண பிரதிப் பொது முகாமையாளர் டி.கே.பி.யு. பிரியங்க குணதிலக தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது:

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அருகிலும் 7.2 பரப்புக் காணியில் கட்டடம் அமைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வந்தோம்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகளுக்கு மேலதிக நிலம் தேவைப்படுகிறது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. அதற்காகப் போதனா வைத்தியசாலையுடன் இணைந்த 6 பரப்புக்காணி வைத்தியசாலை நிர்வாகத்துக்கு வழங்கப்பட்டது.

இந்தக் காணியில் வைத்தியசாலைக்கான விடுதி மற்றும் கண் சிகிச்சை விடுதி என்பன அமையவுள்ளன.

மீதியாக உள்ள 1.2 பரப்புக் காணியில் மின்சார சபைக்குரிய உபகரணங்கள் வைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மின்சாரசபையின் வடமாகாண பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்துக்காக 7 பரப்புக்காணியை வழங்கியுள்ளார்.

அந்தக் காணியில் அடுத்த மாதம் ஆரம்பத்திலே அத்திபாரம் இட தீர்மானித்துள்ளோம். இந்தக் கட்டடத்துக்கான கேள்விப் பத்திரங்கள் யாவும் கிடைக்கப்பெற்றுள்ளன.

சகல வசதிகளுடன் கூடிய 5 மாடிக் கட்டடத்தில் வாணிபம், கட்டுமானம் வழங்கலும் பராமரிப்பும், திட்டமிடலும் அபிவிருத்தியும், சக்தி முகாமைத்துவம் ஆகியவற்றுக்கான பிரதம பொறியிலாளர் அலுவலகங்கள் தனித் தனியாக அமைக்கப்படவுள்ளன.

அத்துடன் கணக்காளர் வருமானப் பிரிவு அலுவலகம், வாடிக்கையாளர் கவனிப்பு அலுவலகம், மின்கட்டணம் செலுத்தும் இடம் என்பனவும் இதில் அமைக்கப்படும்.

மின்சார சபையின் வட மாகாணப் பிரதிப்பொது முகாமையாளர் அலுவலகத்துக்கென சொந்தமான கட்டடம் இதுவரை இல்லை.

மாதாந்தம் 75 ஆயிரம் ரூபா வாடகை செலுத்தியே தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-311)

## விவசாய உற்பத்திகளை அதிகரிக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், செப். 16


நெடுந்தீவு, காரைநகர், வேலணை பிரதேசங்களில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் விவசாய உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாகாண விவசாயப் பணிப்பாளர் ஆ.சுப்பிரமணியம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

கடந்த காலபோகத்தில் முதன் முறையாக நிலக் கடலை 6 ஆயிரத்து 500 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்டுள்ளது. பழப் பயிர்ச் செய்கையும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 4 ஆயிரம் ஏக்கரில் சின்ன வெங்காயமும் வவுனியாவில், 22 ஆயிரம் ஏக்கரில் உழுந்தும், முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலக்கடலையும், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் நெற்பயிரும் அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகவும் தேசிய உணவு உற்பத்திக்கு மேற்கூறிய உணவுப் பயிர் களின் அதிகரிப்புக்கான திட்டங்களும் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

### அபிவிருத்திக்காக...



சாவகச்சேரி நகர சபையின் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் நகரசபைச்செயலாளர் கோ.ஜக்கீல் உரையாற்றுகின்றார். (ம-207)

## பளையில் குடிதண்ணீர் தாங்கி அமைக்க காணி வழங்கல்

யாழ்ப்பாணம், செப். 16

யாழ். கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோக நடவடிக்கைக்குப் பளை ஏ-9 வீதியில் காணி வழங்க யாழ். அங்கிலிக்கன் குருமுதல்வர் வண.எஸ். பி. நேசகுமார் முன்வந்துள்ளார்.

கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரனும், பளைப் பிரதேச செயலர் ரி. முகுந்தன் ஆகியோர் எடுத்த முயற்சியை அடுத்தே யாழ். தேசிய நீர்வழங்கல் சபையின் யாழ்.- கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்கு காணி கிடைக்கவுள்ளது.

இதன் மூலம் பளையில் பெரிய நீர்த் தாங்கியும் அதற்கான உப அலுவலகமும் அமைக்கப்படவுள்ளன. இந்தக் காணியை யாழ். அங்கிலிக்கன் குருமுதல்வர் வண. எஸ்.பி. நேசகுமார் இன்னும் இருவாரங்களில் எழுதிக் கொடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது (ம-302)

## சைக்கிள் உரிமத் தகட்டுக் கட்டணம்; 20 ரூபாவாக அதிகரிக்கத் தீர்மானம்

தென்மராட்சி, செப்.16

சைக்கிள் இலக்கத் தகடு உரிமக்கட்டணம் அடுத்த வருடம் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 20 ரூபாவாக அதிகரிக்கச் சாவகச்சேரி நகர சபையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பத்து ரூபா சைக்கிள் இலக்கத்தகட்டின் உரிமக்கட்டணமாக நகர சபையால் அறவிடப்பட்டு வருவதாக சபைக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இதனை அடுத்து இந்தக் கட்டணத்தை 20 ரூபாவாக அதிகரிக்க முடிவு செய்யப்பட்டது.

அத்துடன் அடுத்த வருடம் சைக்கிள் இலக்கத் தகட்டை மக்கள் பெற்று சபையின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.

சபையின் கூட்டம் நேற்று முன்தினம் நகர சபைக் கட்டட மண்டபத்தில் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

நகரசபையின் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னனியின் உறுப்பினர்களான சூசைமுத்து அலெக்ஸாண்டர், நடராசா திருக்குமரன் ஆகியோர் முதன்முறையாக கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சபையின் நடவடிக்கைகளுக்கான நிலையில் குழுக்களான நிதி, சுகாதாரம், அபிவிருத்தி போன்றவை தெரிவு செய்யப்பட்டன.

நகர சபையின் அபிவிருத்தி தொடர்பான பல்வேறு தீர்மானங்கள் சபையில் ஏகமனதாக எடுக்கப்பட்டன. (ம-207)

## ஜெய்ப்பூர் மருத்துவ முகாமில் 200 பேருக்கு புதிய அவயங்கள்

யாழ்ப்பாணம், செப்.15

ஜெய்ப்பூர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் செயற்கை அவயவங்கள் பொருத்தும் மருத்துவ முகாம் கடந்த மூன்றாம் திகதி தொடக்கம் கோண்டாவில் பிரதேச வைத்தியசாலையில்தொடங்கி நடைபெற்று வருகின்றது.

இது வரையில் 200 பேருக்கு இங்கு சிறப்புச் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் போலியோ நோயால் பாதிக்கப்பட்டவர்கள், அங்க அவயவங்களை இழந்தவர்கள் அதற்கான செயற்கை உறுப்புக்களை இலவசமாகப் பொருத்திக் கொள்ள முடியும். வடமாகாணத்துக்கு என சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்ட இந்த மருத்துவ முகாமை இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள 20 வைத்தியர்கள் அடங்கிய குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

சேவை பெற வருபவர்களுக்கு ஏற்ற வகையில் காலையில் அவயவங்களது அளவுகள் எடுக்கப்பட்டு மாலையிலேயே உறுப்புக்களைப் பொருத்திச் செல்லக் கூடியதாக வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

வெளி மாவட்டங்களில் இருந்துவரும் பயனாளிகளுக்கு உணவுவசதி, தேவை ஏற்படும் பட்சத்தில் தங்குமிட வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதுவரையில் 200 பேர் இந்த சிறப்பு முகாம் மூலம் தமது அங்க அவயவங்களுக்கான செயற்கை உறுப்புக்களைப் பொருத்திப் பயன் பெற்றுள்ளனர். ஏற்கனவே வேறு இடங்களில் செயற்கை உறுப்புக்களைப் பெற்றவர்களும் மேலதிகமாகப் புதிதாகப் பொருத்திக் கொள்ள முடியும் எனவும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஒ-10)

## சிறு குற்றச் செய்திகள்

தென்மராட்சி, செப்.16

மதுபோதையில் ஆபத்தை விளைவிக்கக்கூடிய வகையில் சைக்கிளைச் செலுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக் கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரணை செய்த நீதிவான் மா.கணேசராஜா இந்த நபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 2 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (ம-207)

* * *

தென்மராட்சி, செப்.16

மதுபோதையில் வாகனம் செலுத்திய சாவகச்சேரியைச் சேர்ந்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 4 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் இந்த நபருக்கு 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (ம-207)

* * *

வாகனப் பதிவுப் புத்தகம் இன்றி வாகனத்தைப் பயன்படுத்தி வந்த நபருக்கு யாழ்.நீதிமன்றம் மூவாயிரம் ரூபா அபராதம் விதித்தது.

அபராதம் செலுத்தத் தவறின் மூன்று மாத கால சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பதிவுப் புத்தகம் இன்றி வாகனத்தைச் செலுத்திச் சென்ற வேளை கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அவர்கள் மேற்கொண்ட வாகனப் பரிசோதனையின் போது பிரஸ்தாப நபர் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டார். யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் அ.பிறேம் சங்கர் முன்னிலை யில் பட்ட போது இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (ம-4)

* * *

யாழ்ப்பாணம், செப்.16

வீதிப் போக்குவரத்துக்கு இடையூறாகவும் கவனயீனமாகவும் வாகனம் செலுத்திச்சென்ற நபருக்கு யாழ்.நீதிவான் இரண்டாயிரம் ரூபா அபராதம் விதித்தார். அபராதம் செலுத்தத் தவறின் இரண்டு மாத கால சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்கு மாறும் உத்தரவிட்டார்.

யாழ்.பொலிஸ் பிரிவுக்குட்டபட்ட பகுதியில் இவ்வாறு வாகனம் செலுத்திச் சென்றவேளை யாழ்.பொலிஸாரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

யாழ்.நீதிமன்ற மேலதிக நீதிவான் அ.பிறேம்சங்கர் முன்னிலையில் நேற்று முன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நீதிவான் இந்த உத்தரவை விடுத்தார். (ம-4)

* * *

வரமராட்சி, செப்.16

வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவில் சாரதி அனுமதிப் பத்திரமின்றி மது போதையில் மோட்டார் சைக் கிளை செலுத்திய நபருக்கு பருத்தித் துறை நீதிமன்றத்தில் ஆறாயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.


ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வல்வெட்டித்துறைப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் மோட்டார் சைக்கிள் ஒன்றை வழிமறித்து சோதனை செய்த போது சாரதி மது போதையில் இருந்தது இனங்காணப்பட்டது. அத்துடன் சாரதி அனுமதிப்பத்திரமும் வைத்திருக்கவில்லை

தொண்டமானாறு செல்வச்சந் நிதி கோயிலடியைச் சேர்ந்த குறித்த சாரதி பருத்தித்துறை நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதனையடுத்து அவருக்கு ஆறாயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ம-236-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற விசாரணைக்கு லியம் பொக்ஸ் ஆதரவு வேண்டும்

## பிரிட்டனில் ஆர்ப்பாட்டம்




லண்டன், செப், 16

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணைக்கு பிரிட்டன் பாதுகாப்புச் செயலர் லியம் பொக்ஸ் ஆதரவளிக்க வேண்டும் என்று கோரி வடக்கு சொம்செற்தொகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

நெய்ஸ்சீ நகர சதுக்கத்தில் நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தை 'உடனே செயற்படு' (Act Now) என்ற அமைப்பும் மற்றும் தமிழர்களும் இணைந்து முன் னெடுத்துள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொண்டர்கள் வீதியால் சென்றவர்களிடம் இலங்கையில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான துண்டுப் பிரசுரங் களை விநியோகித்ததுடன், அதுதொடர்பான மனுவொன்றிலும் கையெழுத்துகளைத் திரட்டியுள்ளனர்.

வடக்கு சொம்செற்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான லியம் பொக்ஸ், இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து அனைத்துலக விசாரணைக்கு அழைப்பு விடுக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கோரிக்கை விடுத்தனர்.

இதுதொடர்பான மனுவையும், ஆதரவாகத் திரட்டிய கையொப்பங்களையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் லியம் பொக்ஸின் தொகுதிச் செயலகத்தில் கையளிக்கவுள்ளனர்.

போர்க்குற்ற விசாரணைக்கு லியம் பொக்ஸ் ஆதரவு தெரிவிக்கும் வரை தாம் தொடர்ந்து வடக்கு சொம்செற் தொகுதியில் தொடர்ச்சியாக இத்தகைய ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ளப் போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (வ)

# பன்றிக் காய்ச்சல் பரவுகிறதா? மாணவனின் உடல்பாகம் சோதனைக்கு

பன்றிக் காய்ச்சல் நோயால் இறந்து போனார் என்று சந்தேகிக்கப்படும் 14 வயதுப் பாடசாலை மாணவனின் உடற்பாகங்களை மேலதிக ஆய்வுக்காக அரச வைத்தியப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைத்துள்ளதாக மத்திய மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் சாந்தி சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:-

கண்டிக்கு அண்மையிலுள்ள பாடசாலையொன்றில் பயின்று வந்த இந்த மாணவன் பேராதனையில் காய்ச்சலால் போதனா வைத்தியசாலையில் மரணமாகியுள்ளார். அரச பகுப்பாய்வாளரின் அறிக்கை கிடைத்த பின்பே இவரது மரணத்துக்கான காரணத்தை அறிய முடியும் என்று அவர் மேலும் கூறினார். (வ-5)

# விவசாயிகளின் தேவைகளை கேட்டறியும் இலங்கை வங்கி

அச்சுவேலி, செப்.16

விவசாய சம்மேளன வாரியாக அச்சுவேலி இலங்கை வங்கி அதிகாரிகள் குழு கலந்துரையாடல்களை நடத்தி விவசாயிகளின் தேவைகள் வசதிகள் பற்றி தகவல்களைத் திரட்டி வருகின்றது.

அச்சுவேலி இலங்கை வங்கியின் முகாமையாளர் த.புவனேந்திரன் தலைமையிலான குழுவினர் கிராமம் கிராமமாகச் சென்று விவசாய சம்மேளனங்கள் ஊடாக விவசாயிகள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளை நேரில் சந்தித்து ''குறைகேள் கலந்துரையாடலை'' நடத்தி வருகின்றனர்.

கடந்த காலங்களின் விவசாயிகளுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளில் வங்கி செயற் பட்ட விதம் மற்றும் வங்கித் தொழிற்பாடுகள் - விவசாயி களுக்கான கடன் தேவைகள், வாகனக் கொள்வனவு நடைமுறை தொடர்பான ஏற்பாடுகள் மற்றும் 2011 காலபோக கடன் வசதிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. (ம-11)

# பொதுக் கிணறுகளில் துப்புரவுப் பணிகள்

நெடுந்தீவு, செப்.16

நெடுந்தீவு மத்தி மணல் துறைப் பகுதியில் உள்ள பொதுக் கிணறு, கேணிகள் இறைத்துச் சுத்தம் செய்யும் நடவடிக்கையை நெடுந்தீவு பிரதேச சபை தற்சமயம் மேற் கொண்டுள்ளது.

இதேவேளை துறைமுகப் பகுதியில் உள்ள பயணிகள் தங்கும் மண்டபம் வரவேற்பு வளைவு, தூபிப் பகுதிகளுக்கும் புனரமைத்து வர்ணம் பூசும் வேலைகளும் இடம்பெற்றுள்ளன. (வ-111)

# நெடுந்தீவுத் துறைமுகத்தை ஆழப்படுத்தும் பணி துரிதம்

நெடுந்தீவுத் துறைமுகக் கடலை ஆழப்படுத்தும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. துறைமுகத்தின் கடல்பகுதி பெருமளவு தோண்டப்பட்டுள்ளது.

படகுகள் செல்லும் வாய்க்கால் பகுதியில் உள்ள கல் தற்சமயம் படிப்படியாக உடைக்கப்பட்டு வருகின்றது.

கல் உடைப்பதற்கு வெடி வைக்கவேண்டிய தேவை இல்லை எனவும் பணியாளர்களால் கூறப்படுகின்றது. இந்தக் கல் முழுமையாக உடைக்கப்பட்டதும் படகுகள் பாதுகாப்பாக துறை முகத்துக்குள் செல்லக் கூடியதாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது. (வ-111)

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

University of Jaffna will entertain applications upto **30.09.2011** from suitably qualified persons for the under mentioned posts **on contract basis.**

### FACULTY OF SCIENCE

**Assistant Lecturer / Demonstrator** in
Botany/ Chemistry/ Physics/ Zoology/ Fisheries
**Assistant Lecturer/ Instructor** in
Mathematics / Statistic / Computer Science
**Instructor in Computing** (Computer Unit)

### FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE

**Assistant Lecture** in
Accounting/ Marketing/ Human Resource Management / Financial Management

### FACULTY OF AGRICULTURE

**Assistant Lecturer Demonstrator** in
Agronomy/ Agricultural Biology/ Agricultural Chemistry/ Animal Science/ Agricultural Economics / Agricultural Engineering
**Note: Candidates who are awaiting the results of the final degree examinations may also apply for the post of Demonstrator/ Instructor.**

| Post | SALARY SCALE |
|---|---|
| Asst. Lecturer (On Contract) | Rs.25,145/= p.m. (Fixed) |
| Demonstractor/ Instructor (On Contract) | Rs. 20,755/= p.m (Fixed) |

In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in Favour of the **Bursar, University of Jaffna** together with a self - addressed stamped envelope 23X10 c.m in size.

Those who wish to apply for **more than one** post should make **separate applications.**

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institution. Applications received after the closing date and incomplete as well as illegible applicatiopns will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**Registrar,**
University of Jaffna,
Sri Lanka.
14.09.2011

# கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும்

யாழ்ப்பாணம், செப். 16

யாழ். மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் வாழும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குக் கண் பரிசோதனைகளை மேற்கொண்டு மூக்குக் கண்ணாடிகளை வழங்க எம்.ஏ.ஜெயசிங்க மூக்குக் கண்ணாடி நிறுவனம் முன் வந்துள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் பி.பி.4 மணிவரை யாழ். மாநகர சபை முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் 150 ரூபாவுக்கு கோல்ட் பிறேம் கண்ணாடிகளை மேற்படி நிறுவனம் வழங்கவுள்ளது. (வ-7)

**பொருளியல்**
A/L-2012, 2013 பிரிவுகளுக்கான வகுப்புக்கள் உயர் சித்திகள் பெறக்கூடிய முறையில் தனித் தனியாகவும், குழுக்கள் ரீதியாகவும் ...
தொடர்புகளுக்கு:-
0773681219

## (VIMB) திருமண சேவைப் பிரிவு
## WWW.Keethannet .com மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ 1974, திருவாதிரை, 2ம் பாதம், 5'3'', கி.பா 27½, பல கோடி சொத்துக்கள் கொண்ட குடும்பத்தில் ஒரே மகளான Computer கல்வி உட்பட படித்த, மிக அழகான ஆனால் செவிப்புலனில் மட்டும் சிறு குறைபாடுள்ள தன் மகளுக்கு இஞ்சினியர், டாக்டர், லெக்சரர் என்றில்லாமல் தன்மகள் சிறப்பாக வாழ்ந்து சொத்துக்களுக்கும் அழிவில்லாது அனுபவிக்க இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ஓர் அரசாங்க /தனியார் உத்தியோகத்தர் அல்லது சிறுமையாக இருந்து தானாக முன்னேற்றம் கண்ட வியாபாரி மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர்.
(தந்தை ஓர் பேராசிரியர்)
T.P.0771307185
0778501013

VIMB
No: 181, 2nd Cross Street,
Jaffna.

## ALLIANCE FRANCAISE DE JAFFNA
**The Only Official French Language Centre in Jaffna**

*Learn French the French Way*
சர்வதேச மொழியான *French* மொழியை எவரும் இலகுவாக கற்றுக்கொள்ளலாம்...
6 மாதத்தில் முதலாவது உள்ளக பரீட்சைக்குத் தோற்றலாம்.
வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்...
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61,Kachcheri - Nallur Road, Jaffna Phone: 021- 2228093
E-mail: alliancejaffna@yahoo.com
(றக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)
மேலதிக விவரங்களை நேரில்/ தொலைபேசியினூடாக பெறலாம்.

**VIMB**
கல்விச்சேவை
www.
Pirabanet.Com
www.
Keethannet.Com
077 1307185
077 6184434
077 8501013

Dutsch கற்று
Embassy சான்றிதழுக்கு
→
திருமணம் முடிவானவருடன் ஒன்றுசேர or
Student Visa பெற

DAAD office for Coordination
Embassy of the Federal Republic of Germany-Colombo.

(8167) (45)

## புதிய துறை.... புதிய அனுபவம்...
## வேலை வாய்ப்புக்கான அடித்தளம்...
Nation Popular Travels & tours இன்
2நாள் பயிற்சிப்பட்டறை

Tourism,Airticketing
Media and Tourism
Personality Development
போன்ற துறைகளில்..
திகதி- Sep 24.25

சான்றிதழ் வழங்கப்படும்
அனுமதிக்கு முந்துங்கள்

Sms ஊடாக முழு விபரங்களையும் இப்பொழுதே முற்பதிவு செய்யலாம்... 077 217 59 69

HRM
Nation Popular Travels & Tours
No 82, Brown Road, Jaffna.

Hot Line: 0214920920
www.nationtravels.com

35 பேருக்கான மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபரம் கேட்டீர்களா?

## இரண்டு வேடங்களில் ஒலியின் ஓசை!

வெளிநாட்டில் இடம்பெற்ற பல விவாகரத்துக்களுக்கு விசித்திரமான காரணங்களுண்டு.தனது கணவனுடைய குறட்டையொலி தாங்க முடியவில்லை என்று கூறி ஒருத்தி விவாகரத்துக்கு மனுச் செய்வாள்.தனது மனைவியுடைய கடூரமான குரலால் தன்னால் அவளுடன் வாழமுடியாது என ஒருவன் விவாகரத்துக் கோருவான்.மேல் வீட்டில் வதிபவன் படி வழியே நள்ளிரவில் சத்தமெழுப்பியபடி ஏறிச் செல்வது தனது நித்திரையைக் குழப்புவதாக ஒருவன் வழக்குப் போடுவான். பக்கத்து வீட்டுச் சேவல் அதிகாலையில் குரலெழுப்புவது தனக்கு இடைஞ்சலாக உள்ளதாக இன்னொருவன் நீதிமன்றத்தை நாடுவான்.

ஒலியில்லாது உலகில்லை.இறைவனை ஒலி வடிவமாக இந்துக்கள் வேத காலத்தில் வழிபட்டனர். ஆனால் அந்த ஒலி எல்லை மீறினால்-அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்ற வகையில்- பிரச்சினைதான்.

இந்த வெள்ளைக்காரர்கள் நமது ஊர்களில் வாழ நேர்ந்தால் எப்படியிருக்கும்? என நான் எண்ணுவதுண்டு. ஒரு கோவில் திருவிழாவென்றால் நாலாபுறமும் ஒரு மைல் நீளத்துக்கு மின்கம்பங்களிலும், பனை மரங்களிலும் ஒலிபெருக்கிகளைக் கட்டி இரவு பகல் பாராது பெருஞ் சத்தத்துடன் ஒலிபரப்பிக் கொண்டிருப்பார்கள். ஆலய மண்டபத்துக்குள் நிறைய வேண்டிய புனிதமான மந்திர ஒலி மற்றவர்களை எரிச்சலூட்டும் வண்ணம் எல்லா இடமும் பரவும். போதாதற்கு இரவின் அமைதியைக் கிழித்து துள்ளலோசையுடன் பக்திப் பாடல்கள் பரவும்.

கைத்தொலைபேசிப் பாவனையாளர்கள் ஒலிபெருக்கிச் சத்தம் எட்டாத திசையை நோக்கி ஓடிச் சென்றுதான் கதைக்க வேண்டும்.வீட்டுத் தொலைபேசிப் பாவனையாளர் நிலையோ வேறானது. ஒரு திரைப்படத்தில் கடன் வாங்கிய நபருடன் கடன் கொடுத்தவர் தொலைபேசியில் உரையாடுகிறார். கடன் கொடுத்தவரோ திட்டித் தீர்க்கிறார். கடன் பெற்றவரோ 'ஹலோ.. ஹலோ..' நீங்கள் பேசுறது ஒன்றும் விளங்கவில்லை என்று திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருப்பார். அது போலவே வீட்டுத் தொலைபேசிப் பாவனையாளர' நிலையும்.

நெஞ்சுக்கு நிம்மதியளிக்கும் இடம் ஆண்டவன் சந்நிதியாகும். ஆனால் ஆண்டவனுடைய பெயரால் அடுத்தவர்களின் நிம்மதியைக் குலைப்பது எந்த வகையில் நியாயம்? ஆலய நிர்வாகிகளும், அந்தணப் பெருமக்களும் கவனிக்க வேண்டிய விடயம் இது. பெருமளவில் இருப்பதால் இந்து ஆலயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டிருப்பினும், ஏனைய மதத்தவர்கள் இதில் விதிவிலக்கல்ல.

புதிதாக நிறுவப்பட்டுள்ள பல திருச்சபைகளால் நடத்தப்பட்டுவரும் பூஜையின்போது இடம்பெறும் பாடல்களின் ஒலியும் பேரொலியாக ஒலிப்பதை நாம் காணலாம். ஒரு தடவை கொழும்பில் தங்கியிருந்த போது அருகிலுள்ள விகாரையில் விடிய விடிய பிரித் பாராயணம் இடம்பெற்றது.அன்றைய இரவு முழுவதும் எனக்கு நித்திரையில்லை.

நல்லவேளை இப்போது இரவு 10 மணியின் பின்னர் 'ஒலிபெருக்கி பயன்படுத்துவதற்கு அனுமதியில்லை. ஆனாலும் பல வீடுகளில் சினிமாப் பாடல்களைப் பெருஞ் சத்தத்தில் போட்டு இரவின் அமைதியைக் குலைப்பதை யாரும் தடுப்பாரில்லை. கடந்த மாதம் உயர்தரப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை 'இப்படியாக சத்தமிட்டு ஒலிபரப்புவதை யாரும் கண்டு கொள்வதில்லையே' என ஆதங்கப்பட்டார் ஒரு பெற்றார். 'பொலிஸில் அறிவியுங்கள்' என்று நான் சொன்னேன். அதற்கு அவர் அறிவிக்கலாம். ஆனால் அது சாதிப் பிரச்சினையாக நோக்கப்பட்டு தீராத பகையை ஏற்படுத்திவிடும். அதனால் அறிவிக்கவில்லை' என்றார். அவர் சொன்னதும் சரிதான்.

ஒலி நம்மால் அனுபவிக்கப்படும்போது அது இன்னிசை. நம்மால் வெறுக்கப்படும்போது அதுவே நாரசம். இராவணன் சாமகானமிசைத்து இறைவனை மகிழ்வித்தது போல் இன்னிசையால் எல்லோரையும் ஆட்கொள்ள முயற்சிக்கலாமல்லவா?

விழிச்சான் குஞ்சு.

# பெண்கள் மீது வன்முறை என்கிறார் பிளேக் கட்டுக்கதை என மறுக்கிறார் ஹத்துருசிங்க

கொழும்பு,செப்.16

வடக்கில் பெண்கள் மீதான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன என்று தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ரொபேர்ட் ஓ பிளேக் யாழ்ப்பாணத்துக்குச் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்டார்.

யாழ். குடாநாட்டுக்குச் சென்ற ரொபேர்ட் ஓ பிளேக் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்கவை பலாலியில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போது, வடக்கில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன என்றும், இந்த விவகாரத்துக்கும், படையினருக்கும் தொடர்பிருப்பதாக மக்களின் கருத்துகளைக் கேட்டறிந்தபோது தெரிய வந்தது எனவும் கட்டளைத் தளபதியிடம் ரொபேர்ட் ஓ பிளேக் கூறியுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

அதுமட்டுமன்றி, கிறீஸ் மனிதன் விவகாரத்தால் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள பதற்றநிலைமைகளைக் கட்டுப்படுத்துவதற்குப் படைத்தரப்பு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாகவும் ரொபேர்ட் ஓ பிளேக் கேட்டறிந்தார் எனத் தகவல்கள் தெரிவித்தன. அதேபோன்று, உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பிலும் அங்கு கருத்து பரிமாறப்பட்டுள்ளது.

ரொபேர்ட் ஓ பிளேக் தொடுத்த கேள்விக் கணைகளுக்குப் பதிலளித்த மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க , யாழ். குடாநாட்டிலிருந்து இராணுவத்தை வாபஸ் பெறாததற்கான காரணம் உட்பட பல விடயங்கள் தொடர்பாகத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதேவேளை, ரொபேர்ட் ஓ பிளேக் இராணுவத் தரப்பில் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளை அடியோடு மறுத்த ஹத்துருசிங்க, இராணுவத்தினர் கடமையையே செய்கின்றனர். காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொள்ளவில்லை எனக் கூறியுள்ளார்.

இவ்வாறு கூறப்படுவதெல்லாம் ''வெறும் கட்டுக்கதைகளே. அவை நம்பகத்தன்மையற்றவை'' என்றும் ஹத்துருசிங்க சுட்டிக் காட்டியுள்ளார். (ஓ-சி)

# இதுதான் மிருகத்தனமான நடவடிக்கை

## கண்டிக்கிறார் யோகராஜன் எம்.பி.

கொழும்பு,செப்.16

மிருகப்பலி பூஜையைத் தடுப்பதற்காக முன்னேஸ்வரம் காளியம்மன் கோயிலுக்குச் சென்ற அமைச்சர் மேர்வின் சில்வா மிருகத்தனமான நடவடிக்கைகளை மேற்கொண்டமையை ஏற்றுக்கொள்ளமுடியாது.

ஆயிரக்கணக்கான மிருகங்கள் உணவுக்காக வெட்டப்படுகின்ற நிலையில் மிருக பலி பூஜைசெய்ய ஏன் தடை?

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன் நேற்றுமுன்தினம் கேள்வி எழுப்பினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியதாவது:

கடந்த செவ்வாய்க்கிழமை முன்னேஸ்வரம் காளி அம்மன் கோவிலில் மிருகபலி கொடுக்கும் பூஜையை அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட குழுவினர் தடுத்துள்ளனர்.

அதுமட்டுமன்றி, அவர்கள் கோயிலில் நுழைந்து பூசாரிகளுடன் தகாத வார்த்தைகளால் பேசியுள்ளனர்.

கோயிலில் இருந்த பக்தர்களின் மனங்களையும், நம்பிக்கையையும் உடைத்துள்ளனர்.

ஒரு வருடத்தில் இரண்டு லட்சம் மாடுகளும், 50ஆயிரம் ஆடுகளும், ஒரு கோடி கோழிகளும் உணவுக்காக வெட்டப்படுகின்றன.

இந்த நிலையில் இந்த மக்கள் காலங்காலமாகச் செய்து வருகின்ற மிருகபலி பூசையைத் திடீரென அரச அமைச்சர் தடுத்ததன் நோக்கம் என்ன? அமைச்சர் மேர்வின் சில்வா அவரது மிருகத்தனமான நடத் தைகளை வெளிப்படுத்தி, வெறியாட்டம் ஆடியுள்ளதை வன்மையாகக் கண்டிக்கின்றேன் - என்றார். (ச)

# அடாவடித்தனம் புரிவதே சில்வாவின் தொழில்

கொழும்பு,செப்.16

அடாவடித்தனம் புரிவதே அமைச்சர் மேர்வின் சில்வாவின் தொழில். முன்னேஸ்வரம் காளியம்மன் கோயிலில் மிருகபலி பூஜையைத் தடுத்து நிறுத்த அவருக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை. இவ்வாறு நவசம சமாஜக்கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் திருநாவுக்கரசு நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியதாவது:

இந்த அமைச்சர் புகழைத் தேடி அலைகிறார். அந்தப் புகழை நாகரிகமான முறையில்பெற அவருக்குத்தெரியவில்லை. அதனாலேயே இவ்வாறு அடாவடித்தனங்களைப் புரிந்து அநாகரிகமான முறையில் புகழடைய முற்படுகின்றார்.

ஒரு மாதத்தில் கலாசார, சமய விழுமியங்களில் தலையிட்டுஇதனைச் செயற்படாது தடுத்து நிறுத்த அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு அனுமதியில்லை; அதி காரமும் இல்லை. இதனை வன் மை யாகக் கண்டிக்கின்றோம். - என்றார்.

# அமைச்சர் மேர்வினின் அடாவடி அரசியல் லாபம் தேடும் வேலை

## யோகேஸ்வரன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,செப்.16

இந்து என்றால் இம்சை செய்யாதவன் என்று பொருள். எனவே, இந்துக் கோயில்களில் மிருக பலிக்கு இடமளிக்கக்கூடாது என்பதே எமது நிலைப்பாடு என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எனினும் அமைச்சர் மேர்வின் சில்வாவின் இந்த அதிரடி நடவடிக்கைகள் தொடர்பாகக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

இந்துக் கோவில்களில் மிருக பலியைத் தடுப்பதற்கு விரைவில் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்று நாடாளுமன்றில் வலியுறுத்துவேன்.

அரசியல் உள்நோக்கமின்றி [illegible] அமைச்சர் மேர்வின் சில்வா மிருகப் பலியைத்



தடுத்திருப்பாரானால், அவரின்நடவடிக்கைகளை நான் வரவேற்பேன்.

இந்த விடயத்தில் அவர் அரசியல் ஆதாயம் தேட முனைவாரானால், அதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

முன்னேஸ்வரம் பத்திரகாளி அம்மன் கோயிலில் நடைபெற விருந்த நேர்த்திக்கடன் பூசையை அமைச்சர் மேர்வின் சில்வா தனது பரிவாரத்துடன் சென்று தடுத்து நிறுத்தினார்.

இந்து ஆலயங்களுள் மிருக பலிக்கு இடமளிக்கக் கூடாது. அதனை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இதற்குக் காரணமும் உள்ளது. வேத காலத்தில் இந்து ஆலயங்கள் இருக்கவில்லை. ஆகம காலத்திலேயே வந்தன.

மிருக பலி கலாசாரம் வேத காலத்திலேயே இருந்து வந்தது.

ஆனால், ஆகம காலத்தில் அந்த வழமை இருக்கவில்லை.

மிருக பலிக்குப் பதிலாகவே பூசணிக்காய் வெட்டப்படுகின்றது.

ஆகம காலத்தில் கூறப்பட்டுள்ளதற்கு இணங்க நாம் செயற்படவேண்டும் என்பதே எனது கருத்து.

அதேபோன்று இந்து என்றால் இம்சை செய்யாதவன் என்றே பெயர்.

எனவே, இந்து ஆலயங்களில் மிருக பலி இடம் பெறுவதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்- என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டாவளைக்கு தனிப் பிரதேசசபை அமைக்கப்பட வேண்டியது மிக அவசியம்

## பிரதேச செயலர் தெரிவிப்பு

மன்னார், செப்.16

கண்டாவளை பரந்து விரிந்த பெரிய பிரதேசம். இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தியை முழுமையாகச் செயற்படுத்த கண்டாவளைக்கு என்று தனித்துவமான பிரதேசசபை புதிதாக உருவாக்கப்பட வேண்டும்.

கண்டாவளைப் பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு எனக் கண்டாவளைப் பிரதேசசபை உருவாக்க வேண்டும்.

இதன்மூலம் மக்களுக்கான சேவையை அதாவது வீதி, சந்தை, சனசமூக அபிவிருத்தி மற்றும் ஏனைய சேவைகளைச் செய்கின்ற அதேவேளை வருமானத்தையும் உழைத்துக் கொள்ளலாம். விரைவில் கண்டாவளைக்கான புதிய பிரதேசசபை அமைப்பது தொடர்பான தீர்மானத்தை முன்மொழிந்து கிளிநொச்சி அரச அதிபர் ஊடாக வடக்கு மாகாண ஆளுநருக்கு வழங்குவோம் என்று பிரதேச செயலர் சி.சத்தியசீலன் மேலும் தெரிவித்தார். (ம-302)

# மன்னார் ஊர்வலத்தை புலனாய்வுத்துறை பதிவு

## அச்சத்தில் கிராம மக்கள்

மன்னார், செப்.16

மன்னார் முள்ளிக்குளம் கிராம மக்களால் கடந்த 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட மௌன ஊர்வலத்தைப் புலனாய்வுத் துறையினர் படம் பிடித்துள்ளதால், அந்தப் பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது புலனாய்வுத் துறை அதிகாரிகள் ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களில் ஒருவரைக் கூட மிச்சம் விடாது டிஜிற்றல் கமரா மற்றும் கையடக்கத் தொலைபேசி ஆகியவற்றில் புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்துள்ளனர்.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட புலனாய்வுத் துறையினர் மக்களோடு மக்களாகக் கலந்து கொண்டு சகல விடயங்களையும் பதிவு செய்துள்ளனர்.

இதனால் குறித்த நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தில் மிக நீண்ட நாள்களின் பின்னர் மேற்படி ஊர்வலம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-601)

# கிளிநொச்சியில் கசிப்பு விற்ற மூவருக்கு ரூ.1 லட்சம் அபராதம்

கிளிநொச்சி, செப்.16

கிளிநொச்சி தருமபுரம், ஸ்கந்தபுரம், வட்டக்கச்சி ஆகிய பகுதிகளில் கசிப்பு உற்பத்தி செய்து விற்ற மூவருக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, வட்டக்கச்சிப் பகுதியில் சுமார் 1,500 மில்லி லீற்றர் கசிப்பினை வைத்திருந்த ஒருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் மாவட்ட நீதியாளர் பெ.சிவகுமார் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது குறித்த குற்றவாளிக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டது.

இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பகுதியில் 14 போத்தல் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பனவற்றை தன்வசம் வைத்திருந்த ஒருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கிளிநொச்சி மாவட்ட நிதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது குறித்த குற்றவாளிக்கு 60 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் தண்டத்தைச் செலுத்தத் தவறின் ஏழு மாதகால சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் அதே தினத்தில் தருமபுரம் பகுதியில் பதின்மூன்று போத்தல் கசிப்பு வைத்திருந்த ஒருவரை மாவட்ட நீதிவான் நீதிமன்றில் கிளிநொச்சிப் பொலிஸாரால் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் 40 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் தண்டப்பணம் செலுத்தத் தவறின் ஐந்து மாத சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அண்மையில் கிளிநொச்சிப் பகுதியில் கசிப்பு உற்பத்தி அதிகரித்துக் காணப்படுவதாகவும் நாளாந்தம் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-6)

# சுகாதாரப் பரிசோதகர்கள் மன்னாரில் அதிரடி சோதனை

மன்னார், செப்.16

மன்னார் நகரப் பகுதிகளில் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஞா.குணசீலன் தலைமையிலான பொது சுகாதாரப் பரிசோதகர் குழு ஒன்று திடீர் பரிசோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

கடந்த 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சுகாதாரப் பரிசோதகர்கள் மன்னார் நகர்ப் பகுதியில் உள்ள உணவகங்கள், சந்தை, பலசரக்குக் கடைகள் மற்றும் இறைச்சிக்கடைகள் ஆகியவற்றுக்குத் திடீர் எனச் சென்று அதிரடிச் சோதனையை மேற்கொண்டனர்.

இதன்போது பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதோடு சில வர்த்தக நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் டாக்டர் ஞா.குணசீலன் தெரிவித்தார்.

இதேவேளை சில உணவகங்கள் மற்றும் மாடு கொள்களம் என்பவற்றை மூடுவதற்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும் பொதுமக்கள் தமக்குத் தேவையான உணவுப்பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது விழிப்புடன் இருக்குமாறும் டாக்டர் ஞா.குணசீலன் மேலும் தெரிவித்தார். (எ-601)

தொழில் வாய்ப்பைத் தேடும் இளைஞர் யுவதிகளே
G.C.E. A/L 2011 மாணவர்களே

O/L சித்தியெய்த முடியவில்லையா? OR பல்கலைக்கழகம் தெரிவாகவில்லையா? OR தொழில்சார் கற்கைநெறியிலான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் பெற எண்ணியுள்ளீர்களா?

* தொழில்சார் கற்கை நெறிகள் ஆரம்பம்
  Upgrade Your Knowledge and prosper in Life
* உங்கள் இலட்சியம் சட்டத்தரணியாவதா?
  சட்டக்கல்லூரி அனுமதி வகுப்பு ஆரம்பம் **Law Entrance Class**
  ஆசிரியர் ஹபீப் றிபான் (இலங்கை சட்டக்கல்லூரி)
* உங்கள் இலட்சியம் கணக்காளராவதா?
  AAT வகுப்பு ஆரம்பம் Foundation, Intermediate and Final Level
  கட்டணம் 5000 ரூபா மட்டும்
* உங்கள் இலட்சியம் கணினி படவரைஞராவதா?
  Dip In Computer Aided Designing
  ஆசிரியர் Eng. N. M. M. Nihaaj B.SC. (Eng) Hons, AMIESL
  Engineer, Chief Engineer's Office, Buildings Department, Vavuniya.
* உங்கள் இலட்சியம் **Computer Hardware Technician** ஆவதா?
  Dip In Computer Aided Designing
  5 நாள்கள் மட்டும் பயற்சி.
  பயிற்சி முடிவில் PIV கணினி ஒன்று இலவசமாக வழங்கப்படும்
* உங்கள் இலட்சியம் **Mobile Phone Technician** ஆவதா?
  Dip In Mobile Phone Repairing
  5 நாள்கள் மட்டும் பயற்சி.
  100இற்கும் மேற்பட்ட நுட்பங்கள்
* உங்கள் எதிர்கால இலட்சியம் குடிசார் எந்திரவியலாளர் ஆவதா? இன்றே இணைந்து கொள்ளுங்கள்.
  **City & Guilds – Civil Engineering**
* வங்கி போன்ற நிதி நிறுவனம் ஒன்றில் தொழில்பார்ப்பது உங்கள் இலக்காயின் இணைந்து கொள்ளுங்கள்
  IBSL - CBF
* லண்டன் போன்ற நாடுகளுக்கு மாணவர் விசாவில் செல்ல உள்ளீர்களா?
  **IELTS**

மேற்படி கற்கைநெறிகளுக்கான பதிவு செய்தல் பரீட்சைக்கு விண்ணப்பித்தல் மற்றும் கடந்தகால வினாப் பத்திரம் பெற்றுக்கொள்ளல் போன்ற சேவைகள் பெற்றுக் கொள்ளலாம். இன்றே இணைந்து கொண்டு தரமான உயர் கல்வியினைப் பெற்றுக்கொள்ளுங்கள்

**Elite Computing and Business College**
**No.1/5, Convent Road, Jaffna,**
**Tel: 021 4922396, 077 1589376**

(ஆஸ்பத்திரி வீதி நல்லூர் கோயில் வீதி சந்திக்கும் சந்தியில் இருந்து 200m ...)
Vavuniya - 024 4924974, Kilinochchy - 024 4924969, Mullaittivu - 0773133065 Mannar - 0234920634



தர்மபுரம் முத்துமாரி அம்பாள்
ஆலய கும்பாபிஷேக விழா
இனிதே நடைபெற வாழ்த்துகின்றோம்
தர்மபுரம் நெத்தலியாறு
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய
புனராவர்த்தன அஷ்டபந்தன ஏக குண்டபக்ஷ
மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்
(குடமுழுக்கு)

கர்மாரம்பம் - 13.09.2011 செவ்வாய்க்கிழமை
நண்பகல் 12.33 மணி வரையுள்ள சுபவேளையில்
ஆரம்பமாகியது.
எண்ணெய்க் காப்புச் சாத்துதல் - 15.09.2011
வியாழக்கிழமை
காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரையும்
நடைபெற்றது.
மகா கும்பாபிஷேகம் இன்று 16.09.2011 காலை 06.03
மணி தொடக்கம் 07.33 மணிவரையுள்ள சுபதின
சுப வேளையில் நடைபெறும்.


அன்னை களஞ்சியம்
தர்மபுரம்,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் குவாட்டி வளர்ப்புத் திட்டம் ஆரம்பம்

கிளிநொச்சி, செப்.16

கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு இலங்கை தேசிய நீர் வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து மன்னார் நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட அச்சங்குளம் கிராமத்தில் குவாட்டி என அழைக்கப்படும் மட்டி வளர்ப்புத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.



குறித்த வளர்ப்புத் திட்டமானது 'நெக்டா' அமைப்பின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அச்சங்குளம் கிராமத்தில் உள்ள கடற்பரப்பில் 5 மாதங்களில் பயன்தரக்கூடிய குவாட்டி என அழைக்கப்படும் ஒரு வகை மட்டி வளர்ப்புத் திட்டம் ஒன்று கடந்த ஐந்து மாதங்களுக்கு முன் மேற்படி திட்டத்தின் கீழ் குறித்த கிராமத்தைச் சேர்ந்த மக்களால் இடம்பெற்று வருகின்றது.

குறித்த வேலைத் திட்டத்தைப் பார்வையிடுவதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரத்ன அச்சங்குளம் கிராமத்துக்குச் சென்று கடலில் படகு மூலம் மேற்படி செயற்றிட்டம் இடம் பெறும் இடத்துக்குச் சென்று பார்வையிட்டுள்ளார்.

இதன்போது மேற்படி குவாட்டியை ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதாக உற்பத்தியாளர்களிடம் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமக்கு தொழில் செய்வதற்கு தெப்பம், கடலில் இருந்து குறித்த இடத்துக்குச் செல்வதற்கு படகு என்பன தேவைப்படுவதாக தொழிலாளர்கள் அமைச்சரிடம் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து உடனடியாக அவற்றைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்தார்.

(எ-601)

# கிளிநொச்சியில் 5,000 புதிய வீடுகள்

கிளிநொச்சி, செப்.16

கிளிநொச்சி மாவட்டத்தில் உலக வங்கியின் நிதியுதவியுடன் நேர்ப் திட்டத்தின் கீழ் 2004 இல் ஆரம்பிக்கப்பட்ட புதிய வீடுகளை அமைக்கும் பணிகள் இந்த ஆண்டின் கடைசிப் பகுதியில் நிறைவுபெறவுள்ளது.

இந்தத் திட்டத்தில் 5414 புதிய வீடுகளையும் 92 வீட்டின் பகுதி திருத்த வேலைகளும் என 5506 வீடுகளையும் அமைப்பதற்கான பணிகள் பூர்த்தியடையவுள்ளது.

இதற்கென உலக வங்கியால் 1719 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் 3324 வீடுகள் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளதாகவும் 2048 வீடுகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப் பள்ளி ஆகிய பகுதிகளில் இந்த வீட்டுத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த விடயம் தொடர்பாக மேற்படி பகுதி நான்கு பிரதேச செயலாளர்கள், நேர்ப் திட்ட உத்தியோகத்தர்களுடனான சந்திப்பு ஒன்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாவட்ட அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு இடம் பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவிக்கையில், வீட்டுத்திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் சரியான முறையில் இந்த வீடுகளை அமைக்க வேண்டும் என்றும் இந்த வீடுகளை உரியகாலத்தில் அமைத்து முடிக்கத் தவறுபவர்களுக்கு எதிர்காலத்தில் எந்தவிதமான திட்டங்களும் வழங்கப்படமாட்டாது எனத் தெரிவித்தார்.

இதற்கிடையில் கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் தற்போது வீடுகள் இன்றி இருக்கும் குடும்பங்களில் சொந்தக்காணி இருந்தும் வீடுகள் இல்லாமல் இருக்கும் குடும்பங்களின் விவரங்களையும், காணியும், வீடும் இல்லாமல் இருக்கும் குடும்பங்களின் விவரங்களையும் சேகரித்துத் தருமாறு பிரதேச செயலர்களுக்கு அரச அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.. (எ-06)

## சிறப்பாக செயற்படும் வவுனியா நகரசபை பூங்கா

வவுனியா நகரசபைக்குக் கீழ் செயற்பட்டு வரும் பொழுதுபோக்குப் பூங்கா கடந்த காலங்களிலும் பார்க்க தற் போது சிறப்பாக செயற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் இந்தப் பூங்காவில் முறைகேடான சம்பவங்கள் நடைபெற்று வந்ததை அவதானிக்க முடிந்தது.

இதையடுத்து தற்போது இந்தப் பூங்காவின் வெளிப்புற பகுதியிலேயே பல அறிவுறுத்தல் பலகைகள் இடப்பட்டு, பூங்கா சீர் செய்யப்பட்டு, திங்கள் முதல் வெள்ளிவரை பி.ப. 3 மணி தொடக்கம் 6 மணிவரையும் சனி, ஞாயிறு தினங்களில் மு.ப 10 மணி தொடக்கம் பி.ப. 6 மணி வரை திறந்திருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பூங்காவில் மது அருந்துதல், புகைத்தல் போன்றவையும் தடை செய்யப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து தினமும் பெருமளவானோர் தங்கள் குடும்பத்துடன் இந்தப் பூங்காவுக்கு வருகை தருவதைக் காணக்கூடியதாக இருப்பதாகத் தெரிவிக்கின்றனர். (எ-421)

## ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்கள் பாதிப்பு

கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்தில் விஞ்ஞானம், விவசாயம் ஆகிய இரு பாடங்களுக்கு ஆசிரியர்கள் பணியில் இல்லாமையால் மாணவர்கள் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் முக்கிய பாடசாலையான இந்தப் பாடசாலையில் உள்ள ஆசிரிய நெருக்கடி நீண்ட நாள்களாக நிரப்பப் படாமல் உள்ளது.

அக்கராயன் மகாவித்தியாலயத்தில் விஞ்ஞான, விவசாய ஆசிரியர்கள் இல்லாமையால் 800 மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-410)

# கல்லாறு பிரதேசத்தில் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை

### கிளிநொச்சி திட்டப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.16

கல்லாறு பிரதேசத்தில் குடிதண்ணீருக்காக அல்லல்படும் 250 குடும்பங்களுக்கு பிரமந்தனாறு குளத்தின் அருகில் கிணறுகளை அமைப்பதற்கு தற்போது யு.என். கபிற்றாற் நிறுவனம் வழங்கிய 15 மில்லியனை உடன் பயன்படுத்துவோம் என தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் யாழ். கிளிநொச்சி திட்டப்பணிப்பாளர் எந்திரி.தி. பாரதிதாசன் தெரிவித்தார்.

கடந்த 9 ஆம் திகதி வெள்ளிக் கிழமை கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் கல்லாறு பிரதேச மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினை மற்றும் சிறுவர் முதல் வயோதிபர் வரை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில், கல்லாறுப் பிரதேசம் பரந்த பிரதேசமாக இருப்பினும் குடிதண்ணீர் வழங்கக் கூடிய நீர்நிலைகள் இன்றிக் காணப்படுகின்றன.

எனினும் பிரமந்தனாறுக் குளத்தினை அண்டிய பகுதியில் கிணறு அமைத்து குடி தண்ணீரினை மக்களுக்கு பைப் மூலம் வழங்க முடியும்.

இதற்கு முதற்கட்டமாகத் தண்ணீரின் தரம், கொள்ளவுத் தன்மை தொடர்பாக பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் இதற்கான செலவுகளை யு.என். கபிற்றாற் நிறுவனம் வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பிரதேச செயலர் எஸ்.சத்திய சீலன் கருத்துக் கூறுகையில்; யு.என். கபிற்றாற் நிறுவனம் 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் 250 வீடுகளை அமைத்துத் தந்துள்ளது.

எனினும் குடிதண்ணீர் பெரிய பிரச்சினையாக மாறிவிட்டது. எனவே அரச அதிபர் இந்தத் திட்டம் தொடர்பாக விரிவாக ஏற்கனவே விளக்கியுள்ளார். ஆகவே உடன் குடிதண்ணீரினை வழங்கிக் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்றார்.

மேற்படி கூட்டத்தில் எந்திரி ஜெ.ஏ.ஜெ. அஜந்தன், எந்திரி ஆர். சுவீந்தன், எந்திரி எஸ். விகிர்தன், எந்திரி என். சுதாகரன், எந்திரி க.அமலன், மாவட்ட முகாமையாளர் சு.காரியப்பர், நிகழ்ச்சித் திட்ட அதிகாரி எல். கொலின்ரன், எந்திரி தி.பாரதிதாசன், சமூகவியல் நிபுணர் செ.ரமேஷ் மற்றும் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-302)

## முத்துமாரி அம்மன் கும்பாபிஷேக விழா இன்று

தர்மபுரம் நெத்தலியாறு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன ஏக குண்டபக்ஷ மகாகும்பாபிஷேக இன்று காலை 6 மணி தொடக்கம் 7.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்த ஆலயத்தின் கர்மாரம்பம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நேற்று எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அடியவர்கள் ஆலயத்துக்கு வரும்போது பால், இளநீர், பூ ஆகியவற்றைக் கொண்டு வரும்படி ஆலய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர்.

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதாகிய இளைஞர் விடுதலை

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்ட கிளிநொச்சியைச் சேர்ந்த இளைஞர், அவரது குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நிராகரிக்கப்பட்டதை அடுத்து யாழ்.மேல் நீதிமன்றினால் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

றஜீவ் வீதி, தேவநகர் மேற்கு, கிளிநொச்சியைச் சேர்ந்த நல்லையா சிறீதரன் என்பவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவராவார்.

1996 ஆம் ஆண்டு ஆயுதப்பயிற்சி பெற்றமை, நான்கு இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் மேற்கொண்டமை ஆகிய நான்கு குற்றச்சாட்டுகளில் இவர் கைது செய்யப்பட்டிருந்தார். கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் 2009 இல் இவர் முன்னிலைப்படுத்தப்பட்டார். பின்னர் 2010 ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் யாழ். மேல் நீதிமன்றத்துக்கு இந்த வழக்கு மாற்றப்பட்டது.

யாழ்.மேல் நீதிமன்ற நீதிவான் எஸ்.பரமராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இவர் மீதான குற்றச்சாட்டுகள், வேறு ஆதாரங்கள் இன்மையால் இவர் நீதிமன்றத்தால் நிரபராதி என அறிவிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். (எ-4)

# பூநகரி பிரதேச சபைக்கு தெரிவான உறுப்பினர்கள் புதன் பதவி ஏற்பு

சண்டிலிப்பாய், செப்.16

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பூநகரி பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பதவி ஏற்பு வைபவம் நேற்றுமுன்தினம் புதன் கிழமை முற் பகல் 10.30 மணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

சபையின் தலைவர் பொ.ஸ்ரீஸ்கந்தராஜா மங்கள விளக்கினை ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து ஏனைய உறுப்பினர்களும் மங்கள விளக்கினை ஏற்றி வைத்தனர்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை நிகழ்த்திய பிரதேச சபைச் செயலாளர் திருமதி என். சிவகுமார் சபையின் கடந்த கால நடவடிக்கைகளைப் பற்றி எடுத்துக்கூறினார். இதனைத் தொடர்ந்து உறுப்பினர்களின் கன்னிப் பேச்சும் இடம் பெற்றது.


இந்த நிகழ்வில் விசேட பிரதிநிதியாக கலந்து கொண்ட வலிகாமம் மேற்குப் பிரதேச சபை உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஊடகச் செயலாளருமான ரி.நடேந்திரன் உறுப்பினர் அனைவரும் கட்சி வேறுபாடு இன்றி பிரதேச சபையின் வளர்ச்சிக்காக பாடுபடுவதுடன் நகரசபையாக தரம் உயர்த்துவதற்கும் முயற்சிக்க வேண்டும் என்றும் கேட் டுக்கொண்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த 6 உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த 4 பேரும் என மொத்தம் 10 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(எ-115)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மென்பொருளைத் தேடாமல் ஒரே கிளிக்கில் 'ஓபின்' செய்ய வேண்டுமா?




நாம் கணினியில் கட்டண மென் பொருள்கள், இலவச மென்பொருள்கள் என பல்வேறு வகையான மென் பொருள்களை உபயோகிக்கிறோம். இந்த மென்பொருள்களை நாம் தினமும் திறந்து டெஸ்க்ரொப்பில் உள்ள அந்த மென்பொருளின் ஷார்ட் கட் ஐகான் மூலம் திறப்போம் அல்லது Start Windows Programs சென்று திறப்போம். இவ்வாறு கணினியில் மென் பொருளை திறக்க பல வழிகள் உண்டு. அதில் ஒன்று தான் நாம் இப்பொழுது பார்க்க போகும் Short Cut Key உருவாக்கி அதன் மூலம் திறப்பது. உலகில் பெரும்பாலான கணினிகளில் உபயோகிக்கப்படும் விண்டோஸ் இயங்கு தளத்தில் இதற்க்காக ஒரு வசதியை அளித்துள்ளனர். இதற்காக நீங்கள் எந்த மென்பொருளும் கணினியில் இணைக்க வேண்டியதில்லை.

தினமும் உபயோகப்படுத்தும் மென் பொருள்களுக்கு தயாரித்து விட்டால் மவுஸ் பயன்படுத்தாமல் Short Cut key கொடுத்தாலே திறக்கும். இந்த வசதியை உருவாக்க பெரிய தொழில் நுட்ப அறிவு எதுவும் பெற்றிருக்க தேவையில்லை சுலபமாகச் செய்து விடலாம்.

நீங்கள் shortcut Key உருவாக்க நினைக்கும் மென்பொருள் மீது வலது கிளிக் செய்து Properties கிளிக் செய்யுங்கள். உங்களுக்கு இன்னொரு விண்டோ திறக்கும். அதில் Shortcut tab தேர்வு செய்து கொள்ளுங்கள். அந்த டேபில் Shortcut Key என்ற பகுதியில் None என்று இருக்கும் அதில் கிளிக் செய்து ஏதாவது ஒரு கடித்தை அழுத்துங்கள். உதாரணமாக 1 அழுத்தினால் உங்களுடைய shortcut key Ctrl+Alt+1 என வரும். அ அழுத்தினால் Ctrl+Alt+A என வரும் இவ்வாறு உங்களுக்குத் தேவையான திறப்பை தயாரித்துக் கொள்ளுங்கள். உங்களுக்குத் தேவையான திறப்பைத் தேர்வு செய்தவுடன் கீழே உள்ள Apply& Ok கொடுத்து விடுங்கள்.

அவ்வளவு தான் இப்பொழுது நீங்கள் உருவாக்கிய shortcut key அழுத்துங்கள். அந்த மென்பொருள் உடனே ஓபன் ஆகிவிடும். இவ்வாறு பல மென்பொருள்களுக்கு நீங்கள் திறப்பை உருவாக்கி கொள்ளலாம்.

# GSM தொழில்நுட்பம் பற்றிய சில தகவல்கள்

**பெரும்பாலான மக்களால் பயன்படுத்தப்படும் மொபைல் சிஸ்டம் தான் GSM. இன்னொரு மாற்றான சி.டி.எம்.ஏ என்ற மொபைல் பிரிவு இதைவிடவும் சிறப்பான தொழில்நுட்பத்தின்**

அடிப்படையில் இயங்குவது என்றாலும் ஜி.எஸ்.எம் சிஸ்டம் தான் பெரும்பாலான இடங்களில் இயங்குகிறது.

இந்தியாவில் இரண்டு பிரிவுகளும் இயங்குகின்றன. ஆனால் ஜி.எஸ்.எம் வகை தான் அதிக வாடிக்கையாளர்களையும், நிறுவனங்களையும் கொண்டுள்ளது.

Line In கணினி அல்லது சவுண்ட் கார்டில் வெளியில் இயங்கும் ஓடியோ சாதனத்தை இணைக்கும் வழி.

Back up Domain Controller: விண்டோஸ் வலையமைப்பில் இணைக்கப்பட்டுள்ள கணினிகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கணினிகள் ஆரம்ப டொமைன் கட்டுப்படுத்தலின் பின்தொடர்வாகச் செயற்படுவதனை இது குறிக்கிறது.

அவை செயல் இழக்கையில் இந்த பின்தொடர்வு டொமைன் கட்டுப்பாடுகள் அதன் செயற்பாட்டை மேற்கொள்கின்றன.

இவை பாதுகாப்புச் சார்ந்த செயற்பாடுகளையும் மேற்கொள்ளும் வகை யில் அமைக்கப்பட்டிருக்கும்.

Event Handler: ஒரு செயற்பாட்டினைத் தூண்டும் இன்னொரு செயற்பாடு. ஒரு பட்டனில் மவுஸ் கர்சரை அழுத்தி விடுகையில் அடுத்த செயற்பாடு மேற்கொள்ளப் படுகிறதல்லவா. அந்த அழுத்தும் செயலின் பின்னணியே Event Handler என அழைக்கப்படுகிறது.

# உங்கள் எதிரியை பழிவாங்க உதவும் இணையத்தளம்

உங்களுக்கு யாராவது எதிரிகள் இருக்கிறார்களா? அவர்களை நேருக்கு நேர் பழிவாங்க முடியாமல் உள்ளதா? பரவாயில்லை விடுங்கள் பழிவாங்கும் எண்ணம் கூடாதுதான். இருந்தாலும் உங்கள் மனதிருப்திக்காக அவர்களைப் பழிவாங்க ஒரு வழி இருக்கிறது கேளுங்கள். இதற்கு அவர்களின் புகைப்படம் இருந்தால் போதுமானது. உங்கள் எதிரியை நீங்கள் ஒரு பேயை விட கேவலமாக அசிங்கப்படுத்தி சந்தோசப்பட்டுக்கொள்ளுங்கள். முதலில் நாம் தந்துள்ள தளத்திற்கு சென்று உங்கள் தெரிவான புகைப்படத்தை தேர்ந்தெடுத்து விளையாட ஆரம்பியுங்கள். உங்கள் எதிரியின் அழகான புகைப்படம் கேவலமானதை இட்டு சந்தோசப்படுங்கள். முடிந்தால் அவருக்கே அனுப்பி விடுங்கள்.

**- http://dsc.discovery.com/sharks/shark-yourself/**

# நோக்கியாவுக்கான PC Suite மென்பொருளை தரவிறக்கம் செய்வதற்கு

பேசுவதற்கு மட்டும் தான் கைத் தொலைபேசிகள் என்ற நிலை மாறி தற்போது கணினியில் செய்யகூடிய அனைத்து வேலைகளையும் கைத் தொலைபேசிகள் மூலமாகவும் செய்து விடலாம்.

நாம் எம்முடைய கைத்தொலை பேசிகளை கணினியுடன் இணைத்து பல வசதிகளை பெற PC Suite மென் பொருளை கணினியில் இணைத்து இருக்க வேண்டும்.

இந்த PC Suite மென்பொருள் நாம் கைத்தொலைபேசி வாங்கும் போதே எமக்குக் கொடுத்து இருப்பார்கள். ஆனால் அது பழைய பதிப்பு மென்பொருளாக இருக்கலாம்.

இப்பொழுது பிரபல நிறுவனமான நோக்கியா கைத்தொலைபேசிகளுக்கான PC Suite மென்பொருளின் புதிய பதிப்பு வெளிவந்துள்ளது.

இதனை தரவிறக்கம் செய்து உபயோகப்படுத்த லாம்.http://tech.lankasri.com/view.php?

# AVG Anti Virus மென்பொருளை தரவிறக்கம் செய்து கொள்வதற்கு

நாம் பல்வேறு வகையான இலவச Anti Virus மென்பொருள்களை உபயோகப் படுத்தி கொண்டிருக்கிறோம்.

இதில் இந்த AVG Anti Virus மென்பொருளும் மிகப்பிரபலமானது. கணினியில் தீங்கிழைக்கும் கோப்புகளைக் கண்டறிந்து சரியாக நீக்குகிறது என்பதால் உலகளவில் பெரும்பாலான கணினிகளில் உபயோகப்படுத்தப்படுகிறது.

இப்பொழுது இதன் புதிய பதிப்பை வெளியிட்டுள்ளனர் அது தான் AVG Anti Virus 2012. புதிய பதிப்பில் வைரஸ்களை கண்டறிய பல நுட்பங்களை புகுத்தி உள்ளனர். மென்பொருளின் சிறப்பம்சங்கள்: உலகளவில் 98 மில்லியன் கணினிகளில் இந்த மென்பொருள் உபயோகப்படுத்தப்படுகிறது.

இலவச அன்டி வைரஸ் மென்பொருள்களில் பல சோதனைகளில் வெற்றி பெற்று பல விருதுகளை வாங்கியுள்ள மென்பொருள்.

உபயோகிப்பதற்கும் மிக சுலபமான மென்பொருள். AVG Anti Virus 2012 இயங்கும் பொழுது உங்கள் கணணியின் வேகத்தைக் குறைக்காது. உங்களுடையை கணினியில் உள்ள ரகசியத் தகவல்களை மிகவும் கவனமாகப் பாதுகாக்கும்.

http://tech.lankasri.com/view.php?22KOld0bcF90Qd4e3SMC202cBnB2ddeZBnJ302eCAA2e4609racb3lOA42

# உலகின் மிகச் சிறிய கம்பியில்லா விசைப்பலகை கண்டுபிடிப்பு

கடன் அட்டை அளவிலான மிகச்சிறிய கம்பியில்லா விசைப்பலகை (கீபோர்ட்) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த அரிய கண்டுபிடிப்பு சீனாவின் தெற்குப் பகுதியான குவாங்டாங் மாகாணத்தில் உள்ள ஒரு நிறுவனம் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அண்மையில் கொங்கொங்கில் நடத்தப்பட்ட ஒரு கண்காட்சி நிகழ்ச்சியில் இந்த மிகச்சிறிய விசைப்பலகை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கல்முனை மாநகரசபைத் தேர்தலில்

# கூட்டமைப்பின் பலத்தை மீண்டும் உலகறியச் செய்ய சந்தர்ப்பம்

## பொது ஊழியர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

நாவிதன்வெளி, செப்.16

எமது உரிமைக்காகவும், தமிழ் இனத்தின் சுயகௌரவத்திற்காகவும் எதிர்வரும் கல்முனை மாநகர சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்பலத்தை உலகறியச்செய்யும் சந்தர்ப்பம் இதுவேயாகும் என்று அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்துள்ளார்.

கல்முனை சணச சமஜா மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்காகவும் உழைக்கும் வர்க்கத்துக்காகவும் குரல் கொடுத்துவரும் அகில இலங்கை அரசபொது ஊழியர் சங்கம் அன்று முதல் இன்றுவரை தமிழ்த் தேசியம் என்ற அடிப்படை நிலைப்பாட்டிலிருந்து மாறவில்லை.

இரண்டு இணை நிறுவனமாகக் கொண்ட அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் எந்தவொரு சுயலாபங்களைக் கொண்டும் செயற்படவில்லை. அத்துடன் எந்த சக்திக்கும் விலைபோகவும் இல்லை.

அன்றிலிருந்து இன்று வரை தமிழ்த் தேசியம் கொண்ட என்ற அடிப்படையிலேயே எமது நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

இந்த நிலையில் சில சுயநலம் கொண்டவர்கள் கல்முனை மாநகரசபைத் தேர்தலை முன்னிறுத்தி எம்மைப் பற்றிய விசமப் பிரசாரங்களைக் கட்டவிழ்த்து வருகின்றனர்.

இனவாத, பாகுபாடற்ற எம்மைப் பற்றியும், எமது சேவைகள் பற்றியும் ஜீரணிக்க முடியாத சில விசமிகள் தொடர்பில் சகல தரப்பினரும் விழிப்புடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு- என்றார்.

# லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு; சிறைச்சாலை அதிகாரி கைது

திருகோணமலை,செப்.16

திருகோணமலை சிறைச்சாலை உயர் நிலை அதிகாரி ஒருவர் லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று திருகோணமலை தலைமையகப் பொலிஸார் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளனர்.

திருமலை சிறைச்சாலையிலிருந்து அனுராதபுர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட நகுலேஸ்வரன் என்பவரை மீண்டும் திருமலை சிறைச்சாலைக்கு மாற்றித் தருவதாகக் கூறி 25ஆயிரம் ரூபாய் பணமும், கையடக்கத்தொலைபேசி ஒன்றும் விளக்கமறியலில் உள்ள நபரின் மனைவியிடம் லஞ்சமாகக் கேட்டுள்ளார். பின்னர் அந்தவிடயத்தை மனைவி கணவருக்கு கூறிய வேளை கடந்த திங்கட்கிழமை வழக்கு விசாரணைக்கு வந்த கணவர் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் மனைவியிடம் சொல்லப்பட்ட விடயங்களைக் கூறியுள்ளார்.

இந்த விடயத்தைக் கருத்திற்கொண்ட நீதிவான் இந்த அதிகாரியை லஞ்சம் வாங்கும் போது கைது செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கடற்கரைப் பகுதியில் வைத்து முற்பணமாக ஐயாயிரம் ரூபாய் பணத்தையும், கையடக்கத் தொலைபேசியையும் இவர் வாங்கிய வேளையில் கைது செய்யப்பட்டார் என்று திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ச)

# மலையகத்தில் மண்சரிவு அபாயம்

கண்டி, செப்.16

நாட்டில் கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் மழை காரணமாக மூன்று மாவட்டங்களில் மண்சரிவு ஏற்படும் அபாயம் காணப்படுகிறது என்று தேசிய கட்டட பரிசோதனை அமைப்பின் மண்சரிவு அபாயப் பிரிவின் பொறுப்பதிகாரி ஆர்.எம்.எஸ். பண்டார தெரிவித்துள்ளார். இரத்தினபுரி, கேகாலை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலேயே இந்த மண்சரிவு அபாயம் காணப்படுகிறது என்று இந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் இரத்தினபுரி மாவட்டத்தின் எஹெலியகொட, பெல்மடுல்ல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலும், கேகாலை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட எட்டியன் தோட்டை, ருவன்வெல்ல, தெரணியகல, புலத் கொஹுபிட்டிய ஆகிய பிரதேசங்களிலும், நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ கோரலய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுமே இந்த மண்சரிவு அபாயம் காணப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நுவரெலியா மாவட்டத்தின் ஹற்றன், மஸ்கெலியா, நோர்வூட், கினிகத்ஹேன பிரதேசங்களிலும், அவிசாவளை, ஹற்றன் பிரதான வீதியும் தாழிறங்கும் அபாயம் காணப்படுகிறது. இந்தப் பிரதேச மக்களை அவதானத்துடன் இருக்குமாறு இந்த அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. (ச)

### நல்லதே நடக்கட்டும்....



கல்முனை மாநகர சபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஏ.அமிர்தலிங்கத்தின் தேர்தல் பிரசார ஆரம்ப நிகழ்வு நற்பிட்டிமுனை கணேசர் ஆலயத்தில் நடைபெற்றபோது வேட்பாளர் அமிர்தலிங்கம் தமது முதலாவது தேர்தல் பிரசார துண்டுப்பிரசுரத்தை மூத்த வாக்காளர் திருமதி முருகேசு இராசமாணிக்கத்துக்கு வழங்குகின்றார். (30)

# மட்டக்களப்பில் கருவாடு உற்பத்தி

மட்டக்களப்பு, செப்.16

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் வழிகாட்டலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன்முறையாக கருவாடு, மாசிக் கருவாடு என்பன தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரட்னவின் ஆலோசனையின் பேரில் இதுதொடர்பான செயற்பாட்டுடன் கூடிய பயிற்சி செயலமர்வு கடந்த நான்கு நாள்கள் நடைபெற்றன.

நாரா மற்றும் நெக்டா நிறுவனங்களின் அனுசரணையுடன் மாவட்ட கடற்றொழில் திணைக்களம் இதனை ஏற்பாடு செய்திருந்தது. மாவட்ட கடற்றொழில் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் டொமினிக் ஜோர்ஜ் தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளையும் சேர்ந்த பெருமளவிலானோர் கலந்து கொண்டனர். (ச-21)

# இடியுடன் கூடிய பெருமழை; மட்டு. இயல்பு நிலை பாதிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது இடியுடன் கூடிய மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன. இதனால் போக்குவரத்துச் சீர்கேடுகள் நிலவுகின்றன.

நேற்று மாலை 3 மணிக்கு ஆரம்பமான பெரு மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பருவமழை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்ற போதிலும் பருவமழை நவம்பர், டிசெம்பரிலேயே பெய்வது வழமையாகும். இடிமின்னல் காரணமாக மின்சார உபகரணங்களைப் பாவிப்பதிலும் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (ச-21)



ஈரான் உயர் மட்ட தூதுக்குழுவினர் நேற்று முன்தினம் புதன்கிழமை மட்டக்களப்பிலுள்ள இந்து சமயத் தலைவர்களை கிங்பஸ் விடுதியில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். (21)

# வாழைச்சேனையின் அபிவிருத்தி பற்றி ஆய்வு

வாழைச்சேனை, செப்.16

வாழைச்சேனைப் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாக திவிநெகும திட்டத்துக்கு ஒரு கோடி எழுபது லட்சம் ரூபாவும், சமுர்த்தி வேலைத் திட்டத்துக்கு ஒரு கோடி இருபத்து மூன்று லட்சம் ரூபாவும், கமநெகும திட்டத்துக்கு மூன்று கோடி எண்பது லட்சம் ரூபாவும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளின் நிர்மாணத்துக்கு ஒரு கோடி பதினெட்டு லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ். யோகேஸ்வரன், பி.அரியநேத்திரன், பொன் செல்வராசா, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான என்.திரவியம், பூ.பிரசாந்தன், ஆர்.துரைரட்ணம், பிரதேச செயலாளர் [illegible] ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ச-21)

# 100 ஆண்டு கால மரங்கள் கெரவெல ஆற்று ஓரம் அழிப்பு

### பிரதேசவாசிகள் வன அதிகாரிகளுக்கு தகவல்

தியத்தலாவை, செப். 16

கெரவெல ஆற்றோரம் நின்ற 100 வருடங்கள் பழைமை வாய்ந்த மரங்கள் வெட்டப்பட்டுள்ளன என்று பிரதேச வாசிகள் வன வள அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளனர்.

மொனராகலை மாவட்டத்திலுள்ள பிபிலை பிரதேசத்தின் நில்கல மூலிகை வனப்பகுதியான கெரவெல ஓய நீரேந்துப் பகுதியில் பல காலமாக களவாக பெறுமதிமிக்க முதிரை, சமுளை, தேக்கு மற்றும் புங்கை போன்ற 16 மரங்கள் வெட்டப்பட்டுள்ளன.

இது குறித்து பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து அங்கு சென்ற பிபிலை பிரதேச வன அதிகாரிகள், சந்தேகநபர்கள் விட்டுச்சென்ற பல மரக் குற்றிகளைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்த வனப் பிரதேசத்தில் நூறு ஆண்டுகளுக்கு மேல் பழைமையான தொன்மை வாய்ந்த பல மரங்கள் மரம் அறுக்கும் கை இயந்திரம் மூலம் அறுக்கப்பட்டுள்ளன. இதனால் பல மூலிகை மரங்கள் அழிந்து நாசமடைந்துள்ளன என்று வன வள அதிகாரி ஐ.ஏ.சி. விஜயதிலக தெரிவித்துள்ளார்.

இந்த மரம் தறித்தமை தொடர்பாக இப் பிரதேசத்துக்குப் பொறுப்பான வன வள அதிகாரிகளை விசாரணை செய்துவரும் அதேவேளை, கைப்பற்றிய மரக்குற்றிகளை மரக்கூட்டுத் தாபனத்துக்கு வழங்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
வழக்கத்திற்கு மாறாக, கூடுதல் நேரம் தூங்கலாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தம் அடைவீர்கள். சில வேலைகளை முடிக்க தீவிர முயற்சி மேற்கொண்டும் முடியாமல் போகலாம். தொழில் ரீதியாக சிலரின் விமர்சனங்களைச் சந்திக்கலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர், உங்களுடன் தொலைபேசியில் பேசலாம்.

**இடபம்:**
மாமன், மைத்துனர்கள் மூலம் உங்களின் வேலை ஒன்றை முடிப்பீர்கள். வரவேண்டிய கடன் மிகுதி ஒன்றைக் கேட்டு வாங்குவீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். சில வேலைகளை கால தாமதமாகத் ஆரம்பித்தாலும், சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். மாலை நேரத்தில் வீட்டுக்குத் தேவையான பொருள் ஒன்றை வாங்கலாம்.

**மிதுனம்:**
கடன் உதவி, நிதியுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பொலிஸ் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கும் வாய்ப்பு உருவாகலாம்.

**கடகம்:**
உங்களுக்குப் பிடித்தமான ஒன்றை மற்றவர்களுக்காக விட்டுக் கொடுக்கலாம். தொழில் ரீதியான கூட்டங்கள், நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். சில வேலைகளுக்காக நீங்கள் மட்டுமின்றி, மற்றொருவரையும் கூட்டிக் கொண்டு அலைவீர்கள். நீண்ட நாள்களாகச் சந்திக்க நினைத்த ஒருவரைச் சந்திக்கலாம். பெருமைக்காக சில செலவுகளை செய்வீர்கள்.

**சிங்கம்:**
குழப்பங்கள், தடுமாற்றங்களைச் சந்திக்கலாம். ஒய்வாக இருக்க நினைத்தாலும் அது முடியாத அளவுக்கு, யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம். வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். வாகனங்கள் வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். ஒருவர் மீதுள்ள கோபத்தை, மற்றொருவரிடம் காண்பிப்பீர்கள்.

**கன்னி:**
பிரியமான உறவினர்கள், நண்பர்களுக்காக சில காரியங்களைச் செய்வீர்கள். குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாக செலவாகும். உறவுப் பெண்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கலாம். பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். மாலை நேரத்தில் பயணத் தடை நேரும்.

**துலாம்:**
வீட்டில் வசதி, வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். உறவினர்களை உபசரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். ஒருவரிடம் கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம். பார்க்க நினைத்த நண்பர் ஒருவரை, பாதையில் சந்திக்க நேரிடலாம்.

**விருச்சிகம்:**
பிறரை நம்பி ஒப்படைத்த வேலை ஒன்று முடியாமல், அதை நீங்களே செய்ய நேரிடலாம். மற்றவர்கள் கேட்காமலேயே சில உதவிகளைச் செய்வீர்கள். உறவினர் ஒருவருடன் வெளியிடங்களுக்கு பயணம் செல்லலாம். உங்களுடன் பேச விரும்பும் ஒருவரிடம் நீங்கள் பேச விரும்பாமல் தவிர்க்கலாம். கனவுகள் குழப்பங்கள் உண்டாகலாம்.

**தனுசு:**
திட்டமிட்ட சில வேலைகளை, திடீரென மாற்றி அமைக்கலாம். ஒருவரைச் சந்திக்க முற்பட்டு, அது முடியாமல் போகலாம். நீண்ட நாள்களாக செல்லாத உறவினர் ஒருவரின் வீட்டிற்குச் செல்லலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். தாயார் வழியில் சிறு செலவுகள் ஏற்படலாம். வயிறு, வாயு உபாதைகளுக்கு ஆள்படலாம்.


**மகரம்:**
சில விடயங்களில் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். உறவுப் பெண்கள் வழியில், சில உதவிகள் கிடைக்கலாம். உங்களின் தவறு ஒன்றை, மற்றவர்கள் சுட்டிக் காட்டலாம். எதிர்ப்புகள் போட்டிகள் இல்லாமல், எந்த வேலையையும் சுலபமாக முடிப்பீர்கள்

**கும்பம்:**
சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். ஒரு வகையில் வந்த வரவுகள், மற்றொரு வகையில் செலவாகும். நீண்ட நாள்களாக உங்களின் வீட்டிற்கு வராத உறவினர் ஒருவர் வரலாம். அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றால் அவதிப்படலாம். வெளியூரில் இருக்கும் ஒருவரை தொடர்பு கொண்டு முக்கிய விடயமாகப் பேசுவீர்கள்.

**மீனம்:**
உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். பெரிய மனிதர்கள் சிலர், உங்களுக்கு நல்ல ஆலோசனை சொல்லலாம். நடக்குமோ, நடக்காதோ என நினைத்த காரியம் ஒன்று, நல்ல விதமாக நடந்து விடலாம். பெண்கள், பிறந்த வீட்டின் அல்லது சகோதர வழியில் உதவிகளைப் பெறலாம்.

# அவச…
# சட்ட நீ…
# ஒரு ஏ…

**மேற்குலகமும் இந்தி… சட்டம் அல்லது பயங்க… நீக்குவதற்கு அழுத்த… பார்க்க அரசியல் … முழுமையான அழுத்… முன்வரவே…**




சி.ஆ.யோதிலிங்கம்

1970ஆம் ஆண்டு முதல் நடைமுறையிலிருந்த அவசரகாலச் சட்டத்தை நீக்குவதாக அரசு அறிவித்துள்ளது. இந்த நீக்கத்தை அரசு முழுவிருப்போடு அறிவிக்கவில்லை. மாறாகத் தற்போது நடைபெற்றுவரும் ஜெனீவா மாநாட்டின் நெருக்கடிகளைக் குறைப்பதற்காகவும், இந்தியாவினதும், மேற்குலகினதும் அழுத்தங்களைக் குறைப்பதற்காகவுமே இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அறிவிப்பின் சூடு ஆறுவதற்கு முன்னரே வர்த்தமானி அறிவித்தல் மூலம் அவசரகாலச் சட்டத்திலிருந்த பல விதிகள் பயங்கரவாதச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. புதிதாக ஒரு சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கும் முயற்சிகளைச் செய்கின்றது.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டாலும் இலங்கையில் சாதாரண நிலை ஏற்படுவதற்கு நான்கு விடயங்கள் எப்போதும் தடையாகவே இருக்கும்.

### பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஆளுமை

அதில் முதலாவது பயங்கரவாத தடைச்சட்டமாகும். சர்வதேச விழுமியங்களுக்கு மாறாக மிகக் கொடூரமான விதிகள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன. குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை வழக்குகளில் உறுதியான சாட்சியாகச் சேர்க்கக் கூடியதாக இருத்தல், காலவரையறையின்றி கைதிகளை சிறையில் வைத்திருக்க முடிதல் என்பன இவற்றில் சிலவாகும். இந்தச் சட்டத்தின் கீழ் விசாரணைகளைப் பூர்த்தி செய்யப்படாமல் பல வருடங்களாகச் சிறையில் இருப்பவர்கள் இப்போதும் உள்ளனர்.

பயங்கரவாதச் சட்டத்தின் கொடூரத்தை விளக்கிய ஒரு மூத்த சட்டத்தரணி, "இச்சட்டம் இருக்கும் வரை எம்மால் எதுவும் செய்ய முடியாது" எனக் கூறினார். நாம் சிலவற்றை அதன் ஓட்டைகளை பயன்படுத்தி வெற்றி கண்டிருக்கின்றோமே தவிர நேரடியாக சட்டத்தின் மூலம் எம்மால் எதுவும் செய்ய முடிவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது அவசரகாலச் சட்டத்திலுள்ள பல விதிகள் பயங்கரவாதச் சட்டத்தினுள் சேர்க்கப்பட்டுள்ளதனால் அது மேலும் பலம் பெற்றுள்ளது. புதிதாக உருவாக்கப்படப்போகும் சட்டம் மேலும் மேலும் அதற்கு பலத்தை வழங்கும்.

### இராணுவ நிர்வாகப் பலம்

இரண்டாவது, இராணுவ நிர்வாகமாகும். வடக்கு, கிழக்கில் இராணுவ நிர்வாகம் புதிது புதிதாகப் பலப்படுத்தப்படுகின்றதே தவிர நெகிழ்ச்சிக்கான எந்த வித அறிகுறிகளையும் காணமுடிவதில்லை. அங்கு சிவில் நிர்வாகம் என்பது இராணுவத்தின் கட்டளைகளை நிறைவேற்றுகின்ற ஒன்றாகவே உள்ளது. அரச அதிபர் உட்படச் சிவில் நிர்வாக அதிகாரிகள் இராணுவத்தின் சட்டங்களை நிறைவேற்றுகின்ற அதிகாரிகளாகவே உள்ளனர். மர்மமனிதன் நெருக்கடிகள்கூட இராணுவ நிர்வாகத்தை வலுவாக்குவதற்காகக் கிளப்பி விடப்பட்ட ஒன்று என்றே அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

வடக்கு - கிழக்கில் நிறைவேற்று அதிகாரத்தோடு தொடர்புடைய முதன்மை நபர்களாகவும் இராணுவத்தினரே உள்ளனர். முன்னாள் படைத் தளபதிகளே கிழக்கின் ஆளுநராகவும், வடக்கின் ஆளுநராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். 13ஆவது திருத்தத்தின்படி ஆளுநரிடம் மாகாண அதிகாரங்கள் குவிந்துள்ள நிலையில் ஆளுநர்களின் அதிகாரங்கள் இராணுவ நிர்வாகத்தை மேலும் வலுப்படுத்துகின்றன.

திருக்கோணமலை மாவட்டம் பேரினவாத ஆக்கிரமிப்பினை அதிகளவில் கொண்டுள்ள மாவட்டம். இதன் அரச அதிபராகவும் முன்னாள் படைத்தளபதி ஒருவரே இருக்கின்றார். அரசு இரண்டு காரணங்களுக்காக வடக்கு, கிழக்கில் இராணுவ நிர்வாகத்தை தொடர்ச்சியாக பேணுவதற்கு விரும்புகின்றது. அதில் ஒன்று தமிழ்த் தேசியப் போராட்டம் மீண்டும் மேலெழுவதை தடுப்பதாகும்.

### மீண்டெழும் தமிழர்கள்

அரசியல் தீர்வு ஒன்று ஏற்படாத வரை, அதற்கான அரசியல் விருப்பு இலங்கை அரசிடம் இல்லாத வரை தமிழ்த்தேசிய எழுச்சிக்கான தேவை எப்போதும் இருந்து கொண்டேயிருக்கும். இதைத் [illegible] என்ற மாயையை [illegible] தமிழ் மக்கள் மத்தியில் கட்டியெழுப்ப முயன்ற போதும் அது தோல்வியிலேயே முடிந்துள்ளது. நடைபெற்று முடிந்த தேர்தல்கள் அந்தத் தோல்வியின் வளர்ச்சியினை எடுத்துக் காட்டியிருந்தன.

புலிகளின் அழிப்பு தமிழ் மக்கள் மத்தியில் தோல்வி மனப்பான்மையை உருவாக்கியிருந்தது என்பது உண்மைதான். ஆனால் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை, சனல்-4 காணொளித் தொகுப்பு, ஜெயலலிதாவின் வருகை, புலம்பெயர் மக்களின் எழுச்சி என்பவற்றினால் தமிழ் மக்கள் தோல்வி மனநிலையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுபட்டு வருகின்றனர்.

அண்மைய உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பு அந்த விலகுகையைத் தெளிவாகக் காட்டியிருந்தது. இந்த மீள் எழுச்சியை இராணுவம் விரும்பவில்லை. இராணுவ நிர்வாகத்தை இறுக்குவதன் மூலமும், மக்களின் எழுச்சியை அடித்து விரட்டி ஒடுக்குவதன் மூலமும், இந்த மீள் எழுச்சியைத் தடுக்கப் பார்க்கின்றது.

இரண்டாவது தடையும் முதலாவதுடன் இணைந்த ஒன்றுதான். தமிழ்த்தேசிய எழுச்சிகளை நசுக்குவதற்கு இதனையும் ஒரு கருவியாக அரசு பயன்படுத்துகின்றது. வடக்கு, கிழக்கில் துரித சிங்கள மயமாக்கலை மேற்கொள்வதுதான் அந்தச் செயற்பாடு. திட்டமிட்ட வேலைத் திட்டங்களுடன் இவை நடைபெறுகின்றன.

### நிலப்பறிப்புகள்

நிலப்பறிப்பே அதில் முதன்மையானது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கான நிலப்பறிப்பு, இராணுவ முகாம்களுக்கான நிலப்பறிப்பு, பௌத்த விகாரைகளுக்கான நிலப்பறிப்பு, இராணுவத்தினரின் நினைவுத் தூபிகளுக்கான நிலப்பறிப்பு, இராணுவ முகாம்களின் வீதிகளுக்கான நிலப்பறிப்பு, சிங்கள யாத்திரிகர்களின் இடைத்தங்கல் நிலையங்களுக்கான நிலப்பறிப்பு, சிங்கள வர்த்தக நிலையங்களுக்கான நிலப்பறிப்பு, சுற்றுலாப் பயணிகளின் ஹோட்டல்களுக்கான நிலப்பறிப்பு, அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிலப்பறிப்பு என இவை தொடர்கின்றன. அரச காணிகள் மட்டுமல்ல தனியார் காணிகள், கோயில் காணிகள் என்பனகூட இவற்றுக்கு விதிவிலக்காக இருக்கவில்லை.

நிலப்பறிப்பினைவிட வளப்பறிப்பு, தொழில் வாய்ப்புப் பறிப்பு, கலாசாரப் பறிப்பு என்பனவும் மேற்கொள்ளப்படுகின்றன. பழங்காலத்தில் போரில் வென்ற அரசர்கள் தோற்ற அரசுகளைச் சூறையாடுவது போல் ஒரு பச்சைச் சூறையாடலே வடக்கு, கிழக்கில் நடைபெறுகின்றது.

இராணுவ நிர்வாகம் இல்லாமல் இந்தப் பச்சைச் சூறையாடலை மேற்கொள்ள முடியாது என்பதற்காகவே வடக்கு கிழக்கில் இராணுவ நிர்வாகம் வலுப்படுத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரகால
# நீக்கம்
# மாற்று

**தியாவும் அவசரகாலச் பகரவாதச் சட்டங்களை தம் கொடுப்பதிலும் தீர்வு ஒன்றுக்கே தங்களைக் கொடுக்க வேண்டும்.**

### எல்லைகள் கடந்த தமிழ்த் தேசியம்

தமிழ்த் தேசிய அரசியல் இன்று இலங்கைத் தீவினதும் பிராந்தியத்தினதும் எல்லைகளை உடைத்துக்கொண்டு சர்வதேச மட்டத்திற்குச் சென்றுள்ளது. புலமும், தமிழகமும் இன்றைய கட்டத்தில் தமிழ்த் தேசியத்தின் போராட்டத் தளங்களாக மாறியுள்ளன. புலத்தின் எழுச்சியினால் மேற்குலகம் தடுமாறுகின்றது. அதேபோல தமிழகத்தின் எழுச்சியினால் மத்திய அரசு நிலைகுலையத் தொடங்கியுள்ளது.

இதனால் இராணுவ நிர்வாக செயற்பாடு புலத்திற்கும் தமிழகத்திற்கும் விஸ்தரிக்கப்படுகின்றது. புலத்திற்கு வெளிநாட்டுத் தூதுவர்களாகவும், இராஜ தந்திரிகளாகவும் முன்னாள் படைத் தளபதிகள் நியமிக்கப்படுகின்றனர். தூதுவராலயங்களில் இராணுவ உளவுப் பிரிவு உருவாக்கப்பட்டு அதன் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

புலத்தில் இராணுவ நிர்வாகம் நீட்சி பெற்றதற்கு புலத்தின் தமிழத் தேசிய எழுச்சி மட்டும் காரணமல்ல, அதைவிட வெளிநாட்டு விவகாரச் செயற்பாடுகளை இராணுவ நிர்வாகத்தின் நலன்களுக்கு ஏற்ப ஒழுங்மைப்பதும் ஒரு காரணமாகும்.

புலத்தில் இராணுவ நிர்வாகத்தின் நீட்சி சில வெற்றிகளைத் தந்தது என்பது உண்மைதான். ஆனால் அங்கு ஜனநாயக விழுமியங்கள் உயர்வாக உள்ளதனால் ஒரு மட்டத்துக்கு மேல் இலங்கை அரசால் வெற்றிகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அண்மைக் காலமாக தோல்விகளையே தழுவி வருகின்றது. ஜனாதிபதி மஹிந்தவையே உரையாற்ற விடாமல் திருப்பி அனுப்பும் அளவுக்குப் புலத்தில் உள்ள மக்கள் ஓர் அரசியல் சக்தியாக எழுச்சியடைந்துள்ளனர்.

தமிழகத்தில் இலங்கை இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கும் இந்தியப் புலனாய்வுப் பிரிவினருக்குமிடையே ஒரு கூட்டுச் செயற்பாடு நடைபெறுகின்றது. எனினும் கருணாநிதியின் ஆட்சியில் அது இலகுவாக இருந்தது போல ஜெயலலிதாவின் ஆட்சியில் இலகுவாக இல்லை.

வடக்கு கிழக்கு புலம், தமிழகம் மட்டுமல்ல தென் இலங்கையிலும் இராணுவ நிர்வாகம் படிப்படியாக மேலே வருகின்றது. பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில் பயிற்சியளிப்பது இந்த வகையில் பார்க்கப்படவேண்டியதே. கட்டுநாயக்கா தொழிலாளர்களின் சக்திமிக்க போராட்டமும் இராணுவத்தின் துணைகொண்டே ஒடுக்கப்பட்டது.

### ...விழக்கும் சட்டவாட்சி

மூன்றாவது, சட்டவாட்சி நிலவாமையாகும். இராணுவ நிர்வாகம் மேலெழும்பும் எந்த நாட்டிலும் சட்டவாட்சிக்கு இடம் இருப்பதில்லை. அங்கு சட்டம் ஒரு புறத்தில் இருக்க சட்டத்துக்கு புறம்பாகவே எல்லாமும் நடைபெறும். சட்டவாட்சி நிலவாத்தினால் நீதித்துறையும் தன் கடமைகளைச் சரிவரச் செய்ய முடிவதில்லை. அதுவும் இராணுவ நிர்வாகத்துக்கு ஏற்றதாகவே அது ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும்.

இலங்கையில் போர்க் காலத்தில் நிலவிய இச் சட்டவாட்சி மறுப்பு இன்றும் தொடர்கின்றது. குற்றவாளிகள் சட்டத்திலிருந்து பாதுகாக்கப்படுகின்றனர். நீதிமன்றத் தீர்ப்புகளை அரசு கணக்கெடுப்பதில்லை. உயர் பாதுகாப்பு வலயத் தீர்ப்பு இதற்கு நல்ல உதாரணமாகும்.

சட்டவாட்சி நிலைவாமையினால் ஏற்படும் நெருக்கடி வடக்கு கிழக்கை மட்டுமல்ல, தென் இலங்கையையும் வெகுவாகப் பாதித்துள்ளது. ஜனநாயக நிறுவனங்கள் எல்லாம் அங்கு எதுவும் செய்யமுடியாமல் படுத்துக் கிடக்கின்றன. ஊடகங்கள் தாமாகவே சுய தணிக்கையினை மேற்கொள்கின்றன.

நான்காவது, ஜனாதிபதியிடம் குவிந்துள்ள அதிகாரங்களாகும். இதுவும் தென்னிலங்கையை வெகுவாகப் பாதித்துள்ளது. ஜனநாயக முலாம் பூசப்பட்ட ஒரு சர்வாதிகார ஆட்சியே தற்போது நடைபெறுகின்றது. அரசமைப்பு, முழு அதிகாரங்களையும் ஜனாதிபதியிடம் குவிக்க அவர் அதனைத் தனது குடும்பத்திடம் குவித்திருக்கிறார்.

எனது நண்பன் ஒருவன் நகைச்சுவையாக ''நீங்கள் அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறையுங்கள் எனக் கூறினீர்கள். ஜனாதிபதி அதனை நான்காகக் குறைத்து விட்டார்'' எனக் குறிப்பிட்டான். உண்மையில் மஹிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, கோதபாய ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ என்கின்ற நால்வரிடையே தான் அதிகாரங்கள் குவிந்துள்ளன. ஏனையவர்கள் பெயருக்குத் தான் அமைச்சர்களாக உள்ளனர்.

இத்தனைக்கும் நாமல் ராஜபக்ஷ ஓர் அமைச்சரில்லை. கோத்தபாய ராஜபக்ஷ ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கூட இல்லை. அமைச்சர்களாக இல்லாதவர்களும் அதிகாரத்தின் ருசியை அனுபவிக்கலாம் என்பதற்கு இலங்கை ஒரு முன்மாதிரியான நாடாக மாறியுள்ளது.

### தடைகளற்ற ஜனாதிபதி

உலகரீதியாகத் தனிநபரிடம் அதிகாரங்களை வழங்கும் போது அது சர்வாதிகாரமாக மாறுவதைத் தடுக்க யாப்பு ரீதியான தடைகளையும் உருவாக்குவதே வழக்கமானதாகும். அமெரிக்க ஜனாதிபதியின் மீது இவ்வாறான தடைகள் உள்ளன.

ஜனாதிபதி இரண்டு தடவைகள் மட்டுமே பதவி வகிக்க கூடியதாக இருக்கின்றமை, ஜனாதிபதியின் உயர் நியமனங்களுக்கும் வெளிநாட்டு ஒப்பந்தங்களுக்கும் செனற் சபையின் சம்மதம் தேவையாக இருக்கின்றமை என்பன முக்கியமான தடைகளாக உள்ளன.

இலங்கையிலும் 1978ஆம் ஆண்டு அரசமைப்பில் ஜனாதிபதி இரண்டு தடவைகள் மட்டும்தான் பதவி வகிக்கலாம் என்றிருந்தது. 17ஆவது திருத்தத்தின் பின்னர் அதுவும் இல்லாது போய்விட்டது. அரசியலமைப்புப் பேரவையும், சுதந்திர ஆணைக்குழுக்களும் ஜனாதிபதியின் நியமனங்களிலும் செயற்பாடுகளிலும் முன்னர் கட்டுப்பாடுகளை உருவாக்கின. ஆனால் 18ஆவது திருத்தம் இவை எல்லாவற்றையுமே இல்லாமல் செய்தது. ஜனாதிபதியை வரம்பற்ற அதிகாரங்கள் கொண்ட மன்னனாக்கியது.

தமிழ் மக்களின் போராட்டங்களை ஒடுக்குதல் என்ற பெயரிலேயே இவை எல்லாம் நடைமுறைக்கு வந்தன. இன்று இவை தமிழ் மக்களை மட்டுமல்ல, சிங்கள மக்களையும் ஒடுக்கும் கருவிகளாக மாறிவிட்டன. ஒரு தேசிய இனத்தினை ஒடுக்க முனையும் எந்தத் தேசிய இனமும் தானும் விடுதலையடையப் போவதில்லை எனக் கூறினார் கார்ல் மார்க்ஸ். அது இலங்கைக்கும் நன்றாகவே பொருந்துகிறது.

### அரசியல் தீர்வே இறுதி வழி

இந்த நிலைமைகளிலிருந்து விடுபடுவதற்கான ஒரே வழி தமிழ் மக்களை ஒரு தனியான தேசமாக அங்கீகரித்து அரசியல் தீர்வை வழங்குவதுதான். அதனை வழங்காதவரை அவசரகாலச் சட்டத்தினை வேறு வடிவங்களில் அரசு நடைமுறைப்படுத்தவே பார்க்கும். அரசியல் தீர்வு வழங்கப்பட்டால் தேசிய இனப்பிரச்சினை முடிவுக்கு வந்துவிடும். அதன் பின்னர் தங்களின் ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடக்கூடிய அரசியல்வெளி சிங்கள மக்களுக்கும் உருவாகும்.

ஜனாதிபதி அரச முறையைக்கூட மாற்றி விடலாம் அல்லது ஜனாதிபதியின் அதிகாரங்கள் மீது கட்டுப்பாடுகளைக் கொண்டு வரலாம். இராணுவ நிர்வாகத்தை முழு இலங்கைத் தீவிலும் இல்லாமல் செய்யலாம். சட்டத்தின் ஆட்சியையும் நடைமுறைப்படுத்தலாம். எனவே மேற்குலகமும் இந்தியாவும் அவசரகாலச் சட்டம் அல்லது பயங்கரவாதச் சட்டங்களை நீக்குவதற்கு அழுத்தம் கொடுப்பதிலும் பார்க்க அரசியல் தீர்வு ஒன்றுக்கே முதன்மையான அழுத்தங்களைக் கொடுக்க முன்வரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசையும் துன்பமும்



ஒருசமயம் சோளக் கொல்லையில் ஒருவன் காவல் காத்துக் கொண்டிருந்தான். பொதுவாகச் சோளக் கொல்லையில் ஒரு பொம்மையை காவலுக்கு வைப்பது வழக்கம். 'பொம்மை எதற்கு? நாம் போய் அங்கே இருந்து கொள்வோம்' என்று அவன் நினைத்துக் காவலுக்குப் போனவன் கவனமாக இருந்து காவல் காக்க வேண்டுமல்லவா? ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. தூக்கம் வந்தது... தூங்கிவிட்டான்.

அந்த நேரம் பார்த்து கொல்லையை மேய்வதற்கு ஒரு நந்தி வந்தது. அது கயிலாயத்திலிருந்து வந்திருந்தது! சிவபெரு மானிடம் இருப்பது அல்லவா, அந்த நந்தி! அது தன் விருப்பம் போல் சோளக் கொல்லையை மேயஆரம்பித்தது.

என்னமோ தெரியவில்லை, திடீரென்று கண்விழித்துக் கொண்ட அவன் நந்திஎய விரட்டிப் பிடிப்பதற்காக அதன் அருகில் ஓடினான். அது அதற்குள் விருட்டென்று புறப்பட்டு ஆகாயத்தில் பறந்து போய் விட்டது.

'ஆகா, ஏமாந்து போய்விட்டோமே!' என்று நினைத்தவன், 'சரி! இது மறுபடியும் இங்கே வரும்... அப்போது பார்த்துக் கொள்ளலாம்' என்று நினைத்தான். மறுநாள் தூங்குவது போல் பாவனை செய்து கொண்டிருந்தான். அப்போது அவன் எதிர்பார்த்தது போலவே அந்த நந்தி வந்தது. அவன் மெதுவாகப் பாம்பு மாதிரி நெளிந்து அதன் அருகில் சென்றான்.

இவன் அருகில் சென்ற சமயத்தில் அது இவனைப் பார்த்துவிட்டது. விருட்டென்று மேலே கிளம்பியது.

இவன் ஒரே தாவாகத் தாவி அதன் வாலை அப்படியே பிடித்துக் கொண்டான். அது பறந்து போகிறது. இவன் அதன் வாலைப் பிடித்தபடி தொங்கிக் கொண்டே போகிறான். நேராக நந்தியுடன் கைலாயம் போய்ச் சேர்ந்தான்.

பார்வதி பரமேஸ்வரர்களைப் பார்த்து, ''உங்களுடைய நந்தி என் சோளக் கொல்லையை அழித்து எனக்குப் பெரிய நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டது. இது நியாயமா?'' என்று வினாவினான்.

அதற்கு நஷ்ட ஈடாக ஒரு பை நிறையத் தங்கக் கட்டிகளைப் போட்டு அவனிடம் அவர்கள் கொடுத்தார்கள். அவன் அதை வாங்கிக் கொண்டான். பின் அந்த நந்தியே அவனைப் பூலோகத்துக்குக் கொண்டு வந்து சேர்த்தது.

வீடு வந்து சேர்ந்தவன் பேசாமல் சந்தோஷமாக வாழ வேண்டியது தானே! அதை விட்டுவிட்டான். '' அவ்வளவு தாராளமாகத் தங்கக் கட்டிகளைஅள்ளிக் கொடுத்தார்களே; அவை உண்மையிலேயே தங்கக்கட்டிகள் தானா... இல்லே வேறேதாவதா'' என்ற சந்தேகம் அவனுக்கு வந்துவிட்டது.

இவன் மனிதன் என்பதால்... இயல்பாக வரக்கூடிய சந்தேகம் தானே. இங்கேயே யாராவது கொஞ்சம் தாராளமாகத் தருமம் செய்தால் மக்கள் அவன் செய்த செயலைப் பாராட்டுவதில்லை, மாறாக, 'இப்படி அள்ளி வீசுகிறானே, இவன் எங்கோ கொள்ளையடித்திருப்பான்...?' என்று சந்தேகப்படுவதைப் பார்க்கிறோம். அப்படித்தான் அவனும் நினைத்தான்.

ஒரு தங்கக் கட்டியை எடுத்துக் கொண்டு தன் நண்பன் ஒருவனிடம் சென்றான். அவன் இது சம்பந்தமான விவரம் தெரிந்தவன்- வியாபாரம் செய்பவன். '' இது என்ன நியமான தங்கம் தானா, பார்த்துச் சொல்!'' என்று இவன் அவனைக் கேட்டுக் கொண்டான்.

நண்பன் தங்கத்தைச் சோதித்துப் பார்த்தான். அது நிஜமான தங்கம் தான் என்பதை அவன் புரிந்துகொண்டான். இருந்தாலும் அந்த உண்மையை இவனிடம் நண்பன் சொல்லவில்லை. '' இது தங்கமில்லை...;'' பித்தளை...; இப்படி உன்னை ஏமாற்றியது யார்? என்று மிகவும் தந்திரமாகக் கேட்டான். இவன் அப்பாவித்தனமாக எல்லாவற்றையும் விவரமாக அவனிடம் கூறினான். அதன் பின்னர், ''சரிவருகிறேன்'' என்று நண்பனிடம் விடைபெற்று வீடு திரும்பினான்.

மறுபடியும் கடவுளிடம் சென்று, ''இது நியாயமா? என்று கேட்க வேண்டும்'' என்று முடிவு செய்தான். அன்றைய இரவும் நந்தி வழக்கம் போல் அவனது வயலில் மேய்வதற்காக வந்தது. இவன் ஓடிச்சென்று அதன் வாலைப் பலமாகப் பிடித்துக் கொண்டான். நந்தி பறக்க ஆரம்பித்தது. இவன் வாலைப் பிடித்துக் கொண்டு தொங்கினான். அவனுக்கு அப்போது காலில் ஏதோ பிடிப்பது போல் தெரிந்தது. ஆதலால் தொங்கியபடியே கீழே குனிந்து பார்த்தான். பார்த்தால்... அவனது நண்பன்... அதுதான் 'பித்தளை என்று கூறி ஏமாற்றினானே அவன், இவன் காலைப்பிடித்துக் கொண்டு தொங்கியபடியே வந்து கொண்டிருந்தான். அவனுக்கும் தங்கக் கட்டியைப் பெறவேண்டும் என்று ஆசை. எனவே தான் இப்படிச் செய்தான்.


நடு வானத்தில் நந்தி சென்று கொண்டிருந்தது. அப்போது காலைப் பிடித்திருந்தவன் வாலைக் பிடித்திருப்பவனைப் பார்த்து, ''அது சரி உனக்கு எவ்வளவு தங்கம் கொடுத்தார்கள்?'' என்று கேட்டான்.

இதோ இவ்வளவு இருக்கும் ! என்று கையை விரித்துக் காட்டினான். அவ்வளவுதான்! அவர்கள் இருவரும் மிக வேகமாக பூலோகத்துக்கு வர ஆரம்பித்து விட்டார்கள்! நந்தி மேலே பறந்து போய்விட்டது. இவர்கள் பொத்தென்று பூமியில் வந்து விழுந்தார்கள்.

இந்தக் கற்பனைக் கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய நீதி இதுதான்: வாலைப்பிடித்தவன்... உண்மையைச் சந்தேகப்பட்டான். காலைப் பிடித்தவன்... பேராசைப்பட்டான்.

உண்மையைச் சந்தேகப்படுபவர்களுக்கும்- பேராசைப்படுபவர்களுக்கும் இது போன்ற கதிதான் ஏற்படும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**கோ.சுவாமிநாதன்**



கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்துக்கு போட்டோ பிரதி இயந்திரம் ஒன்றைப் புலம் பெயர் பழைய மாணவர்களான பொறியியலாளர்கள் பா.பாலராஜன், பே.சுபகேசன் ஆகியோரின் அனுசரணையுடன் அவர்களின் உறவினர்கள் இணைந்து வழங்குகின்றனர். (ம)

# இலக்கிய வரலாறு குறித்த உணர்வு ஈழத்திலேயே முதலில் தோற்றம் பெற்றது

## பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் உரை

யாழ்ப்பாணம், செப்.16

தென்னிந்தியாவில் இலக்கிய வரலாறு பற்றிய உணர்வுகள் தோற்றம் பெறுவதற்கு முன்னர் ஈழத்தில் அது தோற்றம் பெற்றுவிட்டது.

இவ்வாறு குறிப்பிட்டார் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி வ.மகேஸ்வரன்.

லண்டனில் வசிக்கும் சிவபாதம் கணேஸ்குமார் எழுதிய ''இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்துச் செம்மல்கள்'' என்னும் நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

இதில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

தென்னிந்தியாவில் இலக்கிய வரலாறு பற்றிய உணர்வு தோற்றம் பெறுவதற்கு முன்பாக ஈழத்தில் அதிலும் மேற்குறிப்பிட்ட நூல்களின் ஊடாக இலக்கியவரலாற்றை அணுகுவதற்கான உணர்வு தோற்றம் பெற்றுவிட்டது.

மேலைப் புலத்தாருடைய வருகையின் பின்னரே விஞ்ஞான பூர்வமாக வரலாற்றை அணுகுவதற்கு அறிஞர்கள் முற்பட்டனர்.

சி.வை.தாமோதரம்பிள்ளை மேலைப்புலக் கல்விச் செல்வாக்கால் தமிழ் இலக்கிய வரலாற்றைக் காலகட்டங்களாக வகுத்து அணுக முற்பட்டார். புத்தளத்தைச் சேர்ந்த சைமன் காசிச்செட்டி தமிழ் புளூற்றாக் என்ற ஆங்கில நூலின் மூலம் தமிழ்ப் புலவர்களை அகரவரிசைப்படுத்தி வெளிப்படுத்தினார். ஆர்னல்ட் சதாசிவம் பிள்ளை பாவலர் சரித்திர தீபகம் என்ற நூலைப்படைத்தார். காலப்போக்கில் தென்புலோலியூர் கணபதிப்பிள்ளை ஈழத்துத் தமிழ்ச் சுடர்மணிகள் என்ற நூலைப் படைத்தார்.

இந்த வரிசையில் என்னுடைய மாணவனும் தற்போது லண்டனில் வசிப்பவருமாகிய சிவபாதம் கணேஸ்குமார் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்துச் செம்மல்களை அடையாளப்படுத்தியுள்ளார். இந்த நூலில் தனிமனித வரலாறுகளே அடையாளப்படுத்தப்பட்டிருந்தாலும் அவை உண்மையில் தனிமனிதருடைய வரலாறுகள் அல்ல. இந்த வரலாறுகள் ஊடாக ஒரு சமூகத்தின் வரலாறு ஒரு பண்பாட்டின் வரலாறு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. -என்றார்.

வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சுந்தரசிவம், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் ஆகியோரும் இந்த நிகழ்வில் உரையாற்றினர். (ம-38)

# வலுவிழந்தோரை மதித்து வாழ்வை வளம்படுத்துவோம்

## கொக்குவில் சமூக சேவை நிலையத் தலைவர்

யாழ்ப்பாணம், செப்.16

எமது சமுதாயத்தில் கண்பார்வையற்றோர், பலமற்றவர்கள், திடமற்றவர்கள், அங்கவீனர்கள், நோயாளிகள், கர்ப்பிணிகளுக்கும் மற்றும் முதியோருக்கும் முன்னுரிமை கொடுத்து வாழ்வை வளம்படுத்துவோம்.

இவ்வாறு கொக்குவில் விநாயகர் சமூக சேவை நிலையத் தலைவர் எஸ்.வீ.ஆறுமுகசாமி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு மனிதனும் வாழும் காலத்தில் வாழுகின்ற மனிதருக்கு சேவை செய்வதையே பேரின்பமாகக் கொள்ள வேண்டும்.

கல்வியே கண் ஆகும். கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் ஆகின்றான். நேரம் தவறாது எமது கடமையை செய்ய ஒவ்வொருவரும் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் பொது மக்களுக்கு சேவை செய்வதையே சிறந்த இன்பமாகும்.

இதனை பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு போதனைகளின் போது விளங்கக் கூடிய வகையில் போதிக்க வேண்டும். நண்பராயினும்- அந்நியராயினும் பாகுபாடுகாட்டாது செயற்பட வேண்டும்.

சிறுபராயத்தில் இருந்து எப்போதும் உதவிபுரியத் தயாராக இருக்கின்றோம் என்பதை உணர்த்த வேண்டும். பொறுமையோடு தீயனவற்றை விலக்கி நல்லனவற்றை செய்வோம் என்று மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-302)

# பொது மக்களுக்குச் சிறந்த சேவையாற்ற பொலிஸுடன் நல்லுறவைப் பேணவேண்டும்

## வலி.வடக்கு பிரதேச செயலர் கருத்து

வலி.வடக்கு, செப்.16

பிரதேசசெயலகங்கள் பொலிஸ் நிலையங்களுக்கும் இடையே நல்லதொரு உறவு பேணபடுமாக இருந்தால் மட்டுமே பொது மக்களுக்கு நாம் நல்லதொரு சேவையை வழங்க முடியும்.

இவ்வாறு வலி.வடக்கு பிரதேச செயலாளர் எஸ்.முரளீதரன் குறிப்பிட்டார்.

இலங்கை பொலிஸ் சேவையின் 145 ஆவது வருட நிகழ்வையொட்டி தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தால் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவையில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

பொலிஸ்மா அதிபரின் மக்களுடனான பொலிஸ் நல்லுறவைக் கருத்தில் கொண்டு நடமாடும் சேவைகள் அறிமுகம் செய்யப்பட்டன.

இந்த வகையில் சுமார் எட்டுக்கும் மேற்பட்ட நடமாடும் சேவைகள் தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் ஏற்பாடுகள் செய்யப்பட்டு மக்களுக்கு சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலகமும் பொலிஸாரும் புரிந்துணர்வின் அடிப்படையில் இணைந்து கொள்வதன் மூலம் மக்களுக்கு நாம் நல்லதொரு சேவையை வழங்க முடியும்

பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையே நல்லுறவு பேணப்பட வேண் டும். கடந்த காலத்தில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே நல்லுறவு காணப்படவில்லை.

மக்களுடைய துன்ப துயரங்களைப் புரிந்து கொள்ள வேண்டும் அவர்களுடைய தேவைகளை புரிந்துணர்வின் அடிப்படையில் நிறைவு செய்யப்பட வேண்டியது அனைத்து அரச ஊழியர்களதும் கடமையாகும்.

மக்களுடைய பிரச்சினைகள் இனம் காணப்பட்டு பொலிஸாரால் தீர்வுகள் காணப்பட வேண்டும். இதற்கு அரச ஊழியர்களும் ஒத்தாசையும் உதவிகளும் செய்ய வேண்டும்.

இந்த வகையில் எமது பகுதியில் வாழும் மக்களுடைய பிரச்சினைகள் அவலங்களை இனம் கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கு பொலிஸாருடன் இணைந்து வெகு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார். (ம-86)

# தொழிலாளர் கௌரவிப்பு

தென்மராட்சி, செப்.16

சாவகச்சேரி நகர சபையில் நீண்ட காலம் பணியாற்றி ஓய்வு பெற்ற இருதொழிலாளர்கள் நகரசபைதலைவர் இ.தேவசகாயம் பிள்ளையால் சேவைநலன் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

நகர சபை கேட்போர் கூடத்தில் நகரசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் முன்னிலையில் இரு தொழிலாளர்களின் சேவைகளைப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

மு.பழனியாண்டி, வ.இலட்சுமணன் ஆகிய இரு தொழிலாளர்களுமே கௌரவிக்கப் பட்டவர்களாவர். (ம-207)

# யாழ்.மத்திய கல்லூரி மாணவருக்கு புலமைப் பரிசில்

யாழ்ப்பாணம், செப்.16

யாழ்.மத்திய கல்லூரியில் கல்வி கற்ற மற்றும் கற்கும் மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர்வதற்கான புலமைப் பரிசில் திட்டத்துக்கு விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புலமைப் பரிசிலுக்கு 2013 ஆம் ஆண்டு முதன் முறையாக உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும், 2011 ஆம் ஆண்டு பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

புலமைப் பரிசிலை யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் இணைந்து ஏற்பாடு செய்து வழங்குகின்றனர்.

விண்ணப்பப் படிவங்களைக் கல்லூரியில் பெற்று எதிர் வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-10)

# சமூக சேவையாளர் மூவருக்கு கௌரவம்

தென்மராட்சி, செப்.16

மிருசுவில், உசன் கிராமத்தில் நீண்ட காலம் கல்வி, சமய, கலைகலாசார பொருண்மிய மேம்பாட்டுக்காக அர்பணிப்புடன் சேவையாற்றிய மூவர் பிரிவு மக்களால் பட்டம் வழங்கிக் கௌரவிக்கபட்டுள்ளனர்.

உசன் மக்களும் உசன் கனடா ஒன்றியத்தினரும் இணைந்து இந்தக் கௌரவிப்பை வழங்கியுள்ளனர்.

சி.சிவானந்தம் தலைமையில் கடந்த வாரம் உசன் இராமநாதன் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ் வில் யாழ்.பிராந்திய முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக்கலா நிதி க.மாணிக்கத்துக்கு சிவநெறிப் புலவர் என்னும் பட்டத்தை யாழ். பிராந்திய மாகாண சுகா தார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரனும் பிரம்மஸ்ரீ சி.சிவசரவணபவனுக்கு 'கலைக் கதிர்' என்னும் பட்டத்தை உசன் இராமநாதன் ம.வி. முன்னாள் அதிபர் ஐ.வரதராசாவும் ந.பேரம்பலத்துக்கு ''சமூகஜோதி' என்னும் பட்டத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் அ.அகிலதாசும் வழங்கினர். (ம-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தியோகத்தின் அர்த்தம் தெரியாவிட்டால் என்ன செய்ய?

**கோப்பாய் சண்முகம்**
கதையோடு செய்தி

இடப்பெயர்வுகள் சனத்துக்கு கூடிய கஷ்ரத்தைக் கொடுத்துள்ளது. மூன்று தசாப்த போரில் எங்கட சனங்கள் பட்ட துன்பங்கள் வார்த்தைகளால் சொல்லமுடியாது. இன்று போர் முடிவடைந்து இரண்டு வருடங்கள் கழிந்தும் இன்னும் அந்தப் பாதிப்பில் இருந்து மக்கள் மீள முடியவில்லை. அவர்களின் வாழ்வு பின் தங்கிய நிலையிலேயே உள்ளது.

இந்த மக்களின் அடுத்த நகர்வு பற்றி ஏவரும் சிந்திப்பதாக இல்லைப் பாருங்கோ. அப்படிச் சிந்தித்தாலும் அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வந்து சேர்வது கேள்விக் குறியாகவே இருக்கிறது.

இதை ஏன் சண்முகம் சொல்லுறன் என்று பார்க்கிறியளா? சுன்னாகம் பகுதியில் உள்ள எனது நண்பன் வீட்டில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9 மணிக்கு மர்மமனிதன் புகுந்து முற்றத்தில் தோய்ச்சு காயப்போட்டிருந்த துணியளை எல்லாம் கொளுத்திப் போட்டுப் போட்டான். விடிய எழும்பிப் பார்த்தபோதுதான் உடுப்புகள் எரிந்து சாம்பலாக் இருப்பது தெரியவந்திருக்கு. எனக்குப் போன் பண்ணி நடந்ததுகளைச் சொன்னான். ஒருக்கால் அவன் வீட்டுக்குப் போய் பார்த்து விட்டு வருவம் என்று கிளம்பினன். அவன் வீட்டுக்கு ஒரு தடவை போன ஞாபகம் இருக்குது என்ற துணிச்சலில் போனால் இடம் எல்லாம் மாறிப்போச்சு. அவன் வீடே தெரியாமல் இருந்தது. யாரிட்டயாவது கேப்பம் என்று அந்த இடத்தில் இருந்த ஒரு வீட்டில் உள்ளிட்டேன் பாருங்கோ. அந்த வீட்டில் இருந்த அம்மாவும் இரு பிள்ளைகளும் எனக்குப் பக்கத்தில் வந்து ''என்ன'' என்று என்னிடம் கேட்டினம். எனது நண்பனின் பெயரை சொல்லி அவனுடைய வீடு எங்கே இருக்குதம்மா என்று கேட்டேன்.

அந்த அம்மா ''ஓ... அவருடைய வீடா இங்கிருந்து மூன்றாவது சந்தி தாண்ட இடப்பக்கம் வருகிற வீடு'' என்று சொல்லி விட ''நன்றி'' என்று சொல்லிவிட்டு வெளிக்கிட்ட போது ''தம்பி ஒரு நிமிடம் நில்லுங்கோ'' என்றார். என்ன அம்மா என்று கேட்டேன். ''அங்கே ஏன் போகிறியள்'' என்றார். நானோ நடந்த சம்பவத்தைச் சொன்னேன். இந்தக் காலத்தில் எல்லாரும் கள்ளர்தான் தம்பி. உரியவை இருந்த காலத்தில் எங்கட சனம் பயமில்லாமல் நிம்மதியாக வாழ்ந்ததுகள். இப்ப அவை இல்லை என்றதும் எங்கட சனத்துக்கு பாதுகாப்பு இல்லாமல் போய் விட்டது. ''என்ன அம்மா சொல்லுறியள், ஏன் நான் சொல்வது பிழையோ. இல்ல அம்மா, எல்லோரும் கள்ளர் என சொல்லுகிறியள்'' என்றேன். ''ஓ! அதுவா'' என்று அந்த அம்மா தனது கதையை சொல்ல ஆரம்பித்தார். ''சகல வசதிகளுடன் எங்கள் குடும்பம் இளவாலை வடக்குப் பகுதியில் வாழ்ந்து வந்தோம் பாருங்கோ. 1990 இற்குப் பின் போரால் இடம்பெயர்ந்து எல்லா இடங்களிலும் வசித்து வந்தோம். கடைசியாக மல்லாகத்தில் வசித்து வருகிறோம்.

இப்பொழுது தம்பி அங்கு எமது வீடு தரைமட்டம் ஆக்கப்பட்டு காணி எல்லைகள் அற்ற நிலையில் ஒரே வெளியாக இருக்கிறது. எமது வீடு இராணுவப் பாதுகாப்பு அரணுக்குள் இருந்தபடியால் கொடுப்பனவுகள் மற்றும் தொண்டு நிறுவனங்களால் வழங்கப்பட்ட உதவிகள் கூடக் கிடைக்கவில்லை. வீட்டுத் திட்டம் கூட எமக்குக் கிடைக்கவில்லை. இளவாலை வடக்கில் திட்டங்கள் ஓரளவு பூர்த்தியாகிவிட்ட நிலையில் நாங்கள் குடும்ப அட்டை மாற்றி 6 மாதம் கடந்த நிலையில் எவ்வித உதவியும் வழங்கப்படவில்லை. எம்மில் சிலருக்கு இந்தக் கதி ஏற்பட்டுள்ளது. ஆனால் இந்த இடத்தைத் தவிர்த்து நகுலேஸ்வரம் பகுதிக்கு உதவிகள் வழங்கப் பட்டுக் கொண்டு இருக்கின்றன. எமக்கு ஏன் இவர்கள் ஓர் உதவியும் செய்யவில்லை. கிராம சேவையாளர் எமது பெயரைச் சிபார்சு செய்ய வில்லையா? எமக்கு என்று கதைப் பதற்கு யாரும் இல்லையா? எமது பிரச்சினைகளை யாரிடம் தெரிவிப்பது? என்று தெரியாமல் தம்பி நாளாந்தம் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறம்'' என்று சொன்ன அந்த அம்மாவின் கண் களில் இருந்து கண்ணீர் வந்துவிட்டது. எவ்வளவு கஷ்டங்களை வாழ்க்கையில் அனுபவிக்கிறார்கள் என்பதை அந்த அம்மா பேசும் வார்த்தைகளிலும் கண்களில் இருந்து சொல்லாமல் கொள்ளாமல் வந்து விழும் கண்ணீரில் இருந்தும் தெரிகிறது. அந்த அம்மாவிடம் கேட்டேன் ''இதைப் போய் உங்கட கிராம சேவகரிடம், பிரதேச செயலரிடம் கேட்காதேங்கோவன்'' என்று.

அதற்கு அந்த அம்மாவோ ''கிராம சேவகர் என்ற அர்த்தம் புரியாதவர்கள் இப்ப கிராம சேவகர் பதவிக்கு வந்துவிட்டினம். எத்தனை தடவை தம்பி போறது. அங்கு போனால் ஒழுங்கான பதிலைச் சொல்லிறதாய் காணவில்லை. கடுப்பும் கொதிப்புமாய் நிற்கினம். தங்கட சொத்துக்களை மக்களுக்கு கொடுப்பதான நினைப்பில் நிற்கினம். ஆங்கிலத்தில் ஒரு வார்த்தை Sorry என்று சொன்ன மாதிரி சொல்லுகினம் பாருங்கோ. உனக்கு இல்ல, போ, பிறகு வா என என்னைக் கண்டதும் இதைத் திருப்பித் திருப்பி சொல்லிவிடுகினம். உத்தியோகபூர்வமற்ற முறையில் அறிவிக்கப்பட்டு 2010 இல் மீள் எழுச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதும் நான் பிரதேச செயலரிடம் சென்று கேட்ட போது, உங்கள் காணி இராணுவக் காவல் அரணுக்குள் இருப்பதால் பங்கீட்டு அட்டையை மாற்ற வேண்டும், நீங்கள் அடுத்த திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படுவீர்கள் எனவும் தெரிவித்தார். நான் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்பே சேர்ந்து கொண்டேன். மயிலங் கூடல் இளவாலைப் பகுதியில் இராணுவக் காவலரணுக்கு அப்பால் விடுவிக்கப்பட்ட மக்களுக்கான வேலைத் திட்டக் கலந்துரையாடல் நடைபெற்றது. ஆனால் நாம் அதில் பாதிக்கப்பட்டவர்களில் முக்கியமானவர்கள். எனினும் அந்தக் கூட்டத்துக்கு எமக்கு அறிவிக்கப் படவில்லை. என்ன விடயம் கலந்துரையாடப்பட்டது என்பது கூட எமக்குத் தெரியவில்லை. அங்கு வேலைத் திட்டம் சம்பந்தமான பதிவுகள் நடைபெறுவதாகக் கேள்வியுற்றுத் திட்டப் பகுதியினரிடம் உறுதிப் பதிவு உறுதிப்படுத்தல் பத்திரம் கொண்டு சென்று பதியச் சென்றேன். பதிவு செய்பவர் பதிய மறுக்கின்றார். 5000 ரூபா பெற்றதைக் காரணம் காட்டுகிறார். அத்தோடு இ. அட்டை நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது. இந்த விடயம் சம்பந்தமாக பிரதேச செயலருக்குக் கடிதம் அனுப்பியும் எந்தவித பிரயோசனமும் இல்லை தம்பி'' என்று சொன்ன அந்த அம்மா, ''தம்பி உங்களை மினக்கெடுத்தி விட்டுட்டன்'' என்றா. ''பரவாயில்லை அம்மா இந்த நாட்டில சுழியோடத் தெரிந்தவர் என்றால்தான் சுழியோடி காரியங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும். நேரடியாகச் சென்று எந்தக் காரியங்களையும் நிறைவேற்றிக் கொள்ள முடியாது அம்மா. இந்த நாடு வர வர மோசமாகிப் போய்க் கொண்டிருக்கின்றது. பாடம் படித்து பரீட்சையில் பாஸ் பண்ணி வேலைக்கு வந்தவர்கள். இவர்களுக்கு எங்க தெரியப் போகுது இந்த மண்ணின் தார்ப்பரியம், மக்களின் முக்கியத்துவம். சரி வாறன் அம்மா'' என்று புறப்பட்டேன். ✱

---

# நான்காமாண்டு நினைவலைகள்



*அமரர் சின்னத்துரை சிவபாதம்*

**(இலங்கை வங்கி வாடிக்கையாளர்
சேவை முகாமையாளர்,
இரண்டாம் மேற்தரக் கிளை, யாழ்ப்பாணம்)**

*அன்னை மடியில் : 08.09.1954*
*ஆண்டவன் அரவணைப்பில் : 01.09.2007*
**சங்கடஹர சதுர்த்தி**

நான்கு ஆண்டுகள் கடந்தும்
ஆறவில்லை எம் துயரம் எண்ணாத
நேரமதில் எம்மைவிட்டு எங்கு
சென்றீர். பூமியின் பொறுமையே
புண்ணியத்தின் பெருமகனே..
அன்புடன் அறன் இணைந்த
நல்லதோர் கணவனாய் பண்புடன்
எமை வளர்த்த பாசமிகு தந்தையாய்
நல்லதொரு அறிவூட்டும் நாம்
விரும்பும் மாமனாய் அன்புடன்
எமையெல்லாம் அரவணைத்த
பேரனாய் உறவுகளை உபசரித்து
உளம் மகிழ வரவேற்ற உம்
சிரித்த முகமும் கனிவுடைய
வரவேற்பும் காணாது
ஏங்குகின்றோம். கவலையினால்
வாடுகின்றோம். உமது ஆத்மா
சாந்தியடைய அனுதினமும்
வேண்டுகின்றோம்.

**மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

*26(10), வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்: 12.12.1979
மறைவு : 28.08.2010**

சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையைப்
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## *திருமதி பிருந்தா நவநீதன்*

**(முன்னாள் முகாமைத்துவ உதவியாளர்,
வலிகாமம் கல்வி வலயம்)
திதி: 16.09.2011**

அன்பு பொங்கும் எம் உறவே!
ஆண்டு ஒன்று போனாலும்
எம் இதயத்து வேதனை மாறிடுமோ
களங்கமற்ற அன்பும்
எதிர்பார்ப்புகள் அற்ற உங்கள்
அழகிய மனதும்
இனி எப்போதும்
யாரிடமும் காணமாட்டோம்
உங்களின் பிரிவின் வலி
எப்போதும் மாறாது
எம் மீது உள்ள உங்களின் அன்புபோல

*இன்று (16.09.2011) வெள்ளிக்கிழமை அவரது
இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும்
கலந்துகொள்ளுமாறு அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.
இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று
அனைவரும் வருகை தருமாறு
கேட்டுக்கொள்கின்றோம்.*

**தாய், அத்தை, சகோதரர்கள்.**

**றமேஸ் ஸ்ரோர்ஸ்
37, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

# சந்தனம் ஆச்சாரி சவுந்தரராஜன்

(உரிமையாளர், துர்க்கா நகைப் பூங்கா)

**மண்ணில்:**
*12.10.1954*

**திதி:**
அபரபக்க சதுர்த்தி
*16.09.2011*

**விண்ணில்:**
*28.08.2010*

ஆறாத்துயரில் ஆண்டொன்று ஆனாலும்...
விழிதனில் உந்தன் நினைவுகள் கண்ணீராய் வழிந்தோட
பாசம் என்னும் கூட்டில் பாசப் பறவைகளாய் நாம் வாழ்ந்தோம்
சொந்தங்களை அரவணைத்து அன்போடு வாழ்ந்தீர்கள் அப்பா
விதியின் விளையாட்டோ இல்லை காலனின் சூழ்ச்சியோ?
காலையில் பூத்து மாலையில் வாடிவிடும்
பூவைப் போல் எங்களை விட்டு நீங்கள்
பிரிந்தபோது நடுநிசியில் தனிக்காட்டில்
தவிக்கவிட்ட பேதைகள் போல் தவித்து நிற்கின்றோம் அப்பா
நிஜமாய் கண்ட உருவத்தை நிழற்படமாய் பார்க்கும்போது
நெஞ்சம் விம்முகிறது அப்பா எத்தனை ஆண்டுகள் சென்றாலும் - எங்கள்
உள்ளங்களில் நீங்கள் வாழ்ந்திருப்பீர்கள் அப்பா
மீண்டும் ஒரு முறை உம் அன்புக்காகவும் அரவணைப்புக்காகவும்
ஏங்கித் தவிக்கின்றோம் ஈரவிழிகளுடன்

குடும்பத்தினர்

38, கில்னர் ஒழுங்கை,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாயில் ஆங்கிலக் கல்விக்கு முன்னுதாரணமாக திகழும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் கல்வி என்பது இன்றியமையாத ஒன்றாகும். இதனால் சிறந்த மாணவச் சமுதாயத்தையும் அறிவியல் உலகத்தையும் உருவாக்கும் பொறுப்பு பாடசாலைகளையே சாரும்.

அந்த வகையில் சிறந்த கல்விமான்களையும் ஒழுக்க சீலர்களையும் உருவாக்கிய பாடசாலைகளில் ஒன்று மானிப்பாய் மெமோறியஸ் ஆங்கிலப் பாடசாலையாகும்.

ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் இன்று சகல தரப்பினாலும் உணரப்படுகின்ற வேளை சுமார் 175 ஆண்டுகளுக்கு முன்பே மிஷனரிமார்கள் தமது மதப் பிரசாரத்துடன் ஆங்கிலக் கல்விப் போதனைகளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கில மொழி மூல பாடசாலைகள் உருவாக்கப்பட்டதன் விளைவாக 1836 ஆம் ஆண்டு மானிப்பாய் பிரதேசத்தின் தெற்குப் புறமாக உடுவில் வீதியில் இடதுபுற ஒழுங்கையில் அமைக்கப்பட்டதே மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையாகும்.

மானிப்பாய் பிரதேசத்தில் முதன்மை மிக்க உயர்தரப் பாடசாலையாக விளங்குவது இந்தப் பாடசாலையின் தனிச் சிறப்பாகும். அத்துடன் மானிப்பாய்ப் பிரதேசத்தைச் சேர்ந்த வசதி குறைந்த மாணவர்களை முன்னிலைப்படுத்தி அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு படிக்கல்லாக இருந்து இன்றும் தரம் 1 பாடசாலையாக வளர்ச்சி அடைந்து திறமையான கட்டுக்கோப்புடன் கூடிய பாடசாலையாக விளங்குகின்றது.



இந்தப் பாடசாலையின் ஆரம்ப அதிபர்களாக வேலாயுதர், பொன்னையாஸ்ரோங், திருவிளங்கம், வயிரவநாதன் பேஜ், ஏ.எம். நந்தானியேல், ரி.ஜி தோமஸ், ஸ்கடர் மாணிக்கவாசகர், ஜே.எஸ்.நவரத்தினம், எஸ்.பி இராஜரத்தினம், எஸ்.பி. அழகரட்ணம் ஆகியோர் கடமையாற்றியுள்ளார்கள்.

1943 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலையின் அதிபராக எஸ்.வி. அழகரட்ணம் இருந்த போதுதான் பாடசாலை அரசினால் சுவீகரிக்கப்பட்டது.

1979 ஆம் ஆண்டு தொடக்கம் 1983 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் சுந்தரதாஸ் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி பின்னர் வெளி நாடு சென்றுவிட்டார். அதனைத் தொடர்ந்து க.பொன்னுத்துரை பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி வந்தார். அதனைத் தொடர்ந்து இந்தப் பாடசாலையின் மாணவராக, ஆசிரியராக, உப அதிபராக இருந்த அ.மு.அருணாசலம் பாடசாலையின் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் தன்னை அர்ப்பணித்து மானிப்பாய் பிரதேச மக்கள் மத்தியிலும் பாடசாலை சமூகத்தினரிடமும் அன்பையும் மரியாதையையும் வாங்கிக் கொண்ட அதிபர்களில் அ.மு.அருணாசலம் முதன்மையானவர்களில் ஒருவராவார்.

பாடசாலையில் இவரின் வருகைக்குப் பின்னர் மாணவர்களின் தொகை 1,600 இற்கும் மேற்பட்டதாக அதிகரிக்கத் தொடங்கியது.

சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டத்திலேயே முதன்மை மிக்க பாடசாலையாக விளங்குவதற்கு அ.மு. அருணாசலத்தின் நேர்மையான கடமைமிக்க செயற்பாடு முக்கிய காரணம்.

இந்தப் பாடசாலையில் மாணவர்களின் தொகை அதிகரிப்பினால் கனிஷ்ட பிரிவு, மேற்பிரிவு என பாடசாலை இரு பிரிவுகளாக இயங்கத் தொடங்கியது. கனிஷ்ட பிரிவின் அதிபராக கே.சிவநேசன் கடமையாற்றினார்.

**சோபனா**

தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையுள்ள இந்தப் பிரிவில் பாடத்திட்டத்திற்குப் புறம்பாக எழுத்தறிவூட்டும் பயிற்சி, விசேட வகுப்புகள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட் சைக்கான மேலதிக வகுப்புக்கள் என ஆசிரியர்களாலும் அதிபராலும் பாடசாலை நேரம் முடிவடைந்தவுடன்மேலதிக வகுப்புக்களை நடத்தி ஆரம்பக்கல்வி மாணவர்களின் திறன்களை விருத்திசெய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 15, Sirampiyadi Lane, (off Stanly Road) Jaffna. 0212228250
7ம் ஆண்டின் நிறைவை முன்னிட்டு
மாபெரும் புலமைப் பரிசில்
80% OFFER
Diploma in Microsoft office 3 Months ~~10000~~ 2000
Diploma in Desktop Publishing 3 Months ~~10000~~ 2000
Diploma in Web page Designing 3 Months ~~10000~~ 2000
Diploma in Graphic Designing 3 Months ~~10000~~ 2000
Diploma in Hardware Engineering 3 Months ~~10000~~ 2000
Diploma in Computerized Accounting 3 Months ~~15000~~ 3000
Diploma in Computer Science 4 Months ~~12500~~ 2500
Hon. Diploma in Computer Science 4 Months ~~12500~~ 2500
Hon. Diploma in Programming 3 Months ~~10000~~ 2000
AUTO CAD 3 Months 2000
Advanced Diploma Courses
Advanced Dip. in Multimedia
Advanced Dip. in Video Editing
Advanced Dip. in Networking
3000/=
TP : 0212228250
0774907444
Batch Time:
I) 16/09/2011
II) 17/09/2011
III) 18/09/2011
IV) 21/09/2011
9AM OR 3PM

Hotline: 077 309 9 308
A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே
ஆங்கிலத்தில் சர்வதேச சான்றிதழ்
(SPOKEN ENGLISH)
City & Guilds - UK ENGLISH COURSE @ ESOFT
IESOL - International English for Speakers of Other Languages.
ISESOL - International spoken English for Speakers of Other Languages.
ஆங்கிலத்தை ஆரம்பத்தில் இருந்து கற்க விரும்புபவர்களுக்கு
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Batch I 18/09/2011
Batch II 20/09/2011
Batch III 22/09/2011
Esoft Computer Studies
No.166/3 Navalar Road, Jaffna.
Jaffna 021 222 4142
Nelliyadi 021 226 4940
Uduppiddi 0213201303
Kilinochchi 021 228 54
Chavakachcheri 077 625 078
Kodikamam 077 625 07

புதுக்கடைத் திறப்புவிழா
அ.தங்கராசா அன் சன்ஸ்
A.Thangarasa & Son's
Genaral Merchant & Commision Agent's
No.60, Jumma Mosque Lane, Jaffna
இன்று (16.09.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 9.00 - 10.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் மங்களகரமாக திறந்து வைக்கப்படுகிறது.
யாழ்.விவசாயிகளே....
யாழ்.நகரில் ஓர் புதிய உதயம்
★ உங்கள் விவசாய விளைபொருள்களை மொத்தமாக சிறந்த விலைக்கு விற்பனை செய்து கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்
★ வியாபாரிகள், பொதுமக்கள் விவசாய விளைபொருள்களை நியாய விலையில் கொள்வனவு செய்திட
★ கோழிமுட்டைகளை அடை காக்கும் [ Incupete ] இயந்திரங்களை சீனாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்து உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள
★ யாழ்ப்பாணத்திலிருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு விரைவான பொதி பரிமாற்ற சேவை
★ ஆடம்பர, சாதாரண [ A/C or Non A/C ] தங்குமிட வசதிகளுடன்
உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்திட இன்று மங்களகரமாக திறந்து வைக்கப்படுகின்றது.
தொடர்புகளுக்கு: 075 0434277, 0778995431.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வின் அவசியம் குறித்து பிளேக்கிடம் ஐ.தே.க.வலியுறுத்து

கொழும்பு, செப்.16

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை உடனடியாக வழங்கவேண்டியதன் அவசியத்தை ஐக்கிய தேசியக்கட்சி வலியுறுத்தி உள்ளது. அமெரிக்க ராஜங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் உதவிச் செலாளர் ரொபர்ட் ஓ பிளேக்கைச் சந்தித்த கட்சிப் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்தனர்.

இந்தத்தீர்வு முயற்சியை துரிதப்படுத்துவதற்கான அழுத்தங்களை அனைத்துத் தரப்பினரும் இலங்கை அரசுக்கு வழங்கவேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும் என்று ஐ.தே.க. பிளேக்கிடம் கூறியுள்ளது.

ஐ.தே.க. பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, மங்கள சமரவீர ஆகியோர் கடந்த செவ்வாய்க்கிழமை ரொபர்ட் ஓ பிளேக்கை சந்தித்து உரையாடினர்.

இதுதொடர்பாக பிரதித் தலைவர் கரு ஜயசூரிய கூறியதாவது:


வடக்கு, கிழக்கின் தற்போதைய நிலைமை பற்றியும், தற்போதைய அரசியல் நிலைவரம் பற்றியுமே அவருடன் பேசினோம்.

குறிப்பாக அரசியல் தீர்வு பற்றிப் பேசியபோது, போரின் பின்னரான இந்தச் சூழ்நிலையில் அரசியல் தீர்வு எந்தளவுக்கு அவசியமாகின்றது என்பதை நாம் அவருக்கு விளக்கிக் கூறினோம்.

அரசியல் தீர்வைப் பொறுத்தவரையில் ஐக்கிய தேசியக்கட்சி என்றும் ஒரே நிலைப்பாட்டில்தான் இருக்கின்றது. இதுதொடர்பாக நாம் அரசைப்போல் மாறுபட்ட நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. இதை நாம் பிளேக்கிடம் மிகத் தெளிவாக எடுத்துக் கூறினோம்.

அத்தோடு, வடக்கு, கிழக்கில் இப்போது எழுந்துள்ள அசாதாரண நிலைமை பற்றியும் இதைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்காமை பற்றியும் நாம் அவரிடம் விளக்கினோம்.

இந்த விடயங்கள் தொடர்பாக ரொபர்ட் ஓ பிளேக்கும் சாதகமான கருத்துகளை எம்மிடையே பகிர்ந்து கொண்டார். எமது கருத்துகள் அவரால் சாதகமாகப் பரிசீலிக்கப்படும் என்று நம்புகிறோம் - என்றார். (ச)



கொழும்பு, கோட்டையிலிருந்து பதுளை நோக்கி நேற்றுமுன்தினம் புதன் கிழமை சென்ற உடரட மெனிகே ரயில் மருதானையில் தடம்புரண்டு நிற்கிறது. உடனடியான அது சரிசெய்யப்பட்டு நேற்றுமுன்தினம் மாலையே ரயில் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

# பெண் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும்

## விஜயகலா எம்.பி. கோரிக்கை

கொழும்பு, செப். 16

கொழும்பு வெலிக்கடை பெண்கள் பிரிவு சிறைச்சாலையில் 35இற்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் சிலர் குழந்தைகளுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை மனிதாபிமான அடிப்படையில் அரசு விடுவிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அரசிடம் கோரியுள்ளார்.

வெலிக்கடை பெண்கள் பிரிவு சிறைச்சாலைக்கு நேற்றுமுன்தினம் சென்ற அவர் அங்கு நீண்டகாலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ள பெண் கைதியான வசந்தி ரகுபதிசர்மாவைப் பார்வையிட்டார். இவரது விடுதலை குறித்து நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் உறுதியளித்துள்ளார்.

# மஞ்சள் கோட்டில் பாதையைக் கடக்காதோருக்கு அபராதம்

கொழும்பு, செப். 16

மஞ்சள்கோட்டை விடுத்து வேறு இடங்களில் வீதியைக் கடக்கமுயன்ற ஆறு பேருக்கு கொழும்பு போக்குவரத்து நீதிமன்ற நீதிவான் தலா நூறு ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

கிருலப்பனை, கிரேண்ட்பாஸ், பம்பலப்பிட்டி பகுதிகளிலேயே இவர்கள் போக்குவரத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இது முதல் தடவை என்பதால் சிறிய தொகையை அபராதமாக விதிக்கிறேன் என்று நீதிவான் தெரிவித்துள்ளார்.

# ஆசிரியர்கள் தேர்வுப் பரீட்சை

கொழும்பு செப்.16

ஆயிரம் சிறந்த பாடசாலைகளுக்கான பட்டதாரி ஆசிரியர்களை தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சை எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இந்தப் பாடசாலைகளில் ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம், கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கே ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர் என்று கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பரீட்சையில் சித்திபெறும் பட்டதாரிகளுக்கு தங்களது நிரந்தர வசிப்பிடத்துக்கு அண்மையிலுள்ள பாடசாலைகளில் நியமனம் வழங்கப்படும். ஒரே பாடசாலையில் தொடர்ந்து எட்டு வருடங்கள் பணிபுரிய வேண்டும் என்று அவர் மேலும் கூறினார். (ச-5)

**Spoken English With Diploma Certificate**

*Speaking, Listening, Writing, Reading, யாவும் Audio மற்றும் Video Visuals மூலமாக கற்பிக்கப்படுகின்றன.
* A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், உயர்கல்வி மாணவர்கள், மற்றும் வெளிநாடு செல்வோர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம். (17-09-2011 சனிக்கிழமை)

Duration 3 - Months
Fees - 5000/=

பிரிவு I - 2-30 P.m
பிரிவு II - 4-00 P.m

Sky Computers (Pvt ) Ltd
No 162, Main Street Jaffna.
T.P No: 021-2221417

**வெளிநாட்டு மொழிக் கல்வியும் VISA பற்றிய ஆலோசனைகளும் இலவசம்**

VISA சம்பந்தமான நேர்முகப்பரீட்சைக்கு முகம்கொடுக்க வேண்டிய இடம் DAAD Office for corrdination Embassy of the Federal Republic of Germany Colombo, VISA பெறுவதற்கு தேவையான ஒன்பது (09) விடயங்களில் மிக முக்கியமானது மொழி (எழுதுதல், வாசித்தல், மற்றவர்பேசுதல் பேசுவதை விளங்குதல்) இவை நான்கும் தெரிந்தால்தான் அதிகூடிய புள்ளிகளைப் பெறலாம். இவை கற்பிக்கத்தெரிந்த ஆசிரியர்களால் மட்டுமே கற்பிக்க முடியும். மற்றவர்கள் கூறு வதையோ விளம்பரங்களையோ வாசித்து பணத்துக்காக கல்வி கற்பிக்கும் ஆசிரி யர்களை நாடாமல் நீங்கள் தெரிவு செய்யும் ஆசிரியர் மொழி சம்பந்தமான நான்கு விடயங்களிலும் தேர்ச்சி பெற்றவரா? என்பதை முதலில் அறிந்து உங்கள் பிள்ளைகளை மொழிக் கல்விக்கு அனுப்புங்கள். அதற்கு ஒரேவழி நீங்கள் குறிப்பிடும் நாட்டில் முறைப்படி கல்விகற்று இருபது வருடங்களுக்கும் மேலாக வசிக்கும் உங்கள் உறவினர் மூலமாகவோ அல்லது தெரிந்தவர்கள் மூலமாகவோ நீங்கள் தெரிவு செய்யவிரும்பும் ஆசிரியருடன் குறைந்தது 10 நிமிட நேரமாவது கதை யுங்கள். எந்த ஆசிரியரால் நான்கு விடயங்களும் படிப்பிக்க முடியுமோ அவரை நாடுங்கள். பணத்தை வீண் விரயமாக்காதீர்கள்.

மேலும் பல இலவச ஆலோசனைக்கு 0774494764

**தவறிவிட்டது**

மகேந்திரராசா விமலநாதன் ஆகிய எனது தே. அ.அ, மணிபேஸ் ஒன்று கடந்த 08.09.2011 காலை 8.30 மணியளவில் தர்மகேணி பளையில் ரிப்பர் R.D.A இல் ஏறி கிளிநொச்சி டிப்போ சந்தியில் இறங்கும்போது தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர் எனது T.P0778245600 இலக்கத்துக்கு தெரியப்படுத்தவும்.



இன்று
அகவை
98 இல்
பாதம்
பதிக்கும்

புலவர்மணி
வை.க.சிற்றம்பலம்

அளவெட்டி - இணுவில் ஓய்வுபெற்ற ஆசிரியர்
முதுபெரும் புலவர், கலாபூஷணம், புலவர் மணி
**திரு.வை.க.சிற்றம்பலம்**
அவர்கள் இன்று (16.09.2011) வெள்ளிக்கிழமை தனது 98 ஆவது அகவையில் பாதம் பதிப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். எமது பாசமிகு அன்பு ஐயாவுக்கு நல்ல உடல் நலத்தோடு கூடிய நீண்ட ஆயுளை அருளவேண்டும் என இறைவனை வேண்டுவதுடன் அவர் மென்மேலும் பல சிறப்புக்களையும் பெற்று வாழவேண்டுமெனவும் வாழ்த்துகின்றோம்.

வட்டுவினிப் பிள்ளையார் ஒழுங்கை,
இணுவில் மேற்கு, இணுவில்.


வாழ்த்துவோர்: மக்கள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.

**கேள்வி கோரல்**


மகாதேவ ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லத்தில் 20 பசுக்களின் சாணத்தின் மூலம் உயிர் வாயு தயாரிக்கும் வகையில் சீன மாதிரி உயிரியல் வாயுக்கூடம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது சாதாரண கூடத்திலும் பார்க்கப் பெரியது. இந்தக் கட்டுமானத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களிடமிருந்து இதற்கான மாதிரி வரைபடம், செலவு மதிப்பீடு இந்தத்துறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு பொறுப்பெடுத்துக் கட்டுவதற்கான சம்மதத்தினையும் தெரிவிக்கும் கடிதத்துடன் விண்ணப்பத்தை 2011.09.20 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள அலுவலகத்துக்கு நேரில் சமுகமளித்து கேள்விப் பெட்டியில் இடுவதன் மூலமோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பிவைக்குமாறு கோருகின்றேன்.

தி. இராசநாயகம்,
தலைவர்,
மகாதேவ ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

**ஸ்ரீ காளிகாம்பா ஜோதிடம்**



சுவாமிகள்: இலக்சுமி அம்மா சாஸ்திரி (50 வருட அனுபவம்) இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிட வல்லுநர்



கைரேகை, ஜாதகம், திருமண யோகம், வியாபாரம், வெளிநாட்டுப்பயணம், கல்வி, குழந்தைப் பாக்கியம், வேறு என்ன பிரச்சினையாக இருந்தாலும் இவரைச் சந்தித்து தீர்வு காணுங்கள்.

தொடர்பு: நியூ லலிதா ஜுவல்லர்ஸ்
இல 191, H.K, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P- 0776925916
நேரம்: காலை 6 மணி முதல் மாலை 7 மணிவரை

**அருள் முருகன் திருமணப் பணியகம்**

உங்கள் பிள்ளைகளது தகுதிகளுக்கு ஏற்ப Doctors, Engineers உட்பட எத்தகைய இந்து - கிறிஸ்தவ உள்நாடு/ வெளிநாடு மணமக்கள் தேவைக்கும் நேரில் சந்திக்கலாம். ஓய்வுநிலை ஆசிரியரது SLTS-1 ஓய்வுகால கௌரவ சேவை! 03, யாழ்.வீதி, சிறாம்பியடி லேன், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (தரகரல்ல)
T.P: 021 222 9334, 0718475114

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேரறிஞர் அண்ணாவின் 103 ஆவது பிறந்த தினமான நேற்று அண்ணாவின் உருவச்சிலைக்குத் தமிழக முதல்வர் ஜெயலலிதா, தி.மு.க. தலைவர் கருணாநிதி , தே.மு.தி.க. தலைவர் விஜயகாந் ஆகியோர் மலர் தூவி அஞ்சலி செலுத்துகின்றனர்.

# அண்ணாவின் பிறந்த நாள் நேற்று ஆலயங்களில் தமிழக அரசு சமபந்தி

சென்னை, செப்.16

பேரறிஞர் அண்ணாவின் 103 ஆவது பிறந்தநாள் தமிழகம் முழுவதும் நேற்று கடைப் பிடிக்கப்பட்டது.

அறிஞர் அண்ணாவின் உருவச்சிலைக்கு அரசியல்தலைவர்கள் பலர் மலர்தூவி மரியாதை செலுத்தினர். தமிழகத்தில் உள்ள முக்கிய கோயில்களில் அரசு சமபந்தி இட்டது.

அந்த வகையில் சென்னை அண்ணாசாலையில் உள்ள அவரது உருவச் சிலைக்கு முதலமைச்சர் ஜெயலலிதா மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

வள்ளுவர் கோட்டத்தில் உள்ள அண்ணா சிலைக்குதி.மு.க. தலைவர் கருணாநிதி மாலை அணிவித்து வணங்கினார்.

தி.மு.க. சட்டமன்ற கட்சித் தலைவர் மு.க. ஸ்டாலின், பொதுச் செயலாளர் அன்பழகன், முன்னாள் அமைச்சர்கள் துரை முருகன், ஆற்காடு வீராசாமி, பரிதி இளம்வழுதி, எஸ். பி.சற்குண பாண்டியன், இந்திரகுமாரி உட்பட பலரும் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தனர்.

எம்.ஜி.ஆர். கழகத் தலைவர் ஆர்.எம். வீரப்பன் தலைமையில் அந்தக்கட்சியினர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தார்கள்.

தே.மு.தி.க அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த அண்ணாவின் உருவப்படத்துக்கு கட்சித் தலைவர் விஜயகாந்த் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்வில் அவைத் தலைவர் பண்ருட்டி எஸ். ராமச்சந்திரன் எம்.எல்.ஏ., பொருளாளர் ஆர். சுந்தர்ராஜன் சட்டபேரவை உறுப்பினர் தலைமை நிலையச் செயலாளர் ப. பார்த்தசாரதி சட்டபேரவை உறுப்பினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

லட்சிய தி.மு.க. தலைவர் டி. ராஜேந்தர், அண்ணா சாலையில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தார்.

இதேவேளை அண்ணாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு தமிழக முதல்வர் ஆலயங்களில் நடத்திய சமபந்திப்போசனத்தை இந்துமுன்னணி அமைப்புவன்மையாக்க கண்டித்துள்ளது. (வ)

# டில்லி குண்டுவெடிப்பு; முஸ்லிம் ஒருவர் கைது

ஜம்மு, செப்.16

டில்லி உயர் நீதிமன்ற குண்டுவெடிப்பு தொடர்பாக ஹூஜி இயக்கத்தைச் சேர்ந்த ஹிலால் அமின் என்பவர் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி காலை டில்லி உயர் நீதிமன்றத்திற்கு வெளியே குண்டுவெடித்தது. இதில் 14 பேர் பலியாயினர், பலர் படுகாயம டைந்தனர். காயம் அடைந்தவர்கள் ஆர்.எம்.எல் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் இந்த குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக இதுவரை பெரிய அளவில் எந்தத் தடையங்களும் கிடைக்கவில்லை. இதில் தொடர்புடைய வர்கள் குறித்து தக்வல் தந்தால் ரூ. 10 லட்சம் பரிசு வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்த நிலையில் குண்டு வெடிப்பு நடந்த பின்னர் பொலிஸாருக்கு வந்த ஈமெயிலை அனுப்பிய ஹூஜி இயக்கத்தைச் சேர்ந்த ஹிலால் அமின் என்பவரை நேற்று முன்தினம் மத்திய தேசிய புலனாய்வு அமைப்பினர் கைது செய்துள்ளனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள கிஷ்த்வார் மாவட்டத்தில் வைத்து ஹிலால் அமீனைக் கைது செய்தனர். அவர் ஹூஜி (ஹர்கத்துல் ஜிகாதி அல் இஸ்லாமி) தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்.

குண்டுவெடிப்புக்கு பொறுப்பேற்று ஹூஜி அமைப்பு ஈமெயில் ஒன்றை அனுப்பியது. இதை ஹிலால் சொல்லித் தான் அந்த அமைப்பு அனுப்பியது என்பது அவரிடம் நடத்திய விசாரணையில் தெரிய வந்தது.

இதனை அடுத்து அவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. (வ)

# பரமக்குடிக்குச் செல்ல சீமானுக்கு அனுமதி மறுப்பு

பரமக்குடியில் கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறையின்போது உயிரிழந்த குடும்பத்தினரை நேரில் சந்திக்க நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமானுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

பரமகுடியில் இடம் பெற்ற சம்பவத்தின் போது 7 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். உயிரிழந்தோரின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூற பரமகுடிக்குச் செல்வதற்கு பொலிஸாரிடம் நாம் தமிழர் இயக்கத்தின் தலைவர் சீமான் தரப்பில் அனுமதி கேட்கப்பட்டது. வன்முறைப் பகுதியில் 144 தடை இருப்பதால் யாருக்கும் அனுமதி கிடையாது பொலிஸ் தரப்பு கூறிவிட்டது. இதையடுத்து இந்த வன்முறையில் படுகாயம் அடைந்தவர்கள், மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களை நாம் தமிழர் இயக்கத்தின் தலைவர் சீமான் சந்தித்து ஆறுதல் கூறினார். (வ)

# கச்ச தீவை மீட்கும் வரை போராட்டம் தொடரும்

## பாரதிய ஜனதா அறிவிப்பு



கச்சதீவு 1974 இல் இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டது. இதனால், தமிழக மீனவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. இலங்கை ராணுவத்தினர் தமிழக மீனவர்களை சுட்டு கொல்கின்றனர். எனவே, கச்சத்தீவை திரும்பப்பெற வேண்டும். அதுவரை பா.ஜனதா தொடர்ந்து போராடும். இலங்கை தமிழர்களுக்காக அனைவரும் இணைந்து போராட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் பா.ஜ.க.மாநிலத் தலைவர் பொன் ராதாகிருஷ்ணன்.

பா.ஜனதா கட்சி சார்பில் மத்திய அரசைக் கண்டித்து திரு வட்டாரில் இருசக்கர வாகனப்பேரணி, பொதுக்கூட்டம்என்பன இடம்பெற்றன. மாநிலத் தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் பேரணியை ஆரம்பித்து வைத்தார். மாலையில் திருவட்டார் பஸ் நிலையம் சந்திப்பில் பேரணி நிறைவடைந்தது. அதனையடுத்து அங்கு பொதுக் கூட்டம் நடந்தது.

கூட்டத்தில், கட்சியின் மாநில தலைவர் பொன்.ராதா கிருஷ்ணன் சிறப்புரையாற்றினார். அப்போது அவர் கூறுகையில்:

தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களிலும் பா.ஜனதா எழுச்சி பெற்றுள்ளது. தற்போது புது வேகத்தில் வளர்ந்து வருகிறது. 1947இல் சுதந்திரம் கிடைத்தில் இருந்து இந்தியாவை அதிக முறை காங்கிரஸ் ஆட்சி செய்து வருகிறது. காங்கிரஸ் அரசின் நிலையற்ற கொள்கைகளால் மக்கள் அவதிப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. - என்றார்.

# தமிழக அகதிமுகாமில் உள்ள இலங்கை மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை

இந்தியாவில் கல்லூரிகளில் இந்த வருடம் தொடக்கம் உயர்கல்வி பயிலும் தமிழக அகதி முகாம்களில் உள்ள இலங்கை தமிழ் மாணவர்களுக்கும் கல்வி உதவித் தொகை அறிமுகப்படுத்தப் படும் என்று அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் அறிவித்துள்ளார்.

சட்டசபையில் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு பதில் பொதுத்துறை மானியக் கோரிக்கை அறிவிப்புகளை நிதி அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் வெளியிட்டார். மேற்படி கோரிக்கையிலேயே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:


முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழ் மாணவர்களுக்கு பாடசாலை இறுதி படிப்புவரை இலவச கல்வி வாய்ப்புகள் அளிக்கப்படுகிறது. அவர்களின் உயர் கல்வியை ஊக்குவிக்கும்பொருட்டு கல்வி உதவித் தொகை திட்டம் இந்த வருடத்தில் இருந்து அறிமுகப்படுத்தப்படும்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் விடுதிகள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை ஆகியவற்றின் கீழ் இயங்கி வரும் 1238 விடுதிகளிலும் தலா 5 இடங்கள் இலங்கை தமிழ் மாணவர்களுக்காக ஒதுக்கப் படுகிறது. இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

# சிதம்பரத்தையும் உள்ளே இழுக்கிறது ஸ்பெக்ட்ரம்

## சுப்பிரமணிய சுவாமி வழக்கு

டில்லி, செப்.16



2 ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டு வழக்கில் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தை யும் ஒரு குற்றவாளியாக சேர்க் கக் கோரி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியசாமி மனுதாக் கல் செய்துள்ளார். நீதிபதி ஓ.பி.சைனியிடம் அவர் தாக்கல் செய்த மனுவில்,

2 ஜி ஸ்பெக்ட்ரம் விற்பனை விவகாரத்தில் பிரதமர் மன்மோகன் சிங் நாடாளுமன்றத்தில் அளித்த விளக்கத்தைப் பார்த்தால், 2 ஜி ஸ்பெக்ட்ரத்தை ஏலம் விடாமல் விற்பது என்ற முடிவு மத்திய அமைச்சரவை எடுத்த முடிவு என்பதும், இதில் முன்னாள் தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் ராசாவுக்கு மட்டுமல்லாமல் ஏனையவர்களுக்கும் தொடர்பு இருப்பதும் உறுதியாகிறது.

அப்போதைய நிதியமைச்சர் என்ற முறையில் ப.சிதம்பரத்துக்கும் இதில் தொடர்புள்ளது. இதனால் அவரையும் இந்த வழக்கில் குற்றவாளியாகச் சேர்க்க வேண்டும்.

இந்த வழக்கில் என்னையும் சாட்சியாகச் சேர்க்க வேண்டும். இந்த விவகாரத்தில் சி.பி.ஐ. தாக்கல் செய்த குற்றப்பத்திரிகை முழுமையானதாக இல்லை. ஸ்பெக்ட்ரம் விற்பனையில் சிதம்பரமும் சேர்ந்து தான் முடிவெடுத்தார் என்கிறபோது, அவரது பெயரை விட்டுவிட்டு சி.பி.ஐ. குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது சரியான விடயம் அல்ல என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

# 56 ஆவது அகவையில் ஓய்வுநிலை எய்தும்

## இலங்கை ஆசிரிய சேவையில் 33 வருடங்களும் யாழ்.மத்திய கல்லூரியில் 19 வருடங்களும் சேவையாற்றிய எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் இன் வழிகாட்டியான

## திரு. த. வரதராஜா அவர்களைப்

# பாராட்டும் சிறப்புமலர்

### கல்வித் தொண்டாற்றும் ஆசான்



த.வரதராஜா, யாழ். மத்திய கல்லூரியில் சிறந்த கணித ஆசானாக திகழ்ந்தவர். இவர், தனது அரச சேவை பணி யிலிருந்து ஓய்வு பெறுவதை யிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலரில் எனது ஆக்கமும் தவழ்ந்து வருவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ். நகருக்குச் சென்று கற்க இயலாத மாணவர்கள் இக் கல்வி நிலையத்திற் கற்பதற்கான ஒரு சூழ்நிலையை ஆசிரியர் த. வரதராஜா தான் ஏற்படுத்தி யுள்ளார். சிறந்த கணித ஆசானாகிய த.வரதராஜா பிறந்த கிராமத்திற்கு ஆற்றும் ஒரு பணியாகக் கொள்ளலாம். ஏழைச் சிறுவர்களுக்கு இலவசமாகக் கல்வி வழங்கப்படுவதாகவும் அறிகிறேன். இவர் தொடர்ந்தும் கல்வித் தொண்டாற்ற எனது பிரார்த்தனைகள்.

வே.தி. செல்வரத்தினம், பிரதிச் செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் -விளையாட்டுத்துறை அமைச்சு,
வடமாகாணம்.

### வாழ்த்துச் செய்தி



ஆசிரியர் த.வரதராஜா அவர்கள் தனது கல்விப் பணியை அதிகஷ்டப்பிரதேசப் பாடசாலையான யா/ வாதரவத்தை விக்னேஸ் வராக் கல்லூரியில் ஆரம்பித்து தேசியப் பாடசாலையான யாழ். மத்திய கல்லூரியில் ஓய்வுக்காலம் வரை பணியாற்றியுள்ளார். சிறந்த கணித ஆசிரியரான இவரது பணி மேலும் பல முகாமைத்துவச் செயற்பாடுகளிலும் கல்லூரியில் பணிபுரிய சந்தர்ப்பம் கிடைத்தது. அரிமாக்கழகம் போன்ற பல பொது அமைப்புகளூடாகவும் இவரது கல்வி, சமூகப்பணிகள் நிறை வேற்றப்பட்டதை நான் அறிவேன்.

ஓய்வு காலத்தில் தனது குடும்பத்தினருடன் சந்தோஷமாக நோய் நொடியின்றி நீண்ட காலம் வாழவும் கல்விப் பணியாற்றவும் இறையருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

ப.விக்னேஸ்வரன், மாகாணக் கல்விப்பணிப்பாளர், வடமாகாணம்.

### கல்வி சார் உள்ளங்களின் கணித மேதை



எமது பிரதேசத்தில் விளங்கும் தனியார் கல்வி நிறுவனமான எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரி யூட்டின் முகாமைத்துவப் பணிப்பாளரான த.வரதராஜா அவர்கள் அரச ஆசிரிய சேவையிலிருந்து பணி ஓய்வு பெறுவதையிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழச்சி அடைகின்றேன்.

நான்காவது தசாப்தத்தை அண்மித்து அதனை நோக்கிச் செல்லுகின்ற இந்த நிறுவனம் இந்தப் பகுதிப் பிள்ளைகளுக்கு நிறைவான ஆளுமை விருத்தியோடு இணைந்த கல்வியை வழங்கி வருவதையும் அதனால் சமூக இசை வாக்கமுள்ள பிள்ளைகள் உருவாக்கம் பெற்று உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் சிறப்புற்று விளங்குவதையும் பலரும் அறிவர். எனது துணைவியாரும் இந்தக் கல்வி நிறுவனத்தில் கற்று சமூகத்தில் ஆளுமை மிக்கவராக திகழ்கின்றார் என்றால் அது மிகையாகாது. வரதன் ஆசிரியரது கண்டிப்போடு கூடிய கட் டுப்பாடும் அர்ப்பணிப்போடு கூடிய சேவையும் பெற்றோரதும் ஆர்வ லர்களதும் எதிர்பார்ப்பை நிறைவு செய்தமையே இந்த நிறுவன வெற்றிக்கு ஊக்கு விசையாக அமைந்தது எனலாம். அரச பணியிலிருந்து ஓய்வு பெறும் ஆசிரியர்ஓய்வு காலத்தில் நலமுடன் இருக்க எல்லாம் வல்ல இருபாலை கற்பக விநாயகர் பெருமானை வேண்டுகின்றோம்.

மருதலிங்கம் பிரதீபன்,
பிரதேச செயலர், வலிகாமம் கிழக்கு, கோப்பாய்.

### கணித எண்ணக்கருவின் கருவறை



எமது நிறுவன அதிபர் த.வரதராஜா அவர்கள் பாடசாலை சேவையிலிருந்து ஓய்வு பெறுவது எம்மைப் பொறுத்த மட்டில் மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும். ஏனெனில், பாடசாலையிலும் நிறுவனத்திலும் சேவையாற்றி இவர், இனிவரும் காலங்களில் அவரது சேவை நிறுவனத்தில் முழுமையாக இடம் பெறப்போகின்றது. புகழ் பூத்த கணித மேதையாக இருந்தாலும் பெருமை சிறிதும் இல்லாதவர். கல்லுக்குள்ளும் ஈரம் இருப்பது போல் கண்டிப்பிலும் இளகிய மனம் இருப்பதே அவரது சிறந்த பண்பாகும். கைப் பொருள் தன்னில்மெய்ப்பொருள் கல்வியை நிறுவனத்தில் முழு அர்ப்பணிப்போடு சேவையாற்றுகின்ற நிலையை எதிர்பார்த் திருந்த எமக்கு இது சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிகின்ற செயலுக்கு ஒப்பானதாகும். இவரது ஓய்வு காலங்களில் நிறுவன சேவையை மேன் மேலும் வளர்ச்சியடைச் செய்வதற்கும் இந்தக் காலத்தில் எமது அதிபர் சிறப்புடனும் சிறந்த ஆரோக்கியத்துடனும் வாழ எல்லாம் வல்ல கற்பக விநாயரை வேண்டி வணங்கி நிற்கின்றோம்.

ஆசிரியர்கள் சார்பில் ஐ.றமேஷன்,
(சிரேஷ்ட தமிழ் ஆசிரியர்)

வெளியீடு: ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள்

The Express Institute
Irupalai Junction-Kopay




## திரு. த. வரதராஜா B.Ed.

## Sp. Trd. Maths, S.L.T.S.- I

### ஆளுமை மிக்க ஆசிரியர்



தம்பிப்பிள்ளை வரதராஜா அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். யாழ்.மத்திய கல்லூரியின் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெறும் வரதராஜா கல்வியுலகின் சிகரமாக மதிக்கப்பட வேண்டியவர். மாணவர் ஒழுக்கத்தைக் கட்டிக் காப்பதிலும் மாணவர் கல்வி வளர்ச்சியிலும் அக்கறை செலுத்துவதில் அவர் ஆசிரிய திலகமாக விளங்கியவர் எனக் கூறினால் அது மிகையாகாது. அவரது கல்வி நிறுவனத்தில் நான் கற்பித்த காலத்தில் அவரது கல்வி நிர்வாகத்தைக் கண்டு நான் வியந்திருக்கின்றேன். இந்தச் சேவையில் தனது முழுநேரத்தையும் செலவு செய்யக்கூடிய வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சியே. அவர் அரச சேவையில் ஓய்வு பெற்றாலும் தனியார் கல்விச் சேவையில் தனது திறமையைக் காட்டும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இத்தகைய பெருமை மிக்க அவரது கல்விப் பணியை மேற்கொள்ள இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளையும் உடல் ஆரோக்கியத்தையும் வழங்க வேண்டுமென இறைஞ்சுகின்றேன்.

பேராசிரியர் க.தேவராஜா, முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

### பல சவால்களைச் சந்தித்தவர்



யாழ்ப்பாணக் கல்விப் புலத்தில் வரதனுக்கு தனித்துவமான வரலாறு இருக்கின்றமையை யாரும் மறுத்திட முடியாது. மாணவரது இலக்கு அறிந்து அந்த இலக்கைப் பூர்த்தி செய்வதற்கு வரதனது தனித்துவ ஆசிரிய வகி பங்கு கல்லும் முள்ளும் செறிந்த கடின பாதையாகக் காணப்பட்டாலும் அவரது ஆளுமையின் பால் கவரப்பட்ட பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இவரைத் தம் மனங்களில் நிதமும் பூசித்து வணங்குகின்ற குருவாக இருப்ப துடன் அந்த மாணவர்கள் இன்று பல அரச உயர் பதவிகளை அலங்கரிப்பதும் குறிப்பிட வேண்டியதாகும். தனது நேரிய வழியில் கடின முயற்சியால் பலரது உள்ளங் களைக் கவர்ந்து இன்று 33 வருட ஆசிரிய சேவையை நிறைவு செய்து நிமிர்ந்து நிற்கின்ற வரதன் ஓர் கல்வி வரலாற்றுப் புருஷன் என்பதை மகிழ்வோடு தெரிவிக்கின்றேன். எனது உள்ளங்கவர்ந்த நண்பன். நான் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அதிபராகக் கடமையாற்று வதில் இவரது வழிகாட்டல்களும் கூட்டான ஒத்துழைப்புக்களும் தினமும் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. எமது கலாசாலை ஆசிரிய மாணவர்களில் பலர் காலத்துக்குக் காலம் வரதனை அணுகி கணிதம் சார்ந்த பட்டறிவுகளைத் துல்லியமாகப் பகிர்ந்து கொள்வதையும் நான் நன்கறிவேன். எவ்வித பலனுங் கருதாது எமது ஆசிரிய மாண வர்களுக்கு திரைமறைவாகக் கற்பித்தல் நுட்பங்களைப் பகிர்ந்து கொள்வது அவரது பெருந்தன்மையைக் கொடிகாட்டி நிற்கின்றது. காலமெல்லாம் நல் ஆரோக்கியத்துடன் இவரது பணி தொடரவும் இவர் குடும்பம் சீருஞ் சிறப்பும் பெறவும் எல்லாம் வல்ல இருபாலை கற்பக விநாயகனை வேண்டிக் கொள்கின்றேன்.

வே.கா.கணபதிப்பிள்ளை இலங்கை கல்வி நிர்வாகசேவை
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

### தனியார் கல்வி நிறுவனத்தில் தனக்கென ஒரு முத்திரை பதித்தவர்



த.வரதராஜா அவர்கள் எனது கல்லூரி ஆசிரியர் என்பதிலும் பார்க்க தனியார் கல்வி நிறுவன அதிபர் என்பதினூடாக அவர் சமூகத்தில் தனக்கென்றோர் இடத்தைப் பிடித்தவர். அவரது கல்வி நிறுவனத்தின் அனைத்து [illegible] வந்து பார்த்த போது [illegible] என வாழ்த்தி நின்றேன். ஆளுமைத் திறன் மிக்கவரான அவரது கல்விப்பணி மேன்மேலும் சிறக்க வாழ்த்துகிறேன். சி. க.எழில்வேந்தன் அதிபர், யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கல்வி வரலாற்றில் தடம் பதித்தவர்



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தலை சிறந்த கணித ஆசான் த.வரதராஜா அவர்கள் அரச ஆசிரிய சேவையிலிருந்து பணி ஓய்வு பெறுவதை யிட்டு வெளியிடப்படுகின்ற சிறப்பு மலருக்கு வாழ்த்துரையும் ஆசியுரையும் வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின் றேன். அனைவரையும் கட்டுப்படுத்தி கல்வி வழி கொண்டு செல்லும் சுபாவம் கொண்டவர். நெருக்கமான காலத்தில் மத்திய கல்லூரியின் கல்வி உயர்வுக்கான பெருமைக் குரியவர். இவருடைய பணி அனைவரையும் சிந்திக்கத் தூண்டியது. இவரது கல்வி நிறுவனத்தின் ஊடாக இன்னும் பல சேவை களை சமூகத்துக்கு ஆற்ற வேண்டும் என விழைகின்றேன். த.வரதராஜா இன்று போல் என்றும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும். ஆசிரி யரின் பணியை பாராட்டி விழா எடுக்கும் அனைத்து மக்களையும் வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு
இரண்டாவது சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

### கணிதத்தில் முடி சூடா மா மன்னர்



வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் என்பதற்கு சிறந்த உதாரணமாகத் திகழ்ந்து இலங்கை ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெறும் எங்கள் அதிபர் கல்விப் பயணத்தின் கலங்கரை விளக்ககா பட்டொளி வீசுபவர். அமுதான கல்வி நெறிகாட்டி ஏணியென மாணவரை சமூகத்தில் ஏற்றி விட்டுக் கொண்டிப்பவர். வெற்றியே இலக்கு என்ற நிமிர்வு கொண்ட பெருந்தையாளர். கணித பாடத்தை கரும்பாக ஊட்டி கணித அறிவினை எமக்கு பூரணமாக வழங்குகின்ற எங்கள் ஆசான் இன்னும் பல தலைமுறைகளுக்கும் குருவாய் விளங்க வேண்டும். ஓய்வு பெறும் வேளையிலும் ஓயாத அதிபரின் பணி காலமும் கல்வியும் உள்ளவரை நிலைபெற வேண்டுமென எல்லாம் வல்ல கற்பகப் பிள்ளையாரை வேண்டி நிற்கின்றோம்.

மாணவர்கள் சார்பில்
கௌசல்யா பாலசுப்பிரமணியம், தரம் 11 A

### மாணவருக்கு கிடைத்த வரப்பிரசாதம்



கல்வித்துறையில் 40 வருட காலமாக சேவையாற்றிவரும் எக்ஸ்பிறஸ் கல்வி நிறுனத்தின் இயக்குநராகிய த.வரதராஜா அவர்கள் எமது பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டில் பெரும் பங்காற்றிய வண்ணமுள்ளார் தமிழ் மொழிமூலம் மட்டுமன்றி அரிதான ஆங்கில மொழி மூல கற்பித்தலையும் வழங்கி அனைத்து மாணவர்களுக்கும் வரப்பிசாதம் அளிக்கின்றார். மாணவர்களின் நலன் கருதி கற்றல் சார்ந்த வசதிகள் மட்டுமன்றி போக்குவரத்து வசதிபோன்ற இன்பிற வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார். இவர் தனது சேவையை பாடசாலையில் நிறைவு செய் தாலும் கல்விச் சமூகத்துடன் நீண்டகாலம் இணைந்திருக்க பெற்றோர்கள் சார்பில் வாழ்த்துகின்றோன்.

பெற்றோர் சார்பில்
திருமதி. குமரேஸ்வரன் கருணாதேவி சிறுப்பிட்டி வடக்கு.

### கல்வியில் கலங்கரை விளக்கு



த.வரதராஜா அவர்களது சேவை நயப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். யா / உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் சிறு விதை ஒன்று யாழ். மத்திய கல்லூரியில் பெரு விருட்சமாக பரிமாணித்து இன்று தனது 33 ஆண்டு கால நல்லாசிரியர் சேவையைப் பூர்த்தி செய்து அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

வறுமைக் கோட்டுக்கு கீழேயுள்ள மாணவர்களுக்கு கல்வியில் சம வாய்ப்பைத் தனது கல்வி நிறுவனத்தினூடாக செயற்படுத்தி வருகின்ற சிறந்த சேவையாளர் இவர். தொடர்ந்தும் கல்வி உலகுடன் இணைந்திருக்கவும் நல்லாரோகியத்துடன் வாழவும் சந்நிதியான் அருள் பாலிப்பானாக.

யோ. ரவீந்திரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

### தோன்றில் புகழொடு தோன்றுக



தனக்கென வாழா பிறர்க்குரியாளன் ஆசிரியர் த.வரதராஜா அவர்கள் பணியை பாடசாலைச் சமூகம் என்றுமே மறக்க முடியாது. கணித மேதையாக விளங்கும் இவர் கணிதத்துறையில் மாணவர்களுக்கு விவேகத்தையும், நுட்பங்களையும் ஏற்படுத்தித் தந்தவர். கணித பாடத்தை சுவையான கல்வியாக எமக்கு அளித்த ஆசானுக்கு எமது நன்றிகள் என்றென்றும் உரித்தாகும். இவர் தனது சேவையை நிறைவு செய் தாலும் கணித உலகம் என்றென்றும் இவரைக் கண் விழித்துப் பார்க்கும் என்பது திண்ணம். " மத்தியின் மணிக் கொடி நித்தியம் நிலைக்கும் "

என்றும் தலைவணங்கும் மாணவன்
செல்வன் ச.சாமுவேல் (தரம் 11 C),
யாழ் மத்திய கல்லூரி.

# லிபியாவின் புதிய ஆட்சியாளர்களைப் பாராட்ட திரிபோலிக்கு பிரான்ஸ், பிரிட்டிஷ் தலைவர்கள்

**கடாபியின் படைகள் சரணடைய தொடர்ந்து மறுப்பு**

திரிபோலி, செப்.16

பிரான்ஸ் மற்றும் பிரிட்டிஷ் தலைவர்கள் லிபியாவுக்குப் பயணம் மேற்கொண்டு தங்கள் ஆதரவில் பதவிக்கு வந்துள்ள புதிய ஆட்சியாளர்களுக்குப் பாராட்டுத் தெரிவிக்க இருக்கிறார்கள்.

இந்தப் பயணமானது பிரான்ஸ் அதிபர் நிக்கோலஸ் சார்க்கோஸிக்கும் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூனுக்கும் ஒரு வெற்றிப் பயணமாகவே இருக்கப் போகிறது. லிபியாவில் புரட்சிப் படைகளுக்கு ஆதரவாக 'நேட்டோ' குண்டு வீச்சை முன்னின்று ஆதரித்தவர்கள் இந்த இருவருமாவர். உள்நாட்டில் சந்தேகம் கிளப்பியவர்களைப் புறக்கணித்து விட்டு நேட்டோப் படைகள் குண்டு வீசுவதை இவர்கள் ஆதரித்தவர்கள். இதன் மூலம் கடாபியின் 42 வருட கால ஆட்சிக்குப் புரட்சிப் படைகளால் முடிவு கட்ட முடிந்துள்ளது.

இரு தலைவர்களும் லிபியாவில் பெரும் புகழ் பெற்றவர்களாய் உள்ளனர். லிபிய வீதிகளின் மக்கள் மத்தியில் ''மேர்ஸி சர்கோசி'' மற்றும் நன்றி பிரிட்டன்'' என்ற சுலோகங்கள் பரவலாக உச்சரிக்கப்படுவதைக் காணக் கூடியதாகவுள்ளது. லிபிய வெற்றி இரு தலைவர்களுக்கும் உள்நாட்டில் அரசியல் லாபங்களைப் பெற்றுத் தரும் என்று நம்பப்படுகின்றது.



ஆனால் இவ்விரு தலைவர்களும் பயணம் மேற்கொள்ளவிருந்த வேளையில் லிபிய இடைக்கால சபையின் தலைவர் வெளியிட்டுள்ள செய்தியில் கடாபி ஆதரவுப் படைகளுடனான போராட்டம் மிக மோசமாக இருக்கப் போகிறது; அவர்கள் சரணடைய மறுத்து வருகிறார்கள் என்று கூறியுள்ளார்.

மேற்கத்திய நாடுகள் சர்வதேச சமூகத்துக்குள்ள லிபியாவை இணைத்துக் கொள்ள மிக ஆவர்மாகக் காணப்படுகின்றன. அதே போல் ஆறுமாத காலப் போரின் காரணமாக முடங்கிப் போயுள்ள எண்ணெய் உற்பத்தியையும் அது மீண்டும் ஆரம்பிக்க வாய்ப்பு ஏற்படலாம். இதேவேளை துருக்கிப் பிரதமரும் இன்று லிபியாவில் இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ப)

## பதுங்கு குழிகளை சேதப்படுத்தியதாக சீனா மீது இந்தியா புகார்

இந்திய எல்லைக்குள் சீன ராணுவத்தினர் அத்துமீறி நுழைந்து சீன எல்லைப்பகுதியில் உள்ள இந்திய ராணுவ பதுங்குகுழிகளைச் சேதப்படுத்தியதாகப் புகார் எழுந்துள்ளது.

இந்திய-திபெத் எல்லைக் கட்டுப்பாட்டுப்பகுதியில் உள்ளலே பகுதியிலிருந்து 300 கி.மீ தொலைவில் உள்ள நையோபா செக்டரர் எல்லைப்பகுதியில் அத்துமீறி நுழைந்த சீன ராணுவத்தினர் அங்குள்ள மிகவும் பழைமையான இந்திய எல்லையைக் கண்காணிக்கும் முகாம்கள் மற்றும் பதுங்கு குழிகளைச் சேதப்படுத்தியுள்ளனர் என வடக்குப் பகுதியின் உதாம்பூரைச் சேர்ந்த ராணுவ செய்தித் தொடர்பாளர் கேணல் ராஜேஷ் தெரிவித்தார்.



சூடான், கார்டோம் நகரில் நடந்த பதவியேற்பு விழாவில் அதிபர் அல்-பஷீர் முன்னிலையில் துணை அதிபர் அலி ஒஸ்மான் தாஹா(வலது) பதவியேற்றுக்கொண்டார்.

# ஈராக்கில் தற்கொலை தாக்கு; 17 படையினர் சாவு ; 50 பேர் காயம்

பக்தாத், செப்.16

ஈராக்கில் பல்வேறு இடங்களில் பாதுகாப்புப் படையினர் மீது தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் 17 பேர் உயிரிழந்தனர். 50-இக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஈராக்கின் பாபில் மாகாணத்தில் உள்ள மெதாதியா நகரத்தில் பாதுகாப்புப் படையினர் அடிக்கடி வந்து செல்லும் உணவகம் ஒன்றில் கார் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 3 பொலிஸார் உட்பட 13 பேர் கொல்லப்பட்டனர். 42 பேர் காயமடைந்தனர்.

இதற்கிடையில் அன்பர் மாகாணம், ஹபானியா நகரத்தில் உள்ள விமானப்படைத் தளத்துக்குள் வீரர்களை ஏற்றிச் சென்ற வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் 2 வீரர்கள் உயிரிழந்தனர். 10க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

தலைநகர் பாக்தாத்தின் வடக்குப் பகுதியில் குவாஹிரா என்ற இடத்தில் உள்ள சோதனைச் சாவடியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த வீரர்கள் மீது தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டதில் 2 வீரர்கள் கொல்லப்பட்டதாக அரசுத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

இன்னும் சில மாதங்களில் அமெரிக்கப் படைகள் ஈராக்கை விட்டு வெளியேறவுள்ள நிலையில் உள்நாட்டுப் பாதுகாப்புப் படையினர் மீதே தாக்குதல் நடத்தப்படுவது அவர்களின் செயல்திறனைக் கேள்விக் குறியாக்கியுள்ளது.

# லிபியாவில் இருந்து கொண்டே ஆதரவுப் படை திரட்டுகிறார் கடாபி

திரிபோலி, செப்.16

லிபிய அதிபர் கடாபி நாட்டை விட்டு ஓடவில்லை. அவர் லிபியாவில் இருந்து கொண்டே சண்டைக்குப் படைதிரட்டி வருகிறார் என்று அவரது செய்தித் தொடர்பாளர் மூசா இப்ராகிம் தெரிவித்துள்ளார்.

லிபியா கடாபியின் கையை விட்டுப் போனவுடன் அவரது குடும்பத்தினர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். கடாபியும் நாட்டை விட்டே ஓடிவிட்டார் என்று கூறப்பட்டது. ஆனால் அவர் லிபியாவில்தான் இருப்பதாகவும், சண்டைக்குப் படைத் திரட்டி வருவதாகவும் அவரது செய்தித் தொடர்பாளர் மூசா இபுராகிம் தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்:

''எங்கள் தலைவர் நலமாக உள்ளார். அவர் லிபியாவில் தான் இருக்கிறார். உலகம் எதிர்பார்க்காத அளவுக்கு இந்தச் சண்டை இருக்கும். நாங்கள் இன்னும் சக்திவாய்ந்தவர்களாகத்தான் இருக்கிறோம். லிபியாவில் பெரும் பகுதி இன்னும் எங்கள் ஆதிக்கத்தில் தான் உள்ளது. நாங்கள் படைத் திரட்டிக் கொண்டிருக்கிறோம்'' என்றார். ஆனால் அவர் எங்கிருந்து பேசுகிறார் என்பதைத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

# காபூலில் தலிபான்களின் தாக்குதல் 20 மணி நேரத்தின் பின் முறியடிப்பு

காபூல், செப்.16

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இரு நாள்களாக நடந்து வந்த தலிபான்களின் தாக்குதல் 20 மணித்தியாலப் போராட்டத்துக்குப் பின்னர் முறியடிக்கப்பட்டது. இதில் 14 பேர் கொல்லப்பட்டனர். 6 அமெரிக்கப் படை வீரர்கள் காயமுற்றனர்.

செவ்வாய்க்கிழமை காபூலில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தையும் நேட்டோப் படைகளின் தலைமையிடத்தையும் குறிவைத்துத் தலிபான்கள் தாக்குதல் நடத்தினர். இதன்போது அமெரிக்கத் தூதரகத்தின் அருகே கட்டப்பட்டு வந்த பல மாடிக் கட்டடம் ஒன்றில் மறைந்திருந்தே தலிபான்கள் தூதரகத்தையும் நேட்டோ தலைமையிடத்தையும் தாக்கினர்.

ரொக்கெட்டுகள், கைக்குண்டுகள், தற்கொலைத் தாக்குதல் எனப் பல வகையிலும் தொடர் தாக்குதலைத் தலிபான்கள் நடத்தினர். இதில் அமெரிக்கத் தூதரக முற்றுகையை முறியடிக்கப் பல மணி நேரமானது. இரண்டு தலிபான் தீவிரவாதிகள் உயரமான கட்டடத்திலிருந்து தொடர்ந்து துப்பாக்கிச் சூடு நடத்திக் கொண்டிருந்தனர்.



இறுதியில் நேட்டோ படையின் தலைமையில் சர்வதேச பாதுகாப்பு உதவிப் படையைச் சேர்ந்த ஹெலிகொப்டர்களின் துணையுடன் ஆகாயவழியாக நடத்தப்பட்ட பதில் தாக்குதலுக்குப் பின்னர்தான் அந்தத் தலிபான்கள் கொல்லப்பட்டனர்.

தலிபான்களின் ஆட்சி 2001 இல் வீழ்த்தப்பட்டதற்குப் பின், இவ்வளவு நீண்ட நேரம் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியது இப்போதுதான். ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க, நேட்டோ படைகள் வெளியேறிக் கொண்டிருக்கும் தருணத்தில் நிகழ்ந்த இந்தத் தாக்குதல், ஆப்கன் பாதுகாப்புப் படையின் திறமையைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

# எம்.ஜி.ஆருக்கு பிரான்ஸில் விழா

பரிஸ், செப்.16

பிரான்ஸில் உள்ள, எம்.ஜி.ஆர்., பேரவை என்ற அமைப்பு ஆண்டுதோறும் செப்ரெம்பர் மாதம், மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி.ஆருக்காக விழா எடுப்பதுடன் எம்.ஜி.ஆர்., சிறப்பு தபால் தலையும் வெளியிட்டு வருகின்றன. இதன் போது தமிழ் நாட்டிலிருந்து, முக்கிய பிரமுகர்களை சிறப்பு விருந்தினர்களாக வரவழைக்கப்பட்டு பல்வேறு அம்சங்களுடன் இலக்கியச் சொற்பொழிவு, இசை, நாட்டியம் மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுவது உண்டு.

அந்தவகையில் எதிர்வரும் செப்ரெம்பர் 17 ஆம் திகதி பரிஸ் நகரில் நடைபெறும் எம்.ஜி.ஆர்., விழாவில், நடிகர் மயில்சாமி, இதயக்கனி ஆசிரியர் எஸ்.விஜயன் ஆகியோர் பங்கேற்கின்றனர். விஜயனின், எம்.ஜி.ஆர்., புகைப்படக் கண்காட்சியும் இடம்பெற இருக்கிறது.

விழாவுக்கான ஏற்பாடுகளை பிரான்ஸ் எம்.ஜி.ஆர்., பேரவையின் நிறுவுநரும், தலைவருமான முருகு பத்மநாபன் கவனிக்கிறார்.

# நோயாளிகளுக்கு மருந்து வழங்கும் ரோபோக்கள்

ஆஸ்திரேலிய மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு ரோபோக்கள் உணவு பரிமாற உள்ளன.

ஆஸ்திரேலியாவில் சிட்னியில் உள்ள ரோயல் நோர்த் ஷோர் என்ற ஒரு தனியார் மருத்துவமனை, சத்தான உணவுகளை இயந்திர மனிதன் என்றழைக்கப்படும் ரோபோக்கள் மூலம் வழங்க முடிவு செய்துள்ளது. அதற்கான ரோபோக்கள் வடிவமைக்கப்பட்டு வருகின்றன. இவை முற்றிலும் கணினி மயமாக்கப்பட்டு அதில் அவற்றின் செயற்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருக்கும். இந்த ரோபோக்கள் மருத்துவமனை முழுவதும் வலம் வந்து நோயாளிகளுக்குத் தேவையான உணவு வகைகள், ஆடைகள் மற்றும் ஏனைய பொருள்களை வழங்கும்.

நோயாளிகளுக்கு ரோபோக்கள் உணவு வழங்கும் செயற்பாடு அடுத்த ஆண்டு இறுதியில் நடைமுறைக்கு வரும் என ரோயல் நோர்த் ஷோர் மருத்துவமனை அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி போகம்பரையில் தேசிய தடகளப் போட்டி

யாழ்ப்பாணம், செப்.16

இலங்கைச் செஞ்சிலுவை சங்கத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கண்டி செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை கண்டி போகம்பரை மைதானத்தில் நண்பகல் 2 மணியளவில் தேசிய தடகளப் போட்டி ஆரம்பமாகின்றது.

மேற்படி போட்டியில் வட மாகாணத்திலிருந்து மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் வீர, வீரங்கனைகள் பங்குகொள்கின்றனர். ஆரம்பநாள் நிகழ்வில் பிரதம விருத்தினராக மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க கலந்து கொள்ளவுள்ளார்.

போட்டியின் இறுதிநாள் நிகழ்வும், பரிசளிப்பு வைபவமும் ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது. (23)

# உதைபந்தாட்டப் பயிற்றுநருக்கு முல்லைத்தீவில் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், செப்.16

முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சங்கமும் முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்டச் சங்கமும் இணைந்து யு.என்.டி.பி. நிறுவனத்தின் ஆதரவுடன் உதைபந்தாட்ட பயிற்றுநர்களுக்கான மூன்று நாள் பயிற்சி முகாமை நடத்தவுள்ளது.

பயிற்சி முகாம் எதிர்வரும் 26 ஆம், 27 ஆம், 28 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி பயிற்சியை இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளன தொழில்நுட்ப முகாமையாளர் சிறிசேன நெறிப்படுத்தவுள்ளார். (23)



இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டுத் திருகோணமலை செஞ்சிலுவைச் சங்கக் கிளையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தேசிய மட்டத்திலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் வெற்றி பெற்ற மாத்தறை செஞ்சிலுவைச் சங்க அணித் தலைவரிடம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திருகோணமலை நகரசபைத் தலைவர் கே. செல்வராசா வெற்றிக் கிண்ணத்தைக் கையளிக்கின்றார். அருகில் சிறப்பு விருந்தினர்கள் மற்றும் உயர் அதிகாரிகள். (23)

# கராத்தே போட்டி நாளை ஆரம்பம்

வலி- வடக்கு, செப்.16

அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே தேசிய மட்டத்தில் இலங்கை கல்வி அமைச்சினால் நடத்தப்படும் கராத்தே போட்டி நாளை முதல் மூன்று தினங்கள் கொழும்பு கிரிபத்கொட விகாரமாதேவி பாலிக வித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

கராத்தே விளையாட்டு வட மாகாணப் பாடசாலைகளிடையே அறிமுகம் செய்யப்படாமையால் வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாகாண மட்டத்தில் போட்டிகள் நடத்தப்படவில்லை. சில பாடசாலைகளில் கராத்தே குமித்தே போன்ற பயிற்சி களைப் பெற்ற மாணவர்கள் போட்டிக்கு அனுப்பப்படுகின்றனர்.

19 வயதுப்பிரிவு கராத்தே போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியும் அணிகளை அனுப்புகின்றன.

17 வயதுப்பிரிவுப் குப்தா போட்டியில் அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக் தமிழ் கலவன் பாடசாலை அணி கலந்து கொள்கிறது. (உ-86)

# பாடசாலை மட்ட மென்பந்து கிரிக்கெட்

## வடக்கிலிருந்து 6 அணிகள் பங்கேற்பு

வலி- வடக்கு, செப்.16

இலங்கை கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் ஆண், பெண் இருபாலாருக்குமான மென்பந்துக் கிரிக்கெட் போட்டி நாளை முதல் நான்கு நாள்களுக்கு நடைபெறவுள்ளது.

பாணந்துறை மக்கள் விளையாட்டரங்கு, பாதுவ மத்திய மகா வித்தியாலய விளையாட்டரங்கு, பாணந்துறை சாந்த கோன் விளையாட்டரங்கு ஆகியவற்றில் ஆட்டங்கள் நடைபெறும்.

இந்த போட்டியில் வட மாகாணத்திலிருந்து 6 அணி சார்பில் கலந்து கொள்ளவுள்ள பாடசாலைகள்:

**ஆண்கள்:** வவுனியா தெற்கு தமிழ் மத்திய மகா வித்தியாலயம், கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, வவுனியா தெற்கு பெரிய கோமரசன் குளம் மகா வித்தியாலயம்.

**பெண்கள்:** சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி, வடமராட்சி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, முல்லைத்தீவு குமிழமுனை மகா வித்தியாலயம்

ஆகிய பாடசாலைகளின் அணிகள் போட்டிக்குச் செல்கின்றன. (உ-86)

# வல்வை, நெடியகாடு அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம், செப்.16

பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழகம், வல்வெட்டித்துறை நெடியகாடு விளையாட்டுக்கழகம் ஆகியன வெற்றிபெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரவெட்டி இமையாணன் விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் வல்வை விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் வல்வெட்டித்துறை நெடியகாடு விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் வல்வெட்டித்துறை நெடியகாடு விளையாட்டுக்கழகம் 1:0 கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# இன்றைய தாச்சிப் போட்டி

கைதடி, செப்.16

கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழகம் தென்மராட்சி ரீதியாக நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று இடம் பெறும் ஆட்டத்தில் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கைதடி விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-228)

# மன்னார் உதைப்பந்தாட்ட அணி இன்ரலீக் ஆட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம், செப்.16

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் இன்ரலீக் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட லீக் அணி வெற்றி பெற்றுள்ளது. நேற்று முன்தினம் புதன்கிழமை திருகோணமலை நகர சபை விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து திருகோணமலை உதைபந்தாட்ட லீக் அணி மோதியது.

இதில் மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட லீக் அணி 2:1 என்ற கோல் கணக்கில் திருகோணமலை உதைபந்தாட்ட லீக் அணியை வெற்றி கொண்டது. (ம-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப்.16

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் பங்கு கொள்ளும் அணிகள் விவரம் வருமாறு:

* பி.ப 3 மணிக்கு - அண்ணாசிலையடி இமையாணன் விளையாட்டுக் கழகம் எதிர் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம்.
* மாலை 4 மணிக்கு - கரவெட்டி கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் கரவெட்டி கலட்டி விள்ளையாட்டுக் கழகம். (ம-23)

# சினேகபூர்வ துடுப்பாட்டம்

வண்ணை, செப்.16

சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு யாழ்.சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகம் மாணவர் சமுகம் வெற்றி, தோல்விகளை சமனாக மதித்து வளர்த்துக் கொள்கின்ற நோக்குடன் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய மைதானத்தில் சிநேகபூர்வத் துடுப்பாட்டப் போட்டியை நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளது.

போட்டியில் கச்சாய், அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், உசன் இராமநாதபுரம் மகாவித்தியாலயம் மற்றும் கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியன பங்கேற்கவுள்ளன. (ம-160)

# வவுனியா பாடசாலைக்கு ஹொக்கி உபகரணங்கள்

வலி.வடக்கு, செப்.16

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் வவுனியா வடக்கு சுந்தரபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்குக் ஹொக்கி விளையாட்டுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளின் மாணவர்களிடையே விளையாட்டை அபிவிருத்தியை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் இந்த உபகரணங்கள் வடமாகாணக் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன. மாகாணக் கல்வி அமைச்சின் செயலரும் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளரும் உபகரணங்களைக் கையளித்தனர்.

வடமாகாணத்தில் நடைபெற்ற ஹொக்கிப் போட்டியில் இந்தப் பாடசாலையின் பெண்கள் அணி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளதுடன் தேசிய மட்டப் போட்டியிலும் இந்த வார இறுதியில் கலந்து கொள்ளவுள்ளன.

ஹொக்கித் துடுப்புகள் 14 உட்பட வீரர்களுக்கான பாதுகாப்பு அங்கிகள் கோல்காப்பாளருக்கான பாதுகாப்பு அங்கிகள் மற்றும் உபகரணங்கள் அடங்கிய பொதி பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

மாகாணப் போட்டிகளுக்கான பயிற்சிகளைக் கூட இரவல் பெற்றே இந்தப் பாடசாலை மாணவிகள் மேற்கொண்டனர். போட்டிகளின் போதும் இரவல் உபகரணங்களுடனேயே களமிறங்கி மூன்றாம் இடத்தை மாகாண மட்டத்தில் வென்று சாதனை படைத்தனர். எனவே தற்போதைய ஊக்குவிப்பு மூலம் எதிர்காலத்தில் தரமாக ஓர் இடத்தை ஹொக்கி இந்தப் பாட சாலை பிடிக்கும் என எதிர்பார்க்கலாம் என்று அதிகாரிகள்கூறினர். (உ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று சங்காவின் நூறாவது ஆட்டம்

இலங்கை , ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ள 3 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டம் குமார் சங்ககாரவின் 100 ஆவது டெஸ்ட் போட்டியாகும். இந்த ஆட்டத்தை இலங்கை அணி வெற்றியுடன் கொண்டாடும் என்று தான் எதிர் பார்ப்பதாக சங்ககார தெரிவித்துள்ளார்.

எனது நாட்டை இத்தகைய காலம் பிரதிநிதித்துவப்படுத்துவது பெரும் கௌரவமாகும். 100 ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடுவதும் பெரும் கௌரவமாகும். வீரர்களுக்கு அடிக்கடி இந்த வாய்ப்பு கிடைப்பதில்லை. இவ்வளவு காலம் எனது நாட்டை பிரதிநிதித்துவப்படுத்த வாய்ப்பு கிடைத்தமை குறித்து பெருமையடைகிறேன் - இவ்வாறு செய்தியாளர்களிடம் சங்ககார தெரிவித்துள்ளார்.

'எனினும் மிக முக்கிய விடயம் என்னவென்றால் முடிந்தளவு எமது அணி வெற்றி பெறுவதற்கு பங்களிப்புச் செய்வதாகும். பங்குபற்றுவது சிறந்தது. ஆனால் எங்கள் அணி சகாக்களிடமும் ஏனையோரிடமும் நாம் வெற்றியாளர்கள் எனக் கூற விரும்புகின்றேன்' என்று அவர் கூறினார்.

100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய பெருமையை அடையவுள்ள 5 ஆவது இலங்கை வீரர் குமார் சங்ககார ஆவார். முத்தையா முரளிதரன் (132), மஹேல ஜெயவர்தன (121), சமிந்த வாஸ் (111), சனத் ஜெயசூரிய, (110) ஆகியோர் நூற்றுக்கும் அதிகமான போட்டிகளில் விளையாடியுள்ளனர்.

அடுத்தமாதம் தனது 34 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடவுள்ள குமார் சங்ககார 2000 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிராக காலியில் நடந்த டெஸ்ட் ஆட்டத்தில் அறிமுகமானார். இதுவரை 99 டெஸ்ட் ஆட்டங்களில் 8572 ஓட்டங்களை (சராசரி 55.66) பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றில் 25 சதங்களும் அடங்கும்.

அதிக டெஸ்ட் ஓட்டங்களைக் குவித்த இலங்கை வீரர்கள் பட்டியலில் சங்கக்கார 2 ஆம் இடத்தில் உள்ளார். மஹேல ஜெயவர்தன 121 டெஸ்ட் ஆட்டங்களில் 9801 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இந்த நிலையில் 10,000 டெஸ்ட் ஓட்டங்களையும் 30 சதங்களையும் பெறுவதே தனது இலக்கு என்று குமார் சங்ககார கூறியுள்ளார். (15)

# பிளட்சர்தான் சிறந்தவர்

இந்திய அணிக்கு பிளட்சர் மிகச்சிறந்த பயிற்சியாளர் தான் என்று இங்கிலாந்து அணியின் முன்னாள் அணித்தலைவர் அலெக்ஸ் கூறியுள்ளார்.

இவர் அளித்துள்ள பேட்டியில் கூறியதாவது:

இந்திய அணிக்கு பிளட்சர் சரியான பயிற்சியாளர் தான். ஒரு தொடரின் தோல்வியை வைத்து கொண்டு அவரது திறமையை மதிப்பிடக்கூடாது. திட்டங்களை வகுப்பதிலும், போட்டியின் முடிவுகளை அலசி ஆராய்வதிலும் பிளட்சர் சிறப்பானவர். அவர் வகுத்த திட்டங்களின்படி தான் தற்போது இங்கிலாந்து அணி அசத்தி வருகிறது.

வோகன், டிரஸ் கோதிக் உள்ளிட்டவர்களை ஒரு நாள் போட்டிக்கும் அவர் தான் கொண்டு வந்தார். இந்திய அணியில் முன்னணி வீரர்கள் பலர் காயமடைந்ததன் காரணமாகவே தோல்வியை சந்திக்க நேரிட்டது.

தொடர்ச்சியாக போட்டிகளில் விளையாடியதால் இந்திய வீரர்கள் சோர்வடைந்து விட்டனர். இந்த சோர்வுடன் விளையாடியதால் காயமடைய நேரிட்டது. இளம் வீரர்களின் திறமையை வெளிகொண்டு வருவதில் பிளட்சர் சிறப்பாக செயல்படக்கூடியவர்.

உள்ளூர் போட்டிகளை நேரில் சென்று பார்க்க அவருக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். அது நிகழும் பட்சத்தில் இந்திய அணியில் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்ப பிளட்சர் சரியான வீரர்களை கொண்டு வந்து விடுவார் - என்றார். (15)




# டிராவிட்டின் பிரியாவிடை இன்று

இந்திய அணி முன்னாள் அணித்தலைவர் ராகுல் டிராவிட்டுக்கு இன்றைய ஆட்டம் கடைசி ஒரு நாள் ஆட்டமாகும்.

இங்கிலாந்து எதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பாக விளையாடியதால் நீண்ட இடைவெளிக்கு பிறகு ஒரு நாள் ஆட்டத்துக்கான அணியில் சேர்க்கப்பட்டார். அப்போது இங்கிலாந்து தொடரோடு தான் ஒருநாள் ஆட்டங்களிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

இன்றுடன் இங்கிலாந்து ஒரு நாள் தொடர் முடிகிறது. இன்றைய ஆட்டம் முடிந்த பிறகு இந்திய வீரர்கள் சார்பில் டிராவிட்டுக்கு பிரிவு உபசாரம் நடைபெறும். இந்தத் தொடரில் 4 ஆட்டத்தில் அவர் 55 ஓட்டங்களே எடுத்தார். 343 ஒரு நாள் ஆட்டத்தில் விளையாடிய டிராவிட் 10,820 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

12 சதமும், 82 அரைச் சதமும் அடித்துள்ளார். அதிகபட்சமாக 153 ஓட்டங்கள் எடுத்துள்ளார். அவரது சராசரி 39.06 ஆகும். ஒரு நாள் ஆட்டத்திலிருந்து ஓய்வு பெறும் அவர் டெஸ்ட் ஆட்டங்களில் தொடர்ந்து விளையாடுவார். (15)

# இறுதியாட்டத்திலும் விட்டு வைக்கவில்லை

சிம்பாப்வேக்கு எதிரான கடைசி ஒரு நாள் ஆட்டத்திலும் பாகிஸ்தான் அணி 28 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

மிஸ்பா உல் ஹக் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் அணி சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்கு இடையிலான 3 ஆவது மற்றும் கடைசி ஒரு நாள் ஆட்டம் ஹராரே நகரில் நேற்று முன்தினம் நடந்தது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 270 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக யுனிஸ்கான் 81 ஓட்டங்களும், ஆசாத் ஷபிக் 51 ஓட்டங்களும் விளாசினர்.

பின்னர் ஆடிய சிம்பாப்வே அணிக்கு தொடக்க ஆட்டக்காரர்கள் சிபான்டா (59), சிபாபா (62) முதல் விக்கெட்டுக்கு 110 ஓட்டங்கள் சேர்த்து நல்ல தொடக்கம் கொடுத்தாலும், ஓட்ட வேகம் மந்தமாக இருந்ததால் சிம்பாப்வேக்கு நெருக்கடி ஏற்பட்டது. நடுவரிசை வீரர்களும் கை கொடுக்கவில்லை.

50 ஓவர்களில் சிம்பாப்வே அணியால் 9 விக்கெட்டுக்களுக்கு 242 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. இதன் மூலம் 28 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்று, தொடரையும் 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. (15)

# எப்படியெல்லாம் உழைக்கிறாங்க!

உலகின் முதல் தர ரெனிஸ் வீரர் ஜோகோவிச். இவர் செர்பியா நாட்டைச் சேர்ந்தவர். இவர் இந்த ஆண்டில் நடந்த 4 கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஆஸ்திரேலிய ஓபன், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் ஆகிய 3 கிராண்ட் சிலாம் பட்டங்களையும் பெற்று சாதனை புரிந்தார்.

இந்த ஆண்டில் அவர் 66 ஆட்டத்தில் விளையாடி 64 ஆட்டத்தில் வெற்றி பெற்றார். 2 ஆட்டத்தில் மட்டுமே தோற்றார். இந்த ஆண்டில் பரிசு தொகையின் மூலம் அவர் ரூ.47.25 கோடி சம்பாதித்து புதிய சாதனை புரிந்தார். கடந்த ஆண்டில் ரபேல் நடாலும்(ஸ்பெயின்), 2007 ஆம் ஆண்டில் ரோஜர் பெடரரும் (சுவிட்சர்லாந்து) தலா ரூ.45.9 கோடி பரிசு தொகையை பெற்றதே சாதனையாக இருந்தது. (15)

# சுவான் அணித்தலைவர்

இந்த மாத இறுதியில் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக நடைபெறும் இரண்டு 'ரி-20' கிரிக்கெட் ஆட்டங்களுக்கு இங்கிலாந்து அணியின் தலைவராக ஓப் ஸ்பின்னர் சுவான் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்டூவர்ட் புரோட் வலது தோள்பட்டை தசை நார் கிழிந்ததான் காரணமாக மேற்கிந்திய அணிக்கு எதிரான தொடரில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதேபோல் அதிரடி வீரர் இயன் மோர்கன் தோள்பட்டை காயமும் அவரை ஜனவரி வரை கிரிக்கெட் ஆட்டத்திலிருந்து விலகச்செய்திருப்பதால் சுவானை அணித்தலைவர் ஆக்கியுள்ளது இங்கிலாந்து.

இங்கிலாந்து அணி: சுவான் (அணித்தலைவர்), ஜேம்ஸ் அன்டர்சன், ஜொனாதன் பேர்ஸ்ரோ, ரவி போப்ரா, ஸ்காட் போர்த்விக், ரிம் பிரெஸ்னன், டேனி பிரிக்ஸ், ஜோஸ் பட்லர், ஜேட் டேர்ன்பாக், ஸ்டீவன் பின், அலெக்ஸ் ஹேல்ஸ், கிரெய்க் கீஸ்வெட்டர், சமித் பட்டேல், பென் ஸ்டோக்ஸ். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை ஆங்கில ஆசிரியை திருமதி **திவ்வியா கௌரிவாசன்** அவர்களின் பாசமிகு தந்தை

**முத்தையா சிவலிங்கம்**

அவர்கள் இறைபதம் எய்திய செய்தி அறிந்து மிக்க துயருறுவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.

## WORLD MOVIES - JAFFNA
**Alliance Française de Jaffna**
**in association with**
**International Centre for Ethnic Studies, Colombo**
cordially invites you to a screening of

**THE VISITOR**

**A film by Thomas McCarthy (USA)**

Travelling to New York City in order to attend a conference, a bored college professor finds a young, French-speaking, Palestinian-Senegalese couple living in his aprtment... (2007, 104 min.)

*on*
Saturday 17 September 2011 at 2:00 p.m.
*at*
Alliance Française de Jaffna,
61, Kachcheri-Nallur Road, Jaffna
Free entrance, English.

## மரண அறிவித்தல்கள்



### பொன்னம்பலம் தர்மச்சந்திரன்

யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும், இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம் பலம் தர்மச்சந்திரன் 12.09.2011 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும், கௌசலாதேவியின் அன்புக் கணவரும், தர்மேந்திரா (சுவிஸ்), சுஜீந்திரா (சுவிஸ்), கஜேந்திரா (பிரித்தானியா), லவேந்திரா (பிரித்தானியா), குகனேந்திரா (சுவிஸ்), தர்சினி (நோர்வே), இந்துஜா (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இளங்கோ, சசிகலா, தர்சிகா, ஜினுசா, மேனகா, கானிலா ஆகியோரின் அன்பு மாமனும், மேகா, தருண், ஹரினி, தேனுகா, அபிலயா, கிஷான், அக்சித், வருண் ஆகியோரின் பாசமிகு பேரனும் குமாரசந்திரன் (இலங்கை), விஜயசந்திரன் (இலங்கை), செல்வசந்திரன் (சுவிஸ்), விஜயலக்ஸ்மி (கனடா), தர்மலக்ஸ்மி (இந்தியா), குமார லக்ஸ்மி (இலங்கை), ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுந்தரலிங்கம் (சுவிஸ்), கமலாதேவி (சுவிஸ்), தனபாலசிங்கம் (இலங்கை), பவளராணி (இலங்கை), ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.09.2011) வியாழக்கிழமை இந்தியாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி பாக்கியம் சுப்பிரமணியம்



சங்குவேலியைப் பிறப்பிடமாகவும், டச்சு வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் சுப்பிரமணியம் நேற்று (15.09.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் மனைவியும், சுந்தரலிங்கம், காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் பீதாம்பரம், காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மற்றும் நகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும், விமலாதேவி, திலகவதி, தனலக்சுமி, மதியழகன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய், பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆட்டோக்கள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள எந்தவித பழுது மற்ற ஆட்டோக்கள் விற்பனைக்கு உண்டு.

T.P.- 0774220713, 021 2221910
110, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

## வேலை வாய்ப்பு

கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு சந்தைப்படுத்தல் துறையில் வேலை செய்வதற்கு ஆர்வம் உள்ளவர்கள் தேவை.

தொலைபேசி - **0777740735**
**0717275294**

## தேவை

அசைவ உணவகத்துக்கு சமையலாளர், ரொட்டி தயாரிப்பவர் உடன் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு - **லிங்கம் கபே,**
**வைத்தியசாலை அருகில், கண்டி வீதி, சாவகச்சேரி.**

## காணி விற்பனைக்கு

**சங்கானை, மல்லாகம் சந்தியில் இருந்து (மல்லாகம் வீதியில்) 100 மீற்றர் தூரத்தில் 3 பரப்பு குடியிருப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

தொடர்புகளுக்கு: 0727750023
0778696462 (8079)

## மரண அறிவித்தல்



### பரமசாமி பரமலிங்கம்

*(ஓய்வுபெற்ற தலைமை காசாளர், இலங்கை புகையிரத திணைக்களம்)*

யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பையும், சுவிசையும் வதிவிடமாகக் கொண்ட பரமசாமி பரமலிங்கம் (ஓய்வுபெற்ற தலைமை காசாளர், இலங்கை புகையிரத திணைக்களம்) 12.09.2011 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமசாமி (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், பொது வேலைகள் திணைக்களம்) - சிவபாக்கியம் தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற திருமதி பரமேஸ்வரி பரமலிங்கத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ். நாவலர் மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும் விஜித்தா (ஆஸ்திரேலியா), சுஜித்தா (சுவிஸ்), நர்மதா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சரஸ்வதி, பரராஜசிங்கம் (சித்தப்பா, வட்டுக்கோட்டை), பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் விமலசிறி (ஆஸ்திரேலியா), மகாதேவன் (சுவிஸ்), சிவேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் பாலரமணன் (ஆஸ்திரேலியா), சந்துரு (ஆஸ்திரேலியா), பிரதீஸ் (ஆஸ்திரேலியா), விதுஷியா (சுவிஸ்), ரேணுசா (சுவிஸ்), சாய்ஸ்ரூபன் (கனடா), சாய்ஷ்வனி (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும், பத்மலதா, Dr.சக்திராஜின் அன்பு மாமனும் யசோதாவின் பாசமிகு பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.09.2011 செவ்வாய்க்கிழமை பி.ப. 4.00 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கல்கிசை இந்து மயானத்தில் இடம்பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் ஒழுங்கை,
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
ப. பரராஜசிங்கம் (தம்பி),
ப. பத்மலதா (மருமகள்)

## வீடு வாடகைக்கு

**27/10, ஈச்சமோட்டை லேன், யாழ்.**
**சுண்டுக்குளியில் இணைந்த குளியலறை மற்றும் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு**
T.P. 077 9691363 (8078) (45)

## வீடு வாடகைக்கு

**யாழ். கந்தர்மடம், பழம் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.**
**தொடர்பு: 0776303677**

## தவறிவிட்டது

அல்வாய் கிழக்கு, அத்தாய் என்னும் முகவரியில் வசிக்கும் பரமேஸ்வரன் நிரோஷன் என்பவரது தேசிய அடையாள அட்டை (870152132V) மற்றும் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் போன்றவை அல்லைப்பிட்டிக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில் தவறவிடப்பட்டது. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் 0212229374/ 0777206513 தொடர்பு கொள்ளவும்.

## தேருநர் இடாப்புக்களின் திருத்தம் -2011

1980 இன் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க வருடாந்தம் மேற்கொள்ளப்பட வேண்டிய தேருநர் இடாப்புக்களின் திருத்தப் பணிகளுக்காக 2011 ஆம் ஆண்டில் வாக்காளர்களை கணக்கெடுக்கும் பொருட்டு ஆள்கள் வதியும் அனைத்து வீடுகளுக்கும் 2011 ஜூன் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து பகிர்ந்தளிக்கப்பட்ட வாக்காளர்களை கணக்கெடுக்கும் "பிசி" படிவங்களை கிராம அலுவலர்கள் / விசேஷ கணக்கெடுக்கும் அலுவலர்கள் மூலமாக திரும்பச் சேகரிக்கும் நடவடிக்கைகள் 2011 செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி முடிவடையவுள்ளன.

எவரேனுமொரு வாக்காளர் வதிகின்ற வீட்டுக்கான தேருநர்களைக் கணக்கெடுக்கும் "பிசி" படிவமொன்று கிடைக்கப்பெற்றிருந்தும் 2011 செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி வரையில் அந்த படிவத்தை பூர்த்தி செய்து கையளிக்க முடியாதுபோயிருப்பின் அதை உரியவாறு பூர்த்தி செய்து தான் வதியும் மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவிப் பதிவு அலுவலருக்கு கூடிய விரைவில் தபால் மூலமாக அனுப்பி வைக்கவோ அல்லது நேரில் கொண்டு வந்து கையளிக்கவோ முடியுமென தயவுடன் அறிவித்துக்கொள்கின்றேன்.

தேர்தல்கள் செயலகம்,
இராஜகிரிய,
2011 செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

## பதவி வெற்றிடம்

### கணக்காளர்

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு 35 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட பட்டயக் கணக்காளர் அல்லது CIMA பட்டம் பெற்ற ஆங்கில தேர்ச்சி மற்றும் பூரண கணினியறிவுடன் மூன்றுவருட முன்னனுபவம் பெற்றவர்கள் சுயவிவரக் கோவையுடன் எதிர்வரும் 17.09.2011 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு **இலக்கம் 207, கே.கே.எஸ். வீதி, சுன்னாகத்தில் அமைந்துள்ள கதிரேசம்பிள்ளை கமலாதேவி எரிபொருள் நிரப்பு** நிலையத்துக்கு நேரில் சமூகம் தரவும்.

**- நிர்வாகத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு சிவப்பிரகாசம்



**(ஓய்வுபெற்ற பொது முகாமையாளர், யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கம்)**

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், 20/3, சுவாமியார் லேன், கொழும்புத் துறையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சிவப்பிரகாசம் நேற்று (15.09.2011) வியாழக் கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், சத்திரா, கோதை, பிரணவன் (Kevilton Electrical Product (Pvt) Ltd.) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரதீபன், இராதேயன், வர்ஷினி ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*20/3, சுவாமியார் லேன்,*
*கொழும்புத்துறை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
சி.பிரணவன் (மகன்).

### வல்லிபுரம் கந்தையா



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கந்தையா நேற்றுமுன்தினம் (14.09.2011) புதன்கிழமை இரவு இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - குண்டுமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா - மகிழம்மா தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சிறிகாந்தன் (பிரான்ஸ்), ஜெயகாந்தன் (பிரான்ஸ்) ஜீவகாந்தன் (சிறி ஜெயந்தி நகை மாளிகை), நிமல்காந்தன் (கந்தையா & பரமேஸ்வரி நகை மாளிகை), துஷியந்தி (லண்டன்), ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகசுதா, அனிற்றாரஜனி, துஷி, றொபின்சன் (லண்டன்) அமலன் (லண்டன்) ஆகியோரின் மாமனும் பௌசிகன், பிரவின்சன் (லண்டன்) ஆகியோரின் பேரனும் சோதி (கொழும்பு), மஞ்சுளா (பிரான்ஸ்), துரை (பிரான்ஸ்), இரத்தினம் (வவுனியா) ஆகியோரின் சகோதரனும், கருணாகரன் (கொழும்பு), புலேந்திரராஜா (பிரான்ஸ்), காலஞ்சென்ற கங்கா (வவுனியா), மற்றும் கந்தையா (வவுனியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறிஜெயந்தி நகை மாளிகை,*
*இல. 74/1, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்கும் விவகாரம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் ஜனாதிபதி முக்கியமாக ஆராயவிருக்கிறார். இந்த அதிகாரங்கள் பகிரப்படாமல் இருப்பது குறித்து முக்கியமான நாடுகள் சில அதிருப்தியை வெளியிட்டுள்ளதால் இந்த விடயம் ஆராயப்படவுள்ளதாகத் தெரிகிறது.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்திற்குப் புறப்பட முன்னர் ஜனாதிபதி, கொழும்பிலுள்ள மேற்குலக நாடுகளின் தூதுவர்களையும் சந்திக்கவுள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது. (த-சி)

## தமிழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, கெக்கிராவை முஸ்லிம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் மொஹமட் நலீம் ஷாகி அஹமட் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

அத்துடன், அகில இலங்கை ரீதியில் தமிழ்மொழி மூலம் சித்தி பெற்ற மூன்று மாணவர்கள், பெறுபேறுகளில் முன்னிலை வகிக்கும் முதல் 10 மாணவர்களில் இடம்பெற்றுள்ளனர்.

அதற்கமைய, முல்லைத்தீவு விசுவமடு நெத்தலியாறு தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த பரமேஸ்வரன் சேதுராகவன் 194 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தைப் பிடித்துள்ளார்.

குருநாகல், பொல்க்ஹவெல அல்-இக்ஸா முஸ்லிம் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி மொஹமட் மீரா சாஹித் சைனப் சுல்தானா மற்றும் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவி சர்வானந்தன் சர்மிளா ஆகியோர் 193 புள்ளிகளைப் பெற்று 6ஆம் இடத்தைப் பிடித்துள்ளனர்.

அத்துடன், நிந்தவூர் அல் - அஷ்ரவ் முஸ்லிம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் அப்துல் ரஹீம் மொஹமட் முர்ஷீத் அத்தாவ் மற்றும் யாழ். ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவி ரமேஷ் நிதூர்ஷிகா ஆகியோர் 192 புள்ளிகளைப் பெற்று 10ஆம் இடத்தையும் பிடித்துள்ளனர்.

பாடசாலையில் கல்விபயின்றும், பத்திரிகையில் வெளிவந்த புலமைப் பரிசில் தொடர்பான மாதிரி வினாக்களின் பயிற்சிகளை கொண்டதாலுமே நான் இந்த முறை நடைபெற்ற 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைய முடிந்தது. எனது வகுப்பாசிரியை றஜிதா சிறிதரன் எனக்கு அரவணைப்புடன் கல்வி புகட்டினார். அதிபர் அக்கினீஸ்வரன் கண்காணிப்புடன் எனது பெற்றோர், மாமன்மார் அளித்த ஊக்கத்தினாலுமே இந்த வெற்றியைப் பெற முடிந்தது'' என்றார் முல்லைத்தீவு நெத்தலியாறு தமிழ்வித்தியாலய மாணவன் சேதுராகவன்.

அகில இலங்கை ரீதியில் தமிழ்மொழி மூலம் 2 ஆம் இடத்தைப் பெற்று சித்தியடைந்தார் இவர்.

சேதுராகவன் உதயனுக்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

2009 ஆம் அண்டு ஏப்ரல் மாதமளவில் வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தினால் இடம்பெயர்ந்து சுமார் ஒரு வருட காலம் எனது சொந்த ஊரான கரவெட்டி யார்க்கரு வித்தியாலயத்தில் கல்வி கற்றேன். பின்னர் மீண்டும் நெத்திலியாறு தமிழ் வித்தியாலயத்தில் கற்று வந்தேன். வகுப்பாசிரியரின் கற்பித்தலுடன் பத்திரிகையில் வெளிவந்த மாதிரி வினாத்தாள்களைப் படித்தமையால் இந்த வெற்றியைப் பெற முடிந்தது. நான் எந்தத் தனியார் வகுப்புக்கும் செல்லவில்லை. தொடர்ந்து நான் விசுவமடு மகாவித்தியாலயத்திலேயே கல்வி கற்க விரும்புகிறேன். எனது உயர் இலட்சியமாக பொறியியலாளராக வருவதே எனது ஆசை என்றார். (த-4-236)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தசாமி காமாட்சியம்மா



நல்லூர் வடக்கு, பண்டாரக்குளம் மேற்கு வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி காமாட்சியம்மா (யோகம்மா) நேற்று (15.09.2011) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*க.தர்மராஜா [தருமண்ணை -நல்லூர்],*
*க.பாக்கியராஜா [விஜயன் -நல்லூர்]*
*மகன்மார்.*

### பிரான்சிஸ்கா யோசவ்

(இளைப்பாறிய ஆசிரியை - யா/ சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை)



இல.21, மவுண்ட் கார்மேல் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரான்சிஸ்கா யோசவ் (இளைப்பாறிய ஆசிரியை யா/சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை) நேற்று (15.09.2011) காலமாகிவிட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (17.09.2011) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெற்று யாழ்.மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.21, மவுண்ட் கார்மேல் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
குடும்பத்தினர்.

### கோபாலசுந்தரம் கணேசமூர்த்தி (பத்தர்)



இமையாணன் மேற்கு, சந்தை வீதி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலசுந்தரம் கணேசமூர்த்தி நேற்று (15.09.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2011) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இமையாணன் மேற்கு,*
*சந்தை வீதி, உடுப்பிட்டி.*

*தகவல்:*
குடும்பத்தினர்.

## கைதடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெளிநாட்டில் இருக்கும் தனது உறவினரை விரும்பித் திருமணம் செய்ய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்த நேரத்திலேயே இவர் காணாமல் போயுள்ளதாகவும் இவர் கடத்தப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாகப் பெற்றோரால் சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சாவகச்சேரி பொலிஸார் தீவிர விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். (த-288)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் குறித்து சர்வதேச சமூகத்தினருடன் கிரமமான தொடர்பாடல்களை ஏற்படுத்தாமை, அவர்களின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் என்பவையே அரசின் இந்தத் தீர்மானத்துக்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இன்னும் சில வாரங்களுக்குள் இவ்வாறான மாற்றங்கள் இடம்பெறலாமெனக் கூறப்படுகிறது.

இதேவேளை, வெளிநாட்டுச் சேவையிலுள்ள இலங்கை இராஜதந்திரிகளின் செயற்பாடுகள் குறித்து நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடுமையான அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறார்.

வெளிநாடுகளிலுள்ள இலங்கை இராஜதந்திரிமார் தான்தோன்றித்தனமான முறையில் செயற்படுவதால் கொழும்பின் இராஜதந்திர வரைமுறைகள் (Protocol) அப்பட்டமாக மீறப்படுவதாக இங்கு குறிப்பிட்ட ஜனாதிபதி அனைத்து இராஜதந்திரிகளையும் கொழும்புக்கு அழைத்துக்கடும் அறிவுறுத்தல்களை வழங்குமாறு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸை பணித்திருக்கிறார்.

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று தோண்டிக்கொண்டிருந்த வேளையில் மேற்படி மனித எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.இதனையடுத்து குறித்த இடத்துக்கு வருகைதந்த திருகோணமலை நீதிமன்ற நீதிவான் யூ.எல்.ஏ. அஸ்வர், மீட்கப்பட்ட எச்சங்களைப் பரிசோதனைக்கு உட்படுத்தும் பொருட்டு க்ண்டி, பேராதனை வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருகோணமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-சி)

### தேவை

ரமணன் கட்டடப் பொருள் விற்பனை நிலையத்துக்கு பெண் கணக்காளர் தேவை.
தொடர்பு: 0212229296
K.K.S. றோட்,
தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.
அண்மையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

### பணியாளர் தேவை

எமது நிறுவனத்துக்கு கீழ் குறிப்பிடப்படும் பணி நிலைகளுக்கு ஆள்கள் தேவை. தகுதியானவர்கள் கீழ்குறிப்பிடப்படும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

1) *சாரதிகள்*
2) *பண வசூலிப்பாளர்கள்*
3) *உதவியாளர்கள்*
4) *களஞ்சியப் பொறுப்பாளர்*

தொடர்புகளுக்கு: சிவா பிறதர்ஸ்,
205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212225688 / 0212225497



### சிவபார்வதி ஜோதிட நிலையம்

பண்டித்- மஞ்சுநாத சுவாமி
தொ.பே.இல: 0778949044



வம்சாவளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கப் போவது யாவையும் தெரிவிப்பதுடன் பரிகாரமும் செய்து கொடுப்பார்.

Skype Contect- PARAMASHIVAN 1
**SANJAYA HOTEL** 414, Hospital Road, Jaffna.
(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)
நேரம்: காலை 7 மணி முதல் மாலை 7.30 மணி வரை கட்டணம் 101/=

### வேலையாள்கள் தேவை

அறிவொளி போன் சொப்



- கணினி இயக்குநர்
- கணக்காளர்
- விற்பனையாளர்

எமது நிறுவனத்துக்கு மேற்கூறப்பட்ட பதவி வெற்றிடங்களுக்கு வேலையாள்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்பங்களை சுயவிவரக்கோவையுடன் rubantp@yahoo.com என்னும் முகவரிக்கு மின் அஞ்சல் செய்யவும்.
கணினி அறிவும், பன்மொழிப்புலமையும் மேலதிக [illegible]
தொடர்புகளுக்கு:
தொ.பே.: [illegible]
*மின்னஞ்சல்:* rubantp@yahoo.com

## பேச்சுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதில் பயனில்லை என அறிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுகளிலிருந்து தற்காலிகமாக விலகியது.

இரு சாராரும் தத்தமது பக்கங்களின் நியாயங்களை எடுத்துரைத்து அனல் பறக்கும் அறிக்கைகளை விடுத்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகள் அமைப்பு போன்று செயற்படுகின்றது என அரச தரப்பு குற்றம் சுமத்தியிருந்தது. அதேபோன்று, முன்னேற்றம் எதுவுமின்றி பேச்சைத் தொடர்வதில் என்ன பயன் என்று கூட்டமைப்பு சுட்டிக்காட்டியிருந்தது.

இந்நிலையில், இலங்கைக்கு விஜயம் செய்த தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக் முறிவடைந்துள்ள பேச்சுகளைத் தொடர்வதற்கு இருதரப்பும் இணங்கியுள்ளது எனத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக கேட்கப்பட்டபோதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது கோரிக்கைகளுக்கு எழுத்து மூலம் பதிலளிக்கத் தயார் என அரச தரப்பே முதலில் எமக்கு உறுதியளித்தது. அவ்வாறு உறுதியளித்தபின்னர் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம்.எனினும், தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட பேச்சுகளை விரைவில் ஆரம்பிப்பதற்கான சாத்தியம் உள்ளது. அது நாளையாகவும் இருக்கலாம்.(அதாவது இன்று)எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் பேச்சுகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு நாம் இணங்கினோம் என்பதையும் விரைவில் அறியத்தருவோம் - என்றார்.

ஆட்சி அதிகாரமுறைமை, மத்திய மாநில அரசுக்கிடையிலான விடயதானம், செயற்பாடுகள் மற்றும் வரி - நிதி அதிகாரங்கள் ஆகிய மூன்று விடயங்களே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளாகும் -என்றார். (த-சி)

### நூற்றாண்டை நோக்கிய வாழ்த்துக்கள்



சிவமயம்
சிவத்தமிழ்ப்பண்பாட்டாளர், முது பெரும் புலவர், கலாபூஷணம், புலவர் மணி, இணுவையூர், அளவையூர் போற்றும் பேராசான்,

**திரு. வை.க. சிற்றம்பலம்**

ஐயாவின் பிறந்த நாளில், சிவத்தமிழ்ப் புகழோடு நூற்றாண்டினை வென்றிட, வணங்கி வாழ்த்துகின்றோம்.

கொக்குவில். குடும்பத்தினர்.

### முல்லைக்குப் பெருமை சேர்த்த பிள்ளைக்கு வாழ்த்துக்கள்



**பரமேஸ்வரன் சேதுராகவன்**

தேசியமட்டம் இரண்டாம் இடம்
194 புள்ளிகள்
தரம் 5 புலமைப் பரிசில் தேர்வு - 2011

(சி-3964)

வாழ்த்தும் செ.செல்வராஜா
மு.ன்னாள் ஆரம்பக் கல்வி, உ.க.ப, முல்லைத்தீவு.

### காணி தேவை

15-20 பரப்பளவுள்ள விசாலமான காணி ஒன்று தேவை.
தொடர்புகளுக்கு - 0779596815
❄ *K.K.S. வீதி*
❄ *பலாலி வீதி*
❄ *இராச வீதி*
போன்ற பிரதான வீதிகளில் இருந்து 300 Mற்குள் உள்ள காணிகள் விரும்பத்தக்கது.

### கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்டச் செயலகத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றும் தி.மகேஸ்வரகுமார் அவர்களின் அன்புத் தாய்

திருமதி **திருநாவுக்கரசு கண்ணகைப்பிள்ளை**

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம். (சி-3963) ஊழியர் நலன்புரி கழகம்.

### கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் கிராம அபிவிருத்தி திணைக்கள நிகழ்ச்சித்திட்ட உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி க.தவமணி அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் க. ஆழ்வாப்பிள்ளை**

கடந்த (09.09.2011) வெள்ளிக்கிழமை காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
பருத்தித்துறை. (8185)
பிரதேச செயலாளரும், ஊழியர்களும்,
ஊழியர் நலன்புரி சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளியற் கல்லூரி

**யாழ்.நகர் இணுவில்**
*(இரு இடங்களிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம்)*
குறுகிய காலத்தில் எழுத, வாசிக்க, பேச
Spoken English with Grammar
Lectures by: Mr.K.NISHANTHAN (Dip.in.Eng)
*ஆரம்பம்:- (17.09.2011) சனி
*யாழ் நகரில்:- பிரிவு I - at 8.00 am (sat, sun)
பிரிவு II- at 2.pm (sat, sun)
*இணுவிலில்: at 12.00pm (sat, sun)
*பாரதி - சித்தன்கேணியில் பிரிவு I-at 3.00 pm (sat, sun)
பிரிவுII-at 3.00 (Thurs, Fri)

## அமைச்சர் பந்துல யாழ். வருகிறார்

வடமாகாணத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடுவதற்காக கல்வி அமைச்சர் பந்துலகுணவர்த்தன எதிர்வரும் செவ்வாய்க்கிழமை யாழ்ப் பாணம் வருகை தரவுள்ளார்.

ஆரம்பப்பாடசாலைகள்திட்டத்தின்கீழான அபிவிருத்தி, தேசியப் பாடசாலைகள் சம்பந்தமான விடயங்கள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரி ஆகியவற்றின் செயற்பாடுகள் தொடர்பாக இதன்போது கலந் துரையாடப் படவுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் தெரிவித்தார். அன்றைய தினம் யாழ். பொது நூலகத்தில் மு.ப.10 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.(த-4)

## SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE

A/L எழுதிய மாணவர்கள், உயர்கல்வி மாணவர்கள், தனியார் அலுவலர்களுக்கான
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் - 17.09.2011

| | |
|---|---|
| பிரிவு 1 : காலை 8.00 - 10.00 | பிரிவு 2 : காலை 10.00 - 12.00 |
| பிரிவு 3 : மாலை 2.00 - 4.00 | பிரிவு 4 : மாலை 4.00 - 6.00 |

ஆரம்ப வகுப்பு 17.09.2011 - மதியம் 12.30 - 2.00
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

## பொருளியல்

NB. கஜீதரன்
A/L - 2012 (II)
புதிய தேர்ச்சி : 02
கேள்வி, நிரம்பல் கோட்பாடு

| NEC | BPI |
|---|---|
| (யாழ்நகர்) | (குருநகர்) |

* வாரத்தில் 5 வகுப்புக்கள்
* நேர அட்டவணை அலுவலகத்தில்.

## PHYSICS GROUP CLASS

K.Selvan B.Sc (Hons)
மீட்டல் வினாவிடை வகுப்பு
(பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு)
ஆரம்பம்:- 17.09.2011 (சனி - 3.30pm)
சனி, ஞாயிறு (3.30 - 5.00 pm)
A/L - 2012, A/L - 2013 Tamil, English மொழிமூல வகுப்புகள் நடைபெறுகின்றது.
T.P- 0772247596 புகையிரத வீதி, அரசடி ரோட், கந்தர்மடம்.

## மீண்டும் சாதனை படைத்தது வெற்றித்தேர்வு

2011-தரம்:5 புலமைப்பரிசில் இறுதிப் பரீட்சையில் ஏராளமான வினாக்களை மாதிரி வினாக்களாக வெளியிட்ட பெருமை வெற்றித்தேர்வுக்கு மட்டுமே உரியது.
தொடர்சாதனை ஆசிரியர்களின் உருவாக்கத்தில்.. தோற்றியோரைக் கேளுங்கள்
அகில இலங்கையில் மாணவர்களை முதல் நிலைக்குக் கொண்டுவந்த, விசேட அங்கீகாரத்துடன் முதற்தர வினாப்பத்திரமான வெற்றித்தேர்வு தயார் நிலையில். தேவையான பாடசாலைகள் உடன் தொடர்பு கொள்க. பாடசாலைகளுக்கும், புத்தகசாலைகளுக்கும் 2012இல் தனித்தனியான வினாப்பத்திரங்கள்.
பாடசாலைகளுக்கு தரம்:5ற்கு 20 பத்திரங்கள். தரம்:4ற்கு 15 பத்திரங்கள்
2011-தரம்:4ற்கு, 7ம், 8ம் வெற்றித்தேர்வு வந்துவிட்டது. இன்னும் 7தேர்வுவரும்
மேலதிக விபரங்களுக்கு எமது பிராந்திய இணைப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
யாழ்ப்பாணம்-0212229016,0775388471,0773126807. வடமராட்சி-0212263815.
வலிகாமம்-0773946744. தென்மராட்சி-0778693352. தீவகம்-0775388471.
கிளிநொச்சி,முல்லைத்தீவு,துணுக்காய்,வவுனியா,மன்னார்-0775388471,0773126807.
பாடசாலைகளுக்கு விசேட கழிவுடன், ஆசிரியர் பிரதி இலவசம். திருத்தமான விடைகளுடன் இலவசக் கையேடும் வழங்கப்படும்

## மாபெரும் விலைத் தள்ளுபடி

(இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில்)

| | | |
|---|---|---|
| இரும்புக் கட்டில் | ~~6660~~ | 4250 |
| மரக் கட்டில் | ~~7250~~ | 6000 |
| ஸ்ரீல் அலுமாரி | ~~13500~~ | 11250 |
| செற்றி செற் | ~~27000~~ | 22000 |

(மெத்தை(Arpico), கணனி மேசை, கணனி கதிரை, றெசின்ரேசின், சோக்கேஸ், அயன்ரேபிள், பிளாஸ்ரிக் கதிரைகள், T.V. ஸ்ராண்ட், அலுவலக மேசை, பஞ்சு மெத்தை)



தொடர்புகளுக்கு- 0773583879, 0212227892

## ENGLISH CLASSES

யாவருக்குமான Spoken and Grammar அடிப்படையில் இருந்து எழுத, வாசிக்க, கதைக்க மிகவும் இலகுவான கற்பித்தல் மூலம் குழுவாக, தனியாகவோ வீடுகளுக்கு வந்து கற்பித்து தரப்படும்.
தொடர்பு: 0777110523

## NIBM

அடுத்த பிரிவுகளுக்கான பதிவுகள் நடைபெறுகிறது
அரச சான்றிதழுடனான கற்கை நெறிகள்
**Certificate in Compueter Science**
(Week ends 9.00 am-12.00, Week day- Full)
**Certificate in English Language**
(Week ends 9.00 am - 12.00, Week day- Full)
&
**Certificate in Business Management**
(Thursday, Friday 9.00am-12.00)
077 071 6974 , 021 222 0360
No-40 College Road , Jaffna

## A GENERAL ENGLISH COURSE

ஆங்கிலம் கற்க ஆர்வமுடையவர்களுக்கு:
பூரண கற்கைநெறி
சகலருக்குமுரியது
சகல பொதுப் பரீட்சைக்குமுரியது
Total immersion course
உச்சரிப்புடன் பேச, வாசிக்க, எழுத, இலக்கண, இலக்கியமயமானது.
ஆரம்பம்: 18.09.2011 முற்பகல் 10.00 மணி
ஆறு மாத கற்கைநெறி
வாரத்தில் இரு நாள்கள் : 04 மணித்தியாலம்
தொடர்பு:- நிர்வாகி - ஆசிரியர்: த.நடபஞ்சாட்சரம்
NEW SCIENCE HALL
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## AFTER A/L? WHAT NEXT?

STUDY IN UK
IELTS இன்றி
Spot Admission & Seminar
இலவச கருத்தரங்கும் உடனடி அனுமதிகளும்
Jaffna

| | |
|---|---|
| காலம் | 18th September 2011: 10.00a.m.-1.00p.m. |
| இடம் | Exponet -Jaffna Branch<br>197,Arasady Road,Jaffna<br>(Between Kantharmadam Junction & Jaffna Hindu Ladies College) |



உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்
பதிவுகளுக்கு | Colombo - 011 7 555511, Jaffna - 021 7538395
Hotline - 0117 555514, Fax - 0117 555517

EXPONET Overseas Consultants (Group of Exponet (Pvt) Ltd.)
Head Office : 379 - 1/2, Galle Road, Colombo 06.
Jaffna Branch : 197,Arasady Road, Jaffna.
London Branch : 56, The Gradens Harrow Middlessex, HA1 4EY, UK.
Web: www.expogroup.lk | Email: nimal@expogroup.lk

## முதன் முறையாக வவுனியா மாநகரினிலே

வெளிநாட்டிலும் (Overseas) உள்நாட்டிலும் (Sri Lanka)



மாணவர்களின் உயர் கற்கை நெறிகள் தொடர்பான
மாபெரும் இலவசக் கருத்தரங்கு

நீங்கள் பட்டதாரியாக வேண்டுமா?
சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழ் வேண்டுமா?
சமூகத்திலே நீங்களும் உயர்ந்த நிலைக்கு வரவேண்டுமா?
கவலையை விடுங்கள்
இன்றே எம்மிடம் விரையுங்கள்

### இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கம்

G.C.E. (O/L) & G.C.E. (A/L) இன் பின்னர் மாணவர்கள் எதிர்கால கற்கைநெறிகளை பின்வரும் நிறுவனங்களில் எவ்வாறு தெரிவு செய்வது என்பது தொடர்பாகவும், தேவைப்படும் அடிப்படைத் தகமைகள் தொடர்பாகவும் முழுமையாக ஆராயப்படும்.

100% விசா உத்தரவாதம்

**வெளிநாடு (Overseas)**
U.K., U.S.A, Canada, Newzealand | பல்கலைக்கழகங்கள் - (Universities) | கல்லூரிகள் - (Colleges)
அனுமதிகள் மற்றும் ஆவணங்கள் தொடர்பான முழுமையான அறிவினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**உள்நாடு (Sri Lanka)**

| | |
|---|---|
| பல்கலைக்கழகம் - University | கல்வியற் கல்லூரி - College of Education |
| திறந்த பல்கலைக்கழகம் Open University | Professional Courses - CIMA, ACCA, AAT, IAB |
| வெளிவாரிப் பட்டப்படிப்புகள் External Degree | இலங்கை சட்டக் கல்லூரி Sri Lanka Law College |
| தொழில் நுட்பக் கல்லூரிகள் Technical College | உயர் தேசிய பட்டப்படிப்பு H.N.D |
| தொழில்சார் பயிற்சி நிலையங்கள் Vocational Training Centres | தனியார் நிலைய பயிற்சி Private Institution Courses |
| | ஆங்கிலப் பயிற்சி நெறிகள் (IELTS) Language Courses A1, B1, Diploma |

### இடம்: வவுனியா நகரசபை மண்டபம்

காலம்: 18.09.2011 காலை 10.00 மணி தொடக்கம் 01.00 மணிவரை
பிள்ளைகளுடன் பெற்றோரும் சமூகமளிப்பது நன்று

தொடர்புகளுக்கு: **British College of Higher Studies**
Second Floor No. 15, Sirambiyadi Lane, (Off Stanley Road), Jaffna. Tel: 021 222 4550
Head Office: No.30, 1/14, W.A. Silva M.W. Colombo -06 Tel: 0112500207
Hot Line(s): 0777 585913, 0777 222 422, 0714 299 935
No. 13A, Annai Teresa Lane, (Near Rambaikulam Girls Convent) Rambaikulam, Vavuniya. Tel: 024 324 5287

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.